# நரகத்திலிருந்து...



எஸ். அகஸ்தியர்

# நரகத்திலிருந்து...

(மூன்று குறுநாவல்கள்)

எஸ். அகஸ்தியர்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை 600 098.

NARAKATHILIRUNTHU

A Collection of Three Stories in Tamil

by S. Agasthiar

09, RUE GALLERON

75020 PARIS

FRANCE

© நவமணி அகஸ்தியர்

முதல் பதிப்பு ஆகஸ்டு, 1994

Code No. A 769

ISBN : 81 - 234 - 0321 - 6

**விலை : ரூ 20.00**

ஒளி அச்சு:

சிஸ்டெக்

சென்னை - 2

அச்சிட்டோர்:

**கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ்**

60/4, சூரப்ப முதலி தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை – 600 005.

தொலைபேசி : 842910

# பதிப்புரை

முற்போக்குக் கலை இலக்கியம் என்பது மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டது. காலங்காலமாக சமுதாயத்தில் ஆழப்புரையோடியிருக்கும் அவலங்களை வெளிக்கொணர்வது மட்டுமல்லாமல் போலிகளை இனம் காட்டவும் வல்லது. சமூக அவலங்களுக்கான காரணங்களையும் அவற்றிற்கான தீர்வையும் முன்வைக்க வல்லது முற்போக்கு இலக்கியமே!

"முற்போக்கு இலக்கியம் என வரையறை செய்வதற்கே மனிதாபிமானம் அல்லது மனித நேயம்தான் அதன் அடிப்படையான அளவுகோலாக இருக்க வேண்டும்; மனித குலத்துக்கு நன்மை பயக்கும் ஆன்மிக மதிப்புக்களை, மானிட மதிப்புக்களைப் போற்றுபவை எல்லாமே முற்போக்கானவை"

"மனிதாபிமானம் என்பது மனிதப் பிறவியின் மகத்துவத்தை மனிதனின் பேராற்றலை உணர்வதும் ஒப்புக் கொள்வதுமாகும். அதே சமயம் மனிதனுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள் ஆகியவற்றைக் கண்டு கழிவிரக்கம் கொள்வதோடு மட்டும் நின்றுவிடாமல் அவற்றைக் கண்டு கொதித்தெழுகின்ற தார்மிக ஆவேசமும் ஆகும். அது ஒடுக்கப்பட்டவர்களையும் அடக்கப்பட்டவர்களையும் மனிதர்களாக மதித்து அவர்கள்பால் அனுதாபம் கொண்டு அவர்களது துன்பத்தைத் துடைக்க ஒரு துரும்பையாவது எடுத்துப் போட வேண்டுமென்று உணர்வதும் மனிதாபிமானம்தான். பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கும் குருடர்களைக் கண்டு பரிதாபப்படுவதோடு அவர்களுக்குக் கைகொடுத்து அவர்களைக் கரையேற்றவும் அவர்களுக்கு விழி கொடுக்கவும் முனைகின்ற துடிப்பும், துணிவும் செயலாற்றலும் மனிதாபிமானமே" என்று தொ.மு.சி. ரகுநாதன் கூறுவார்.

பாரதிதாசனும்,

"கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியோ உயர்
குணமேவிய தமிழா!" என்பார்.

ஆக, மனிதாபிமானத்தை அடிநாதமாகக் கொண்டு, ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும், அபலைகளாய், ஆதரவற்றவர்களாய், மறியாடுகளாய் உழலும் மக்கள்பால் அன்பும், பாசமும் கொண்டு அவர்களது இன்னல்களுக்குக் காரணமானவர்களை வீழ்த்திப் புறங்காணப் புறப்படும் போர்ப்படையே முற்போக்கு இலக்கியங்கள்!

அந்த வரிசையில் எஸ். அகஸ்தியரின் படைப்புகள் முன்னணியில் நிற்பவை. கதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, உருவகக் கதை போன்ற அனைத்து தமிழ் இலக்கியத்துறைகளின் சகல கூறுகளிலும் எழுதிவரும் எழுத்தாளர், ஈழத்திலும் இந்தியாவிலும் ஐரோப்பிய மேற்குலக நாடுகளிலும் சிந்தனையைக் கிளறும் இவரது கருத்தாழமும் சொல்வளமும் கொண்ட படைப்புகளை ஆவலோடு படித்துத் தெளிந்தோர் பல்லாயிரம். இவரது படைப்புகளில் சில பிற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

இவரது மூன்று குறுநாவல்களைக் கொண்ட 'நரகத்திலிருந்து' என்ற இத்தொகுதியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

***பதிப்பகத்தார்.***

# நேருரை

'உணர்வூறறுருவகச் சித்திரம்' என்ற பரிசோதனை இலக்கிய முகிழ்ப்பின் 'நீ' நூலுக்கான உரை தவிர, ஏனைய நூல்களுக்கு எப்பவும் சுருக்கவுரையே எழுதிவருகிறேன். பல தரப்பட்ட நெருக்கமான எனது வாசகர்களோடுள்ள இலக்கிய சர்ச்சைகளையும் சமகால இலக்கிய நிலையையும் கருதி இதில் சற்று நீளுரை எழுத நேர்கிறது.

சமுதாய சமூகவியல்பற்றி விமர்சிக்கவும், சமுதாய மாற்றத்தினை விசைப்படுத்தவும், யதார்த்த இலக்கிய அழகியலுக்கு வலுச்சேர்க்கவும் வேண்டிய எழுத்துக்கள் பெருமளவில் வணிக மயத்தில் சிக்கிவிட்டன. ஈழத்துத் தேசிய இலக்கியமும் அதன் தனித்துவத்திற்கான போராட்டமுனைப்பும் ஜனநாயகப் பிறழ்வினால் சுமார் பதினைந்து ஆண்டுகளாகச் சற்றுத் தேங்கியதால் சமூகச் சிந்தனையாளர் களுக்குப்பதில், சமூகப் பிரமுகர்கள் தோற்றம் பெற்றனர்.

புரட்சிகரச் சித்தாந்தமின்றியே புரட்சிகரக் கலை இலக்கியம் பற்றிப் பேசவும் இவர்கள் வெட்கப்படுவதில்லை. பிற்போக்கான பழமைவாதப் பஞ்சாங்கத்தூரிகைகளை வரித்துக் கொண்டு உலகத்தின் தலைவிதிக்குமட்டுமல்ல, நம் நாட்டுப் பிரச்சனைக்கும் சோதிடம் கூறவும் இவர்கள் கூச்சப்படுவதில்லை. ஆழ்ந்த சமுதாயப் பார்வையின்றித் தன்படை மாற்றான்படை தெரியாமல் எதற்கும் சும்மா நொட்டை சொல்லும் அரிப்பான்குஞ்சுவிமர்சனர் கண்களில் இவர்கள் படுவதில்லை. மயிரில்லாத முட்டையில் அதையே இடுங்கும் தொழிலாயினர்.

யதார்த்த வாழ்விலிருந்து தமிழ் இனத்தையே "பிறத்தி" யாக்கிய தமிழ்ச்சினிமா நடிகர்களுக்காக வின்ஸர் மடுவம் தொட்டு யாழ் பட்டினம் வரை சூடுபட்டும் வெட்டுக் கொத்துப்பட்டும், உயிர்த்தியாகம் செய்த நமது யாழ்ப்பாணக் "கிடுகுவேலிக்" கலாசாரம் புதிய சிந்தனாவாதிகளால் நிராகரிக்கப்பட்டபின்னும், அதன் தொங்கு சதையானது அகதிகளாக வந்த

ஐரோப்பிய நாடுகளுக்கும் படையெடுத்திருக்கிறது. இந்த விகாரப் பண்டயெடுப்பானது "தமிழ்ச்சினிமா ரசிகர் மன்றம்" என்றதிலிருந்து நடிகை ரசிகர் மன்றம் அமைக்குமளவிற்கு விருத்தி யடைந்திருக்கிறது. கேடுகெட்ட தமிழகத்துச் சினிமாக்கவர்ச்சியின் குடுகுடுப்பைகள் ஈயடிச்சான்காப்பியாக்கப்படுகின்றன. உலக இலக்கியத்திற்கு இது ஒரு சாபக்கேடு என்பதை எவரும் சரியாகக் கணக்கில் எடுக்கவில்லை.

நச்சு இலக்கியத்தின் கட்டுப்பாடற்ற விரசத்திற்குப் பணநாயக வலு வழி திறக்கப்படுவதை இலக்கியவாதி அறிவான். ஒழுங்குமுறையற்ற நாகரிகம் ஈற்றில் எவ்வாறு பழமைவாத அநாகரிகத்திற்கு விரைகின்றதோ அவ்வாறே நிதானமற்ற தீவிர ஆபாச இலக்கியம் சமுதாய அழிவிற்குச் செல்லும். சுரண்டல் அமைப்புக்குத் துணைபோகும் பயங்கரமான இந்தப்பிற்போக்குக் கலாசாரங்களையும் தாண்டியே தாக்கமான சமூகவியற்கலை இலக்கியங்கள் தலைதூக்க வேண்டியுள்ளன.

மானிடம் மரித்த வக்கிர நோக்கு முற்போக்கிலக்கியத்திற்கு முரணானதுமட்டுமன்றி, மிகப் போலியான அருவருக்கத்தக்க சமூகப்பெருச்சாளிகளையே உருவாக்கி விடுகிறது. இதனால் மலினப்படுத்தப்பட்ட இலக்கியங்கள் "அடிகாய்ப்பழங்"களாக வருகின்றன. இதைச் சமூகவியற் சித்தாந்தவாதிகள் மட்டுமன்றி, அவர்களும் அறிவார்கள். இலக்கிய வளம், நவீன உத்திவகை, இலக்கிய நயம், சிருஷ்டித்தன்மை, சொல்லுருவாக்கம், இலக்கிய நடை, செழுமைமிகு ஆரோக்கிய இலக்கியம், மனிதகுலமேம்பாடு என்பனவற்றிற்காக முகிழ்க்கவேண்டிய பேனாக்கள் நலமடிக்கப்பட்டு மக்கி, மங்கி மடிந்து வருகின்றன. சமகால இலக்கியத்திற்குப் பெரும்பாலும் இக்கதிநேர, பிற்போக்குக் கலாசாரங்களின் வணிகப்படையெடுப்பே காரணியாகும்.

நடுநிலைச் சூத்திரத்துள் தற்காப்புக் கவசமிட்டுத் தனக்குத் தான்தானே தனதொன்றைக் கற்பிதம் பண்ணிக்கொண்டு, தானே அதற்குப் பதில் சொல்லும் இலட்சியபூர்வியாகத் தன்னை உருவகித்துத் தன்னாரவாரம் சுயசரித விருத்தாந்தங்களைத் தன்னிச்சைப்படுத்தும் இளம்பிள்ளைவாத நோய் ஒன்றும் பீடித்திருக்கிறது.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே போர்களவாதியாகிவிட்டவன். இயக்கவியல் வரலாறு சேர நோக்கின் சதா காலமும் அவன் போர்க்களத்தில் குதித்திருப்பதை அறியலாம். இதைச் சரிவர மதிப்பிட்டுத்

தெளியாமல் இன்றுதான் புதிதாகப் போர்முழக்கம் கேட்பதாகச் சொல்லி, ஒரு பிரமிப்பையூட்டும் பரபரப்பான சூழலின் நடப்பியல் மயப்படுத்தப்படும் போக்கினையே போர்க்கால இலக்கியம் எனப் பத்திரிகைச் செய்திகள்போல் வசன வாசாப்பு எழுதப்படுகிறது.

போர்க்கால இலக்கியமும் அது சார்ந்த இயக்கமும் உலகெங்கும் வியாபித்துத் தொடர்ந்து அழுத்தம் பெற்றே வருகிறது. அதன் உத்திமுறைகள் காலத்திற்கொப்ப மாற்றம் கொள்கின்றன. சமூக மாற்றமானது போர்முறையையும் மாற்றிவிடுகிறது. ஒன்றினது மாற்றம் இன்னொன்றின் வடிவமாக உருவெடுப்பது இயல்பு. கலை இலக்கியம் நடுநிலைவாதமாகவோ சுயவாதமாகவே இருப்பதில்லை. எப்போதும் சார்புவாதமாகவே வந்திருக்கிறது. சமுதாயத்தில் தோன்றிய வர்க்கமுரண்பாடுகள் ஒழியும்வரை போர்க்காலம் ஓயப்போவதில்லை. உலக முற்போக்குச் சிந்தனாவாதிகளால் சோஷலிஸவாத இலக்கியம் என்று முகிழ்த்த கோட்பாடு, பிற்போக்குக்குழப்புவாதிகளால் கற்பனைவாதசோஷலிஸ இலக்கியக் கோட்பாட்டில்திரிபட்டு பின் சோஷலிஸ யதார்த்தவாத இலக்கியம் என்னும் கோட்பாடாக மாற்றங்கொள்ளுதலுக்கு இப்பகைப்புலனே வழி சமைத்தது. இது இன்று ஜனநாயக சமூகவியற் சோஷலிஸ யதார்த்தவாத இலக்கியம் எனப் பிறழ்வு கொண்டுள்ளது.

கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் அனைத்துமே சமுதாய முரண்பாடுகளினால் ஏதோ ஒரு சார்பினைக் கொள்வன. இது தவிர்ந்த சுயம்புவான, பக்கம் சாராத, கட்சி கட்டாத, இயக்கம் சாராத, அரசியல் கலக்காத, தானும் தன்பாடுமான, கலை கலைக்காய், நடுநிலைவாத என்கின்ற இலக்கியம் எதுவுமே ஒருபோதும் இருந்ததோ இருப்பதோ இல்லை. சகல கலைகளும் மக்களுக்காக, மக்களுக்கு, மக்கள் அளிப்பவையே. கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும் என்ற நூலில் இதுபற்றி விளக்கியுள்ளேன்.

உழைக்கும் வர்க்க மக்கள் பண்பாட்டுக் கலாசாரம் இல்லாமல் பொதுமக்கள் கலாசாரப்பண்பாடுபற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. மனிதனை மனிதன் ஏய்த்துச் சுரண்டிப் பிழைக்கும் கொடிய அமைப்பிலிருந்து மக்களை விடுவிப்பது தொழிலாள விவசாயப் பாட்டாளி மக்கள் கலாசாரமேயன்றி சூன்ய வழிபாட்டுச் சம்பிரதாயங்களல்ல. மதங்களின் அடிப்படை நோக்கங்களுக்கு மாறானவர்களே பெருமளவில் மதங்களைச் சார்ந்தவர்களாயிருப்பதால் இது மேலும் சிக்கலாயுள்ளது. இந்நிலையில்

சிந்தனைப் பரிமாற்றம் பற்றியும் சும்மா பேசிக்கொள்ளப்படுகிறது. ஆனால், புரட்சிகரமான சித்தாந்தக் கலாசாரம் இல்லாமல் கலை இலக்கிய இயக்கம் அதன் சீரிய பங்கை ஒருபோதும் செலுத்தவே முடியாது.

இதுவாக இந்தவகையாறாக்களாகக் கருத்துருவம் பெறுபவையே எனது இலக்கியங்கள்: வேதம் ஓதும் பிசாசுகள் அல்ல என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

நெடுங்கால இயக்க இயல் இலக்கிய அனுபவங்கள், அவற்றின் வாயிலாக மக்களிடமிருந்து நான் கற்றுக்கொண்ட படிப்பினைகள், ஓயாத பிற சுய விமர்சனங்கள் என்பன என் இலக்கியப் பிரவாகத்திற்குச் செப்பமாக வழி சமைத்துள்ளன. மக்களிடமிருந்து கற்றுணரும் தாக்கமும் அதன் விளைவான இலக்கிய முறைமைகளும் என்னை ஆகர்ஷித்துக்கொள்வதுபோலவே, எனது படைப்புகளில் ஆகர்ஷிக்கப்பட்ட பலதரத்து வாசகர்கள் விமர்சகர்கள் பரந்துள்ளனர். இது எனக்குப் பரவசமூட்டுகினும், இலக்கிய உயிர்ப்பின் இந்தப் பிணைப்பு எனக்கும் வாசகர்களுக்குமிடையில் விமர்சனவாயிலாகவும் திகழ்வதையே விரும்புகிறேன். விமர்சனம் பரிமாற்றலுக்கு இடமளிக்கிறதாக அமைதல் வேண்டும்.

முப்பிரிபு உத்திவகைகளில் எழுதிய மூன்று படைப்புகள் நூலில் உண்டு. இந்தக் கதைகள் பற்றி இதில் ஒன்றும் சொல்லப்போவதில்லை. அந்த உரிமை என்னை விட வாசகர்களுக்கிருப்பதால் அவர்கள் சிந்தனைக்கே விடுகிறேன்.

வீரகேசரி யில் பிரசுரமான "நரகத்திலிருந்து" குறுநாவல் அதன் தேவை கருதி "சஞ்சீவி"யில் ஒரு குப்பி விளக்கு எரிகிறது என்ற தலைப்பில் பிரசுரஞ்செய்யப்பட்டது. கோடீஸ்வரப்பிரபுவுடன் ஒரு சந்திப்பு 1990ல் மருத்துவமனையில் நோய் வாய்ப்பட்டிருந்தபோது தீக்ஷண்யன் என்ற புனைபெயரில் ஓசையில் எழுதியது. சயனத்தில் தோன்றியவர் அந்தக் கோடீஸ்வரர்.

இலக்கிய நேசிப்பின் தூய சுவடு பதிய ஆரவாரமின்றியே குறுகிய காலத்தில் இந் நூலை வெளியிடும் **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்** நிறுவனத்தாரும் பிரசுரித்த பத்திரையாசிரியர்களும் எனதன்பிற்குப் பாத்திரமானவர்கள். என் எழுத்து எப்பவும் உலக மக்களோடு.

***எஸ். அகஸ்தியர்***

## நினைவூற்று:

மரணத்தினின்று என்னை ரட்சித்து இயங்க வைத்த பாரிஸ் மருத்துவமனை டாக்டர்கள், டாக்டர் ஜேம்ஸ், நேர்ஸஸ் என் துணைவியார், பிள்ளைகளுக்கு மழலை மொழிகளால் கனிவிக்கும் என் பேரச் செல்வங்கள் ஜனகராஜ், ரேணுகா, சுஜீவா, ராகுல்ராஜ், தீக்ஷனா ஐவருக்கும் இந்நூல் அர்ச்சிப்பு.

**எஸ். ஏ.**

## *காணிக்கை*

சாம்ராஜ்ய
முதலாளித்வ
ஏகாதிபத்திய
பாஜிஸ
நாஜிஸ
யுத்த சனாதனிகளின்
சுரண்டலுக்கும்
ஆக்கிரமிப்புக்கும்
எதிராகப்
போராடிய
போராடுகிற
விறல்மிகு
மேன்மைதகு
உலகத்
தொழிலாளர்களுக்கு

***எஸ்.ஏ.***

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | வேர் | 1 |
| 2. | கோடீஸ்வரப் பிரபுவுடன் ஒரு சந்திப்பு | 33 |
| 3. | நரகத்திலிருந்து | 59 |

# வேர்

வரியம் ஒண்டாச்சு. வழக்கு இன்னும் விசாரணைக்கு எடுபடுகிறதாயில்லை. தவணையும் ஏழாச்சு. நெடுகலும் கோட்டில சும்மாபோய் நிண்டு தூங்கிப்போட்டு வாறதுதான் வேலை. இதுக்கு ஒரு முற்றில்லை. நீதவான் வழக்கைக் கூப்பிடுவார். கூட்டில ஏறமுந்தியே தொலுக்காரி "தவணை" என்பான்.

கோடு கச்சேரி பொலிஸ் என்றாலே நாய் அலைச்சல். மனுசருக்குப் பொல்லாத மாய்ச்சல். மாய்ச்சல்பட்டாலும் காரியம் முடியுதா? அதுவும் இல்லை. துலுக்கன் தொப்பி மாதிரி வாசிப்பாத்து வழக்கு இழுபடுகுது. கருமம் ஒப்பேறுவதாயில்லை.

நேரவிரயம். பொருள் பண்டச்செலவு. தேவை இல்லாத கரைச்சல். கோர்ட்டுக்கு வந்து போகிறதிலயே வாணால் போகிறது. தாயும் மோளும் கோட்டடிக்கு இழுபடுகிறதே தொழில்.

சீச்சீ, இதென்ன மானங்கெட்ட சீவியம்?

தவணைக்குத் தவணை புரக்கிராசி அப்புக்காத்து மாருக்கு அள்ளி இறைக்கவேணும். அவனவன் பணம் கறக்கிறதுக்காக வழக்கை வேணுமெண்டு இழுத்தடிக்கிறது சுபாவம். சங்கதி என்னெண்டுகேட்டால், நீதவான் தவணைபோட்டதாக ஒரே சாட்டு. ஆனால், இந்தப் புரக்கிராசி அப்புக்காத்துமார்தான், தவணைகேட்கிறது வழக்கம். இது ஊர் உலகத்துக்குத் தெரியாதெண்டு அவேக்கு எண்ணம்.

ஒரு வேளை "ரண்டுபேரும் சேந்து ஒருகையால வாங்கிறாங்களோ?" அவங்களைப் பொரிஞ்சு என்ன பிரயோசனம்? கோடேறியாச்சு. ஆக வேண்டியதைப் பாக்கிறதுதான் புத்தி.

பெண்பார்த்தால் சிரிக்கிற ஊர் உலகம் பெண்ணாய்ப் பிறந்தால் அழுதுமாயும். இந்த ஊர் அப்பிடி. அவள் இல்லை என்றால் இவன் நாயிலும் கடையன். பெண் தோற்ற உருவமே இன்பச்சுரங்கம். ஆடவன்

கண்கள் கனல் கெந்த அலைவது அவளுக்காக. அவள்தான் இவன் ஆத்மா. இவன் தணலுக்கு அவள் தண்மை. இருந்தும் இவன் ஆண்மைக்கு இவள் வரை. வக்கிரக உலக முறை இது.....

பொன்னம்மா புத்தகத்தில் கீறிவைத்த வாசகத்தைப் படித்துவிட்டு முகட்டைப்பார்த்தபோது கண்ணீர் பொலு பொலுத்து முகத்தில் தேம்பியது.

பெண்ணாகப்பிறந்த பொன்னம்மா இரண்டு பெண்களையும் வைத்துக்கொண்டு தனியாக எத்தனைக்கென்றுமாய்வது.

நொந்து பெற்றுத் தாலாட்டிச் சீராட்டி ஆராட்டி இரண்டு குமர்களையும் கண்ணுக்குக் குளுத்தியாக நாலு பேர் நாக்கு வளைக்காமல் வளர்த்தாச்சு.

நல்ல வடிவான கன்னிகள். மாம்பழ நிறப்பிள்ளைகள். செங்கரும்பான மாதுளங்கோது வாளிப்பு. மன்மதன் பார்த்தால் மயங்கி விழுவான். கண் காது மூக்கு முகம் எல்லாம் வண்ணக்கிளி சாடை. தேக வாகும் அப்படி எடுப்பு.

ஒன்றுக்கொன்று கோசு போகாமல் தோதாக-அன்னக் கிளிகளாக வளர்ந்து போச்சுதுகள்.

பெண்குஞ்சுகளைப் பெற்ற பாசம். தாய் நெஞ்சில் பெண்ணிரக்கம் சுரந்து கொண்டது.

ஆனைகட்டி வளர்க்கலாம். பெண்பெற்று வளர்க்கிறது யாழ்ப்பாணமண்ணில் இரும்புப்பட்டறை. ஓயாமல் நெடுகிலும் ஒரே கண்டசீருக்குச் சம்மட்டி அடி.

தாயும் பிள்ளைகளும் தனிக்குடித்தனச்சீவியம் ஆண்பிள்ளை இருந்தும் ஆன துணை இல்லை. ரஞ்சன் கடைசிப்பையன். வயசு ஏழாகியும் விருத்தெரியாது. விரல் சுப்புகிற பழக்கம் இன்னும் விட்டுப்போகிறதாயில்லை. கொத்திப்பிசாசாக வந்திருக்கிறது. பிரயோசனம் இல்லாத சீவன். இவள் புருசனைத்தின்னி. அதுகள் தேப்பனைத் தின்னிகள்.

மூத்த தலைச்சன் பூமணி. உரிச்சு வச்சுத் தாய் தான். இளையது ராணி. அப்பரை அப்படியே அச்சடிச்ச மாதிரி. அவர் உருவசருவ சாங்கம். இந்த இளையது பெத்த வீட்டுக்கையே தேப்பனைப் படுக்கையில் போட்டுட்டுது ரஞ்சன் பிறந்த ஒரு வருஷத்தால தேப்பனைத் திண்டுட்டான்.

'தாலி அறுந்த சீவியம்'

இவள் 'அறுதலி'

'மூத்ததுக்கு நேர் சீராய்ச் சடங்கு செய்து வைக்க, அது 'கட்டினவனையும்' விட்டுப்போட்டிருக்கு. அவன்பாவி கட்டின பிறகும் 'சீதனம் கொண்டுவா' வெண்டு நாண்டுகொண்டு நிக்கிறான். நான் தனிக்கட்டை மற்றக் குமரை வைச்சுக்கொண்டு என்ன செய்யிறது?'

மண்டை புழுத்த யோசனை.

கால் நீட்டியிருந்த பொன்னம்மா 'வெத்திலத் தட்டம்' எடுக்க மெல்லக் குனிகிறபோது, கிழுவந்தடியாட்டம் நாரிப்பூட்டு 'நொறுக்' கிட்டது.

நெற்றிப் புருவம் சுருங்கிற்று.

கொஞ்ச நாளாகக் கண் புகைச்சல், கைகால் உளைவு, நெஞ்சுக்குத்து, முதுகு வலி, பிடரி வாங்கல், தலையிடி.......

'சுவாதத் தெண்டலோ?'

ராணி உள்ளே சட்டை தைச்சமணியம். தமிழரை அழிக்கிற தமிழ்ச்சினிமாப் பாட்டு ஒன்று குதூகலமாக மணி இலையாட்டம் வாய்க்குள் கிணுகிணுக்கிறது.

'இதுக்கு வாறவனெண்டாலும் பணப் பிசாசுக்காறனாக இல்லாமல் இருப்பானெண்டா.....?'

ஒரேகண்டசீருக்கு மூத்தவளால்தான் பொன்னம்மாவுக்கு யோசனை ஆனவாகில் ஊண் உறக்கம் இல்லை.

ஒருதன்ர கைப்பிடிச்சுப் போன குடும்பத்துக்க வீக்க தூக்கம் சண்டை சச்சரவுகள் வரத்தான் செய்யும், கட்டினவன் அவன் கல்லெண்னடாலும் கணவன் புல்லெண்டாலும் புருஷன். ஒருமாதிரி கண்டுங்காணாமல் ஒத்துமேவிச் சமாளிச்சு நடக்கிறதுதான் புத்தி. எப்பிடி எடுத்துச் சொன்னாலும் இது கேட்டாத்தானே? தேப்பன் மாதிரிப் புடிச்சி ராவி. அவர் குடுத்த செல்லம்தான். இப்ப அனுமார்ப் புடியில நிக்குது. இப்ப எனக்கு மூச்சு விட ஏலாமல் கிடக்கு. நாலு பேர் கேட்டா நான் எந்த நாக்கால பதில் சொல்றது? இளவயதில் வாழாவெட்டியா இருக்குதே. நல்லது பொல்லாதது சொல்ல ஏலாது. எப்பனெண்ண முந்திச் சீறி விழுகுது. ஒண்டையும் செவியில் ஏத்துறாளில்லை. கேட்டா, அவன் வேண்டாம் வேண்டாமெண்டு நாண்டுகொண்டு நிக்கிறாள்.....

பாக்கை வெட்டி ரண்டு பிளவு வாய்க்குள் போட வில்லை. நெஞ்சு புரைக்கேறி இருமிற்று.

'ம்... இருந்தாப்போல சீதனம் கேக்கிறானாம். கேக்கட்டன். அவன் கேட்டா இவளுக்கென்ன வாய்க்குள்ள முட்டையே? விருத்துறையாச் சொல்லுறது. சொல்லாள். இப்ப கோடேறியாச்சு...'

அடுப்புப் புகை கிடுகுக் கண்ணறைகளால் கக்குகிறது.

"டிய புள்ள, உதேன் உந்த அடுப்பு உப்பிடிப் புகையிது, ஏதேன் பச்சைத் தடி தண்டு வச்சனியே?"

புகை கண்மூட்ட பூமணிக்கு எரிச்சல் எடுத்தது. ஆத்திரம் தீர நாய்க்கு எறிந்த வாங்குப் பலகை அதன் குண்டிப் பூட்டில் பட்டு முற்றத்தில் சழன்றது. வால் குழைய, நாய் வாள் வாள் என்று ஓட்டம் பொட்டுப் பூந்து எங்கோ மறைந்தது.

"புள்ள, நீ உத முடிச்சப்போட்டு வந்து கெதியா வெளிக்கிடன். இன்றைக்கும் தவணை போடுறானோ ஆர் கண்டது?"

தலைக்குமேல் வெள்ளம் சாண் ஏறினால் என்ன முழம் ஏறினாலென்ன. காரியம் முத்திப்போச்சு. எத்தின நாளைக்கெண்டு பொத்தி மறைக்கிறது?

'சீதனம் கேட்டு வாறவன் எவனெண்டாலும் குடும்பத்தில நேசமாக இருக்கமாட்டானெண்டு இவள் அப்பவே சொன்னவள். நான் விசரிகேக்கல்ல. ஏதோ நல்ல பெரிய உத்தியோகம் பாக்கிறனெண்ட கெடுவில் ஆசைப் பட்டு, கடனத் தனியப்பட்டு அவன்பாவி கேட்ட சீதனம் குடுத்துத்தான் கட்டிவச்சன். இப்ப, கிளியப் பூனையின்ர கையில் குடுத்தகணக்காப் போச்சு. ரண்டு வரியத்துக்குள்ள இப்பிடிக்கோடேற வருமெண்டு ஆர் நினைச்சது?'

அடுப்பில உலை கொதிச்சுக்கொண்டிருக்கு.

இருந்தவாகில பூமணி மயிரைக் கொய்து குவித்து வாய்க்குள் அடைத்துக் கொண்டு நெஞ்சு குலுங்க வயிற்றைப் பொத்தியபடி வயிறு கும்ம பொட்டுக் கடவைக்கு ஓடிப் போனாள்.

குவாக் என்று ஓங்காளித்த களைப்பில் முகம் சில்லிட்டு, கன்னம் ஏகலும் கண்ணீர் சிதற நிமிர்ந்தாள். இந்தக் கோலத்தைப் பார்க்க இவள் தாய்க்குப் பொறுக்குதில்லை.

இதென்ன கோதாரி மாயமடி.....?

கொதிச்சு உலை பொங்கி வளிந்தது.

ஆ. கொள்ளையில போவான்... பிள்ளையும் தாயுமாக்கிப் போட்டானே... வழக்கு இறுகப் போகுதெண்ட பயத்தில மன்னிப்புக் கேட்டு இணக்கத்துக்கு வாறனென்டுசொல்லிக் கோட்டையும் ஏமாத்திப் போட்டானே... இதையெண்டாலும் யோசிச்சு இவள் சீவிக்கத் தெரியாமல் கிடந்து அழுந்திறாள். ஒற்றுமையாப் போடி பிள்ளை யெண்டாலும் மாட்டுதாம். எப்ப பாத்தாலும் அழுங்குப் பிடி. ஒருவாட்டி கோட்டுக்குப் போய் வாறதெண்டால் சும்மா கிடக்கே....?

ஆத்திரமான சோக வெப்பிசாரம் மனசில் அலையடியாகக் குமுறிற்று. கண்களில் மங்கலான கலங்கல்.

"உள்ளாளும் கள்ளாளுமா நடந்துபோட்டு உப்பிடி நிண்டா வயித்துப் புள்ள வழுக்கி விழுந்திடுமே? இஞ்சால வந்து முகத்தைக் கழுவிப் போட்டு வெளிக்கிடன். கூப்பிடேக்க சமூகங் குடுக்காட்டி நீதவான் வழக்கைத்தள்ளிப் போடுவார். புரக்கிராசி அப்புக்காத்துக்குக் குடுத்த காசும் வீணாப் போயிடும்..."

கன்னிப் பிள்ளைத்தாச்சி. இப்பிடி ஆகுமென்று நினைக்கவில்லை. தலை சுற்றுது. கண்மயக்கம் தெளியவில்லை. பார்க்கிற கண்ணுக்கு நிலம் பூஞ்சாணமாகத் தெரியுது. வயிற்றுக்குமட்டல் வாய்திறந்து பேசவிடுகுதில்லை. எலுமிச்சம்பழக்கோது கைக்குள் சிதைஞ்சு கிடக்கு. மூச்சுப் பிடிச்சு உறிஞ்சு மணந்தும் வயிற்றுக் குமட்டல் நிக்குதில்லை. ஓங்காளித்துச் சத்தி சத்தியா வருகுது.

பேதலித்துப்போய் நின்று தத்தளிக்கிறாள்.

"எடி புள்ள ராணி, உலை அடுப்பில் விட்டுப் போட்டு எழும்ப ஏலாமாக்கிடக்கு. நீ உந்தத் தையல விட்டுப்போட்டு உவள் கொக்காளுக்குத் தண்ணி அள்ளிக் குடு"

ராணி சினந்துகொண்டு கிணற்றடிக்குப் போகிறபோது வாய்க்குள் ஒரே புறுபுறுப்பு.

"உங்களோட பெரிய உத்தரிப்பாப் போச்சு"

பல்லு ராணி நறுமின தாய் சத்தம் வைத்தாள்:

"டிய ராணி, இதென்ன உன்ர கிழட்டுக் கதை?"

எலும்புச் கள்ளியாட்டம் ராணி மெலிஞ்சிருக்கிறாள். நரம்புத்தளர்ச்சியாக்கும். என்ன சொன்னாலும் மறுப்பு. எது சொன்னாலும் புறுபுறுப்பு. இவளாலும் தாய்க்கு ஒரே கவலை...

தன்னால் வீட்டில் எழுகிற பூகம்பம் பூமணிக்குச் சாடையாக வெளித்தது.

நெஞ்சு நீவி ஒரு பெருமூச்செறிந்தாள்.

முகம் கழுவித் தலை சீவிச் சேலை உடுத்து மகளும் தாயும் வெளிக்கிட, நேரம் எட்டரை ஆகிவிட்டது.

"ராணி, உலை அடுப்பால இறக்கியாச்சு. கோடு முடிஞ்சு வர எந்நேரமாகுமோ தெரியாது கறியக் காச்சிச் சோத்தைத் திண்டுபோட்டு, ரஞ்சனோட பிராக்காய் இருந்து விட்டு அலுவலைப்பார். நாங்கள் போட்டு வாறம்"

"கோட்டடி உதில கிட்டத்தானே. வசுவுக்கு நிண்டு தூங்கிறதிலும் பாக்க நடந்து போவம்..."

றோட்டுக்கு ஏறுகிறதை நினைக்க நெஞ்சு கொஞ்சம் இடிக்கிறது.

அவனவே இருந்தாப்போல றக்கில ஜீப்பில வருவாங்கள்....

றோட்டில் வந்து நடக்கிறபோதும் தாய் வாய் பொரிந்து தள்ளிய மணியம்.

"ஆமிக்காரங்களொண்டால பெண் புரசுகளும் றோட்ல கீட்ல நடக்கேலாது... எங்கட சனங்கள் தங்கள் உரிமையக் கேக்க அவங்களென்னென்டா துவக்கைத் தூக்கிறாங்கள். அவங்கள் கதைக்கிறது எங்களுக்கு விளங்குதில்ல. நாங்கள் பறையிறது அவங்களுக்குப் புடிபடுகுதில்ல. அவன்ர கண்ணுக்கு இப்ப பெண் புரசு குழந்தை குட்டி கிழடு கட்டையெல்லாம் புழைகாறங்கள்... எங்கட இவன் விடுவானே? குதிச்சிட்டான். கோசு போகான். இருந்தா மானத்தோட சகோதரமா இருக்கிறது. இல்லாடிச் செத்திட்டுப் போறது. இஞ்ச பாக்கேலயே விட்டுக்க நடக்கிற கிலிசு கேட்ட. நேர் சீராக் குடுத்துப்போட்டு இப்ப கோடும் கச்சேரியுமா நாணயசீலப்படுறான்...."

பூமணிக்கு எரிச்சலாக வந்தது.

"எணை இந்த வாயை எப்பன் சும்மா வச்சுக்கொண்டு வாணை. உந்த விசர்க் கதையக் கேக்க எரிச்சல்தான் வருகுது"

உன்னிய கவடு பின்னடித்தது.

"ஓ, நான் பின்ன விசரிதானே? அவரும் கண்ணை மூடி இஞ்சால நல்லூர்த் தீத்தத்தோட எட்டு வரியமாப் போச்சு. சனியோட சனி எட்டு, ஞாயிறு ஒம்பது, திங்கள் பத்து.... இண்டைக்குப் பத்தாந்திகதியோட ஒம்பதாவது வரியந் துவங்கபோகுது. இம்மட்டுக்காலமா ஒரு ஆண் துணை இல்லாம தனிக்கையடிச்சு மற்றவேக்கும் கோசு போகாமல் நேர்சீராக வளத்து ஒருதன்ர கையில் குடுத்துப் போட்டு, இப்ப நான் பெத்த பிள்ளைக்காகக் கோட்டுக்கு அலையிறனெல்லே... அப்ப, நான் விசரித்தானே"

நெஞ்சு சுரீரித்தது. கண்களில் சேலைத் தலைப்பைப் போட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டதைப் பார்த்த பூமணி, தனது வார்த்தை தாய்க்குக் குத்தலாகப் பட்டிருக்கிறது. என்று புரிந்ததும் மனம் குமைய நெஞ்சுக்குள் அழுதாள்.

"நான் மடைச்சி. பாசம் உள்ள அம்மாவின்ர மனம் புண்படக் கதைச்சுப்போட்டேனே...."

பண்டத்தரிப்பு மினிபஸ் ஒன்று காலுக்குள் கிறீச்சிட்டது.

தாய் கரத்தைத் தாவிப்பிடித்து ஓரமாக நடந்த பூமணி சொன்னாள்.

"அம்மா, மினி பஸ்காறர் உப்பிடித்தான். ஆக்களை அடையிறதுக்காக் காலுக்குள்ள கொண்டுவந்து நிப்பாட்டுவினம். இஞ்சால வேலியோட இன்னும் ஓரமா வாணை"

ஒருமாதிரி ரவுணுக்கு வந்தாச்சு.

மணிக்கூட்டுச்சந்தி தாண்டிக் கோட்டடி வீதிக்கு ஏறும்போது "ஆமிறக்'ஒன்று இரைந்து உறுமிக்கொண்டு யாழ்ப்பாண ரவுண் பக்கம் விரைந்தது.

இண்டைக்கு எங்க வெள்ளிடிழப்போகுதோ? அங்க வீட்டிலயும் என்ர குமர்ப்புள்ள தனிய....

பொன்னம்ம மனசு வீடும் கோடுமாக அலைபாய்ந்து பதறிக்கொண்டது.

பறதியோடு கோட்டடிக்கு வந்தாச்சு.

மருமோன் சண்முகம் "கோட்" முன் வாசற்படியில் நிற்பதைக் கண்ட தாய், ஒரு யோசனையும் இல்லாமல் இரகசியமாக மகளைக் கேட்கிறா.

"டிய புள்ள, பொடியன் பாவிபோல வந்து நிக்குது. சீதனம் கேட்டா அதை நான் பாத்துக்கொள்றன்... விரல் கண்ணுக்க குத்தினா அதை வெட்டி எறியிறதே... குடும்பகாரியம். ஆயிரம்காலத்துப் பயிர். பிரியக்கூடாது. பிரிக்கப்படாது. நாங்கள் பொம்புளையள். எங்களுக்குக் கனசள்ளு முள்ளு. கண்டுங்காணாமல் கொஞ்சம் விட்டுக்குடுத்து நடந்தால் என்ன... கடைசியாக் கேக்கிறன். நான் ஒருக்காக் கதைச்சுப் பாக்கட்டே...?"

பூமணிக்குச் சுரீரென்று முகம் சில்லிட்டது.

"இருந்தாப்போல திடீரென்று ஏன் இந்தப் புத்தி தடுமாறினது? நான் இம்மட்டு நாளாக நாணயசீலப்பட்டது போதும். ஆயிரந்தடவை சொல்லிப் போட்டேன். பேந்தேன் உந்த விசர்க்கதை?"

புண்ணும் சொல்லி புண்ணுக்கு மருந்தும் சொல்லி, ஆத்தாக்கடசியில கோடேறி வருஷமும் கடந்து போன பிறகு, தான் இப்படிப் பேதலித்திருக்கக் கூடாது என்று பொன்னம்மா யோசித்தாள். பெண்ணாய்ப் பிறந்த இந்தப் பிள்ளையின் இளங்குடும்பம் கரிந்துபோகக்கூடாதென்ற ஆதங்கமே தன் நெஞ்சில் சூல்கொண்ட வார்த்தை என்பதைப் புரிய மகள் இன்னமும் பக்குவப்படவில்லை என்று இந்தத் தாய் நினைத்தாள். பெற்ற தாய்பாசம் இந்த மகளுக்கு விசராகத் தெரிகிறது. பெற்றமனம் பித்தாய்க் கரைகிறது. பிள்ளைமனம் கல்லாய் இறுகுகிறது. நெருங்கினால் நொறுங்கும்.

பொன்னம்மா நெஞ்சு கமற ஒரு பெருமூச்சு எழுந்தது.

தான் ஒருவளால் தன் தாய் உத்தரிப்பிஸ்தலத்தில் ஒரு பாரச்சுமையாக பாரச் சிலுவையாக ஒரு சுமைதாங்கியாக ஆகிவிட்டகோலம் அந்த நினைவு இந்த மகள் மனசை இப்போது பிரளயப்படுத்திற்று.

முகத்தை முகம் மினவிற்று.

## 2

கோடு கொள்ளாத சனம்.

நீதவான் பெஞ்சுக்கு வந்து விட்டார்.

தொலுக்காரி கட்டளை ஆணைகளை வரிசைப் படுத்துகிறார்.

கொள்ளை, சயிக்கிள் திருட்டு, கற்பழிப்பு, கலம்பகம் ஆகிய வழக்குகள் சாட்சிக்காரர் கூட்டில் ஏறமுன்பே விசாரணை இன்றி நீதவான்

தவணை போட்டுக்கொண்டு வருகிறார். ஆதலால் இந்த டைவோஸ் கேஸ் எப்படியும் விசாரணைக்கு எடுபடும் என்ற நம்பிக்கை பூமணிக்குத் துளிர்த்தது.

நீதவானும் இந்த வழக்கையே எடுக்கிறார்போல் தெரிகிறது.

"திருமதி பூமணி சண்முகம்?"

சனத்துக்கூடாக முகம் கவிழ்த்தி வந்து சாட்சிக் கூண்டில் பூமணி ஏறுகிறபோது தேகம் பரவிய கூச்சம் மண்டைவரை புரையோடி, நாக்கு வரண்டு தொண்டை முடுக்கிட்டுக் கொண்டது.

நீதவான் இங்கிலீஷில் சொல்கிறதை, தொலுக்காரி தமிழில் பெயர்க்கலானார்.

"நீர் ஏன் உம்முடைய கணவருடன் சமாதானமாகப் போகக்கூடாது?"

"இவள் மலைத்துப் போனாள்."

இதேன் இருந்தாப்போல இப்பிடிக் கேக்க வேணும்?

இவளுக்கு நாக்குப் புரளுதில்லை. வாய்க்குள் வந்த வாக்கு வெளியே வருகுதில்லை. ஊமையாட்டம் பதகளித்துக் கொண்டு தடுமாறுகிறதை நீதவான் புரிந்துகொண்டு மறுபடியும் சொல்கிறார்.

"அவசரப்பட வேண்டாம். ஆறுதலாக நிதானமாக பதட்டப்படாமல் யோசித்து மறுமொழி சொல்லும். நீர் கணவரோடு ஒற்றுமையாகப் போனால் என்ன?"

பூமணி தனது கண்ணைப் புரக்கிராசியைப் பார்க்க, புரக்கிராசி நீதவானைப் பார்த்து இங்கிலீஷில் கர்ச்சிக்கிறார்.

நீதவானும் புரக்கிராசியும் சிக்காராய்க் கொழுவிக் கொண்டினம். நீதவானும் விடவில்லை. புரக்கிராசியும் கோசு போகிறாயில்லை. காடையும் கௌதாரியுமாக வாய்த் தர்க்கம் முடிகிறாய் இல்லை. கோட்டுக்குள் ஏதோ யுத்தம் நடக்கப் போகிற மாதிரியான தர்க்கம். பூமணி கெலிச்சுப் போச்சுது. சனம் முழிசியபடி ஆ வெண்டு பாத்துக் கொண்டிருக்கிறதை கவனித்த தாய்க்குச் "சீல கழண்டு" விழுமாப்போல வெட்கம் தலையைப் பிய்கிறது.

"உம்முடைய புருஷன் சூது வாது, குடி கூத்தி, அடிபுடி சண்டைக்காறனா?"

ஆம், இல்லை என்று எந்த வெளிப்பாடும் அவள் வாயில் இல்லை.

தலையைக் கவிழ்த்திக்கொண்டு முழிக்கிறாள்.

"கோட்டை மினக்கெடுத்தாமல் கேட்டதுக்குப் பதில் சொல்ல வேணும்?"

'சரி' என்பது போல் ஒரு தலையாட்டலோடு சிறு வாயசைவு.

"அவர் சூது வாதுக்காறனா?"

உதடுகள் விரிந்தன.

"இல்ல"

"அப்போ,, குடி கூத்திக் கள்ளரா?"

"இல்ல"

"அடிக்கடி சண்டைகாறரா?"

"அப்படியும் இல்ல"

"அப்ப, ஏன் விவாகரத்துக் கேக்கிறீர்?"

இவள் நெற்றிக்கு நேரே உற்றுப் பார்த்தாள்.

புட்டுவத்தில் இருந்த புரக்கிராசி திமிறிச் சிலுப்பிக் கொண்டு, இதே வெட்டுகிறேன் விழுத்துகிறன் என்ற தோரணையில் எழுந்தார்.

ஆணித்தரமான பதில் மொழியப்பட்டது.

"கலியாணம் செய்ய முந்தி அப்பிடி ஒண்டுமில்லை. பிறகும் அப்பியில்லை. இப்பதான் அதுகளைவிட மோசமாக நடக்கிறார்."

"என்ன மோசம்?"

'பணப் பேய் பிச்சு..."

"அது வாழ்க்கைக்குத் தேவை. எப்படி இருந்தாலும் அவர் உமது கணவர்தானே?"

இப்பத்தான் பூமணி நீதவானை நேரே பார்த்துச் செப்பமாக வாய் திறந்தாள்.

"அவர் என்ர புருஷன்தான். சாகு மட்டும் அப்பிடிச் சொல்லிக்கொண்டே இருப்பன். ஆனால, என்னை அவர் தன்ர மனைவியெண்டு சொல்லிச்சீவிக்க அவருக்கு உரிமைதகுதியோக்கியம்மவுசு வேணும். இதில் ஒண்டும் இப்ப அவரிட்ட இல்லை. சீதனம் வேண்டித்தாவெண்டு தொண்டை பிடியில நிக்கிறார். சீதனம் கேட்டுக்

குடும்த்திலே நிபந்தனை போடுறவர் எவரெண்டாலும் அவர் ஆம்பிளையில்லை. ஆண்மையில்லாமல் பொம்பிளைக்குச் சீதன விலை பேசுற ஆம்பிளை எனக்குத் தேவையில்லை. பணத்திலே பயித்தியங்கொண்ட பேய்க்கு மனைவியும் தேவையில்லைகுடும்பமும் தேவைப்படாது......"

கண்ணகிக்கு முன்னே அமர்ந்த பாண்டியன் போல் நீதவான் முகபாவம் நெற்றிச் சுருக்காக மாறிற்று.

என்னமோ அவர் யோசித்தமாதிரி இருந்தது.

எதுவும் தட்டுப்பட்டதாய் இல்லை.

"அடுத்த மாதம் பத்தாந் திகதி தவணை"

'பெஞ்'சைவிட்டு நீதவான் எழுந்தார்.

புரக்கிராசி வெற்றிப் புன்னகையோடு வெளியே வந்தார்.

கோடு மதிய போசனத்துக்காகக் கலைந்தது.

## 3

பனங்கூடலுக்குள் பொழுது சரிய மகளும் தாயும் வீட்டுக்கு வந்து சேந்திட்டினம்.

வந்த பொன்னம்மாவுக்கு கைகால் ஓடவில்லை. ஆற அமர முடியவில்லை. மண்டை பிளக்கற யோசனை. குந்தியருந்து கொண்டாள். தலை சுத்துகிறமாதிரி ஒரு மயக்கம். வெறுந் தேத்தண்ணி குடிக்கவேணும் போல் தவிப்பெடுத்தது.

'அடுத்த தவணைக்குள்ள என்ன வெள்ளிடி வந்து சம்பவிக்குமோ?'

தான் என்ன சொன்னாலும் இனி எதையும் மகள் காதில் போடமாட்டாள் என்று இவளுக்குத் தெரிந்தபோதும், இந்தத் தாயானவளை ஒரு சபல மனம் சிப்பிலியாட்டிக்கொண்டே இருக்கிறது.

இப்போ புதுசாக வேறு ஒரு யோசனை தட்டிற்று.

'இந்தப் பெட்டை கட்டினவனையும் விட்டுப் போட்டு ஒரே கண்டசீருக்குக் கோடு கச்சேரியெண்டு அலைஞ்சா, வீட்டில இருக்கிற குமரை ஆர் தேடுவான்? பத்தாக்குறைக்குக் 'காம்பு'கள்ல இருக்கிற சட்டைக்காறங்களெல்லாம் யாழ்பாணத்தில வந்து ஊர் மனையளுக்க

தேவையில்லாமல் குவிஞ்சுகொண்டிருக்கிறாங்கள். பெண் புரசுகளும் நடமாட ஏலாமக் கிடக்கு'

நடந்தால், இருந்தால், எழும்பினால், கிடந்தால், படுத்தால் மக்களின் யோசனை ஊர்ச் சிந்தனை.

'கடைக்குட்டிப்பொடி ஆம்புளைப் புள்ளையெண்டு பாத்தா, அதுவும் வலது குறைஞ்சதாக வந்திருக்கு. ஏழு வயசாச்சு. குழந்தைப் பிள்ளையாட்டம் விரல் சூப்பிக்கொண்டு எப்ப பாத்தாலும் ஒழுங்கையளுக்க நிண்டு குஞ்சு குருமான்களோட போளை உறுட்டுறது, கிட்டி அடிக்கிறது, கண்ணாம்பூச்சி விளையாடுறதுதான் வேலை. பள்ளிக்கூடத்துக்கு விட்டா, சட்டம்பிக்கும் தெரியாம ஓடி வந்திர்றான். நான் புருஷனைத் தின்னி. இவளைப்போல குமர் வேற வீட்டக்க கிடக்கு. இதுகள யோசிச்செண்டாலும் இந்தப் பெட்டை தன்ர கட்டின புருஷனோட ஒத்து மேவி நடக்காளாம். எதைப் பறஞ்சாலும் எடுத்தெறியிறமணியம். இவளுக்கு இப்ப ஆண் மூச்சுப் பிடிச்சிட்டுது. கோட்டுக்குப் போனா நெடுகிலும் தவணை. இவளால இருக்கிற குமர்பிள்ளைக்கும் இனி அவமானம்...?'

முனகலோடு கெம்பி எழுந்த பெருமூச்சு, தாய் நெஞ்சுகள் நீவிற்று. வயிறு குதறுகிறது. உருப்படியாகாத யோசனைகள் சிந்தனைகள் மனசுகள் கிளர்ந்து போகின்றன.

இன்னும் ஆனவாகில் சாப்பாடு இல்லை.

மறுநாள் விடிஞ்சும் மன நிம்மதியில்லை. மத்தியானமாப் போச்சு ஆகினது ஒன்றுமில்லை.

பிள்ளைகளுக்குப் பசியெடுத்தது.

அம்மியில்போட்ட சரக்கு மிளகாய் அருவல் நொருவலாகக் கிடக்கிறது. அதுவும் அரைச்சு அரைச்சு முடிக்கிறபாடாயில்லை. கைக் துவளைக்குள் நுளுந்துகிற குழவி தன்பாட்டுக்கு வீணாக அம்மியில் உருளுகிறது. பின் தானாகத் தக்குவிட்டு ஓய்கிறது. இவவோ ஒருபாட்டம் முன் உன்னல். மறுபாட்டம் பின் இழுவை. எங்கோ கரிசனை.

இருந்தவாக்கில் 'சடக்'கென்று அடித்துப் பறந்த காகம் ஒன்று தசினிக்குள் எதையோ கொத்திக்கொண்டு போயிற்று.

'ஆ... கொள்ளயில போவாண்ர காகம் வந்து கிடக்கிறதையும்

அள்ளிக்கொண்டு போகுதாக்கும்'

நெற்றிக்கண் காகம் பறந்த திசைக்குப் பாய்ந்தது.

சாவக்கட்டாரிட்டக் காலம்புற வேண்டின விளக்குட்டி மீன்களை நூண்டி, துண்டு துருத்தியாக வெட்டி வைத்தவள். சட்டிக்குள் கிடந்து மீன் பதம் கெடுக்கிறதும் பொன்னம்மாவுக்கு நினைவில்லை. மனப்புழுக்கத்தில் எல்லாம் மறந்துபோச்சு. நேரம் போனால் இனி மீனில் புழுக் கெந்தப் போகுது.

முத்துக்குட்டி ஆச்சி கடைக்கு மண்ணெண்ணை வாங்கப் போன பொடி ரஞ்சன் இன்னும் வந்தபாடாயில்லை.

'கண்ட நிண்ட பொடியளோட குமுதம் குத்திக்கொண்டிருக்கிறானோ, இல்லாட்டி எங்கயேன் மிலாந்திக்கொண்டு நிக்கிறானோ?'

காது 'கிண்'ணிடுறதான ஒரு சத்தம் எங்கோ வெடித்தது.

பயந்து போனாள். ஆனால், அது அவள் நினைத்த மாதிரி ஆமியோ பொடியளோ சுட்ட சத்தம் அல்ல. றோட்டில் ஓடிய பஸ் ரயர் வெடித்த சத்தம்.

"டேய் தம்பி, ரஞ்சேன்....?"

சிலமனைக் காணவில்லை.

எத்தனை தரம் கூப்பிறது. தொண்டை வறண்டு போச்சு.

'மூதேவிப் பொடியனைக் காணேல்லயே'

"எடிய புள்ள ராணி, உவன் தம்பி ரஞ்சன் வாறானோண்டு உதில நிண்டு ஒருக்கா எட்டிப்பாரு"

'அரியண்டம் பிடிச்ச மனிசியால ஒரு புத்தகம்கூட இருந்து வாசிக்கேலாது..' 'திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள்' நாவலில் சொக்கிப் போன ராணிக்கு, அம்மா சொன்ன அலுவல் எரிச்சலாக வந்தது.

வாசித்த பக்கவாட்டு ஒற்றையுள் பனையோலைத்துண்டு நொடித்து எடுத்து அடையாளம் வைத்த ராணி, தன்னாரவாரம் 'புறுபுறு' த்தசாடை படலைத் திறந்து போய் ஒழுங்கையில் நின்று எட்டிப் பார்த்தாள்.

ரஞ்சன் வருகிற அசுகிடை இல்லை.

மனசு குல்லிட்டது.

'றோட்டடிப் பக்கம் போட்டானோ?'

ஆரையேன் கேட்டுப் பாக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்க ஒழுங்கையில் தரகு வேலுப்பிள்ளைக் கிழவனோடு சண்முகம் எதோ கதைச்சுக்கொண்டு நிக்கிறான்.

அந்தடியலாக ராணி ஓடி தாய்க்குச் சொல்கிறாள்.

"எணை அம்மா, எங்கடை முன் ஒழுங்கைக்குள்ள தரகு வேலப்பாவோட அத்தார் ஏதோ பறைஞ்சுகொண்டு நிக்கிறார். என்னமோ பிளான் போடுறார் போல....."

நெஞ்சதிருக்கிறசாடை இடிமுழக்கம் ஒன்று வானத்தில் கேட்டது.

"மறுக்காலும் மாயப்பொடி தூவ வாறானோ, இல்லாட்டி மனம் திருந்தி வாறானோ ஆர் கண்டது? உப்புடிக் கொத்த ஆம்புளையல நம்பேலாது. உவங்கள் சேறு கண்ட இடத்தில் மிதிச்சு, தண்ணி கண்ட இடத்தில கழுவுற சாதி"

"எடிய புள்ள, உதை உவள் கொக்காளிட்டப் போய்ச் சொல்லு, என்ன சொல்றாள் பாப்பம்"

"இப்ப இருக்கிற நிலையில் அதுக்குச் சொன்னா, அது என்னிலதான் எரிஞ்சு விழும்"

"நீ பக்குவமாச் சொன்னால் அவள் கேப்பாள், போ"

தாய்க்குக் கேளாமல் ஏதோ முனகிக்கொண்டு ராணி திரும்பினாள்.

"அக்கா, உனக்கு ஒரு வியளம் சொல்லப் போறன்"

'அதென்னடி புதுசா?' என்று கேட்கிற தோரணையில் தங்கச்சி முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள் பூமணி.

"சொன்னால் கோவிக்கப்படாது...?"

"நீ கேக்கிற மாதிரிப் பாத்தா, எனக்குப் பிடியாத சங்கதியச் சொல்லப் போறாய்போல கிடக்கு?"

"அது எனக்குத் தெரியாது. ஆனா, அது உன்ர விஷயம் தான்"

"அப்ப சொல்லு?"

"நீ கோவிக்கப்படாது?"

"கோவிக்கேல, சொல்லு"

"சண்முகம் அத்தார் சிமிக்கிணாமல் வந்து மறுக்காலும் இஞ்ச அணையப் பாக்கிறார்போல கிடக்கு"

யாரோ செகிட்டைப் பொத்தி அடித்தமாதிரி அவள் மண்டை மின்னிச் சிலும்பிற்று.

முகத்தில் கலக்கச் சோகை.

"உனக்கு எப்பிடித் தெரியும்?"

"தரகு வேலு அப்பாவோட ஒழுங்கைக்க நிண்டு எங்கட வீட்டப் பாத்துப் பாத்து அத்தான் மறஞ்சுகொண்டு நிற்கிறார்"

"என்னடி சொல்றாய்.....?"

"நம்பாட்டி நீ வந்து பார்"

ஒரு கணம் யோசித்தாள்.

எனக்கல்லாத கரிசனை இவளுக்கு ஏன்?

தாய் காதில் விழும்படியாக பூமணி உரத்துச் சத்தம் வைத்தாள்.

"இப்ப எல்லாரும் சேந்து பேய்க்காட்டி என்னை ஏமாத்தப் பாக்கினம். சட்டமண் ஒட்டாதெண்டு தெரிஞ்ச பிறகும் அப்பிடித்தான் இஞ்ச ஒவ்வொரு காரியமும் நடக்குது"

அக்காள் சீறிப் பாய்ந்த விறுத்தத்தில் மலைத்துப் போன தங்கச்சி அடுத்த வாக்குச் சொல்ல வக்கின்றித் திரும்பிவிட்டாள்.

பொன்னம்மா ஒன்றும் தெரியாத பாவனையில் பாசாங்காகத் தன். ..டில் அரைத்துக் கொண்டிருந்தாள்.

கவனம் எல்லாம் பூமணியில்.

பூமணி சினந்த விறுத்தம் அவள் முகத்தில் இன்னும் பம்மிக்கொண்டிருந்தது.

பாவம் ராணி, என்ர நன்மைக்காக வந்து. சொன்ன பிறவியில நான் எரிஞ்சு விழுந்திருக்கக் கடாது.

பாசம் சுரந்து மனசு சஞ்சலித்தது.

"இனி இந்தக் குடும்பச் சள்ளு வேண்டாம் என்று தீர்மானித்துக்

கோடேறிய பிறகும் சண்முகம் மன்னிப்புக் கேட்டபோது தான் மோட்டுத்தனமாக இரங்கியதால் பேதலித்துப் போனதால் இன்று பிறந்த வீட்டுக்கே ஒரு சுமையாகிவிட்ட பரிதாப கோலம் அவளில் ஒரு நம்பிக்கையூட்டி, ஒரு மோசமாகிய சோகவாழ்வுபோல் தெரிந்தும், பூமணி அந்தச்சோகத்தையும் தன் பலமாகவே கருதி வருவதை இந்தத் தங்கச்சி புரிந்தாளோ என்னவோ' என்று ஒரு சபலம் இவள் மனசில் தட்டிற்று.

தன்னால் இந்தக் குடும்பத்துக்கு உண்டான சீர்கேடு நாலுபேர் அறிய முச்சந்திக்கு வந்து ஒரு வருஷமாகியபிறகு, தாய்க்கும் தங்கைக்கும் எழுகின்ற பேதலிப்புகளால் இந்த வீட்டின் எதிர்காலம் ஏதோ ஒரு சூன்யமாக வருவதுபோல் அவளுக்குப் பட்டது. தனது தாய் தங்கச்சி மட்டில் எந்த விதமான பலவந்த நினைவோடு செயற்பட்டோ அப்படியொரு பாவனையோ காட்டாமல் எப்போதும் சுயதிருப்தியாகவே நடந்துகொள்கிற தனக்கு, தாய் மட்டுமல்ல இளையவளான பிறவியும் தன்னை நோக்குகின்ற போக்கும், அணுகுகின்ற விதமும் இங்கே நிகழ்கின்ற விபரீத சம்பவங்களும், தன் விருப்பத்திற்கு விரோதமாகவும் ஒருவித பலாத்காரமுறையாகவுமே அவளுக்குத் தோன்றின.

இந்தப் பலாத்கார முறையே தன் வாழ்கைக்கு மானசீகமாக ஒத்து வருமாயின் அதனை ஏற்றுக்கொள்ளவும் சித்தமாய் இருக்கிறபோது, அதனைப் புரியாமல், இனி ஒருபோதும் ஒத்துவராத இந்தத் தாம்பத்திய உறவுக்குத் தன்னை மீண்டும் இரையாக்கவே உளவியல் ரீதியாகவும் தாயும் தங்கச்சியும் இடைவிடாது முயன்று, தன்னைப் பலவந்தப்படுத்தித் தொல்லை கொடுப்பதாக இவள் நினைத்தாள்.

இந்தவிதமான பாதிப்புகளை இவள் சகித்துக்கொள்ள முடியாமல் திணறிய போதும், இந்தச் சூழலையே தன் பலப் பரிட்சையாகக் கருதித் தன்னை ஒரு வலிமை மிக்க சுமைதாங்கியாக வரித்துக் கொண்டு, 'இனி என்ர சொந்தக் காலில் நிக்க வேணும்' என்ற பிடிவாதத்தோடு ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

ஆயினும், இந்த முடிகூட அவளுள் அலைமோதி அவள் மனசை ஒருகணம் பிரளயப்படுத்திற்று.

சலித்துப் போன அவள் மனசு இப்படிப் பேதலித்துக் கொண்டபோது, யாழ்ப்பாணக் கல்லூரியிலே பயின்ற பருவ கால நாட்கள் நினைவுக்கு

வந்தன.

நெட்டுருவி ஒரு பெருமூச்செறிந்தாள். மனசுள் ஏதோ புரையோடிற்று.

சமுதாயத்தை வெறும் ஜடமாகவும் இயந்திர ரீதியாகவும் பாவனைபண்ணி ஒரு மாயா உலகமாகக் காட்டி வர்ணிக்கிற பாடமுறைகளை அடியோடு நிராகரித்து, இந்த உலக இயற்கை வளங்களைப் பரிணாம வளர்ச்சியோடு முதன்மைப்படுத்தி, அவற்றினால் சமுதாய உயர்வுக்குச் சேவை செய்விக்கின்ற பாங்கையும், இதனால் மனிதர்கள் சுதந்திர ஜீவிகளாக வாழ்கின்ற ஒரு புதிய சமதர்ம மார்க்கத்தை பௌதீகத்தை முதலாகக் கொண்ட ஓர் உலோகாயதக் கண்ணோட்டத்தில் அர்த்த புஷ்டியோடும் சிறந்த படிமானங்களோடும் விளக்கி, மானிடத்தையும் மானிட தர்மநேயத்தையும் புலப்படுத்துகிற அதிபர் வயித்திலிங்கத்திடம் இவள் பெற்ற போதத்தின் விளையாக அந்தக்காலந்தொட்டே இந்தச் சீர்கெட்ட சுரண்டல் சமுதாய அமைப்பின் போலியான நீச வாழ்க்கையைப் புரிந்துகொண்ட பின்னும், இதே சீரழிந்த சமுதாய வாழ்க்கைக்குள் தானும் முறைகேடாகச் சிக்கி விட்ட கோலத்தை அந்த முட்டாள்தனத்தை நினைத்து இப்போது இவள் சீற்றங் கொண்டாள்.

கண்களில் நீர் புரைந்து குமிழ்ந்தது.

தங்கச்சி ராணி வாசித்த நாவலை இவள் ஏலவே படித்திருக்கிறாள்.

அந்த நாவல் முன்னுரையில் பொதிந்த வாசகம் இந்தச் சமுதாய அமைப்பில் உழலும் பெண்களை மையமாகியதால் அந்த வாக்கியங்களை இவள் மனசு மீட்டிற்று.

"இந்தச் சமூக ஆதிக்கத்திலான கொடுந்தாக்கம் பெண்ணினத்தை இச்சை நுகரும் சாதனமாக இங்கிலிஷைப் படுத்திக் கொண்டிருக்கிறது. அவளுள் எழுகின்ர இச்சாபூர்வ உணர்வு 'நாகரிகம்' என்ற திரைக்குள் 'மவுசு' படுத்தப்பட்டபோதும், அது அவளைப் பல்வேறு தினுசில் விகாரப் படுத்தி, அவளின் 'தாய்மை'யையே மாசு படுத்தி விடுகின்றது. அவளின் துன்பங்கள் 'புனித'மானவை என்று போலியாக அர்த்தப் படுத்தப்பட்டு, இவள் 'தியாக வேள்வி'யில் தள்ளப்படுகிறாள். திருமணங்களோ அவளின் சுய ஆசாபாச உணர்வுகளைச் சாகடித்து, 'குடும்பச்சொத்துரிமை' என்ற கேடயத்தில் பிணைக்கப் படுகின்றன. அவள் குற்றேவல் புரியும் மடந்தையாக, ஆண்மை செத்த ஆடவரின் 'சீதனப்பிடுங்கலில்'

விலைகூறப்படுவதால் அவள் வாழ்க்கையில் சிலுவை சுமத்தப்படுகிறாள்'

அந்தச் சிலுவை இந்தக் கணிப்பு இப்படியான நீசத்தனம் தன் வாழ்க்கையலி இப்போது சூழ்ந்துவிட்டதாக இவளுக்குத் தோன்றியது.

திருமணம் ஒரு பந்த பாச வாழ்க்கைமுறை என்று கருதிய அவள் வீட்டில் நிகழும் விபரீதங்களால் அது அப்படி அர்த்தப்படாமலே அதிபர் வயித்திலிங்கம் சொல்லுவதுபோல் அந்த நாவலாசிரியர் குறிப்பிட்டதுபோல், திருமணம் குடும்பச் சொத்துரிமை பேணும் சுரண்டும் வர்க்க நலனின் சம்பிரதாயச் சடங்காகவும், தத்தமது பந்துக்களிடமிருந்து பாகம் சேர்த்து அடிமையாக்கி இச்சையின் வெறிக்குப் பெண்களை ஆதிக்கம் புரிகிற ஆடவரின் கேளிக்கைக் கூடமாகவும் இவளுக்குத் தோன்றியது.

இந்தப் பாசம், குடும்ப வாழ்க்கை என்பதெல்லாம் ஒரு சம்பிரதாய நாடகம் போலவும் தெரிந்தது.

இந்தக் கலாசார மேடையின் ஓர் புதிய அரங்கேற்றமே வீட்டு ஒழுங்கையில் சண்முகத்தின் நடமாட்டமாயிருக்கலாம் என்று அவள் யூகித்தாள்.

ஆத்திரம் பொங்கிக் கொப்பளித்தது.

"முந்தினயப் போல இனி வலிய வந்து மன்னிப்புக் கேட்டாலும் இந்த வாசப்படி திறக்கிறேல்ல. 'வேசை' யெண்டு சொல்லிக் கதை கட்டிச் சீதனம் புடுங்கவாறவன் 'புருஷனெ'ண்டு அணைய வாறதா? கடைசிவரைவிடமாட்டன்'

மனசில் வைராக்கியம் கொண்டே விட்டாள்.

இத்தனை நாட்களாக இவள் பெற்ற தாய்க்கோ உற்ற சகோதரிக்கோ நீதிமன்றத்திலோ சொல்லாமல் பொத்தி மறைத்துவிட்ட அந்த மனத்தழும்புகள் இவள் நெஞ்சில் அவன் ஏற்றிய அழியாத வடுக்கள்.

அனைத்தையும் மீறி இவள் கொண்ட தாம்பத்தியத்தில் உற்பவித்த இந்தப் பச்சிளம் குஞ்சு.

'இதுக்குத் தன்னைத் தகப்பனெண்டு சொல்லத் திராணியில்லாத போக்கிலி அதையே பலவீனமாகக் கருதின சீதனப் பேய்க்கு இனியும் நான் வாழ்க்கைப் படுறதோ?'

இவள் நெஞ்சு புழுங்கி, மனசு கெந்தமாகச் சீறிற்று.

நெஞ்சு பம்மி எழுந்த பெருமூச்சு அடங்கவில்லை.

மறுபாட்டம் குமிழ்ந்த கண்ணீர் கன்னங்களில் வளிந்தது.

தங்கச்சி மலாரடித்து விறைத்துப்போய் நின்றாள்.

"அக்கா உதென்ன, நான் என்ன சொல்லிப்போட்டனெண்டு இப்ப அழுகிறாய்?"

அம்மா குரல் அப்போது கணீரிட்டது.

"ஏ, பிள்ளையள் அக்காளும் தங்காளுமாக உதில நிண்டு என்ன செய்துகொண்டிருக்கிறயள்?"

புதல்வி முகத்தில் தெறித்த கண்ணீர் தாய் மனசில் நெருப்பாய்ச் சுட்டது. வயிறு பதைத்தது.

அரைத்த அம்மியைச் சுளகால் மூடிவிட்டு அலங்க மலங்க எழுந்துபோன தாய், புத்திரியின் சோகம் கண்டு திகைத்தே போனாள்.

"இதென்ன புள்ள உன்ர போக்கு. உனக்கு இப்ப என்ன குறைஞ்சுபோச்செண்டு கலங்கிறாய். ஏதேன் உன்ர நன்மைக்காக நான் ஏதும் சொன்னாலும் பொறுக்கிறாயில்லை. அதெல்லாம் போகட்டும் முகத்தைக் கழுவிப் போட்டு இஞ்சால வா"

"என்ர நன்மைக்காக நீங்கள் என்ன செய்யச் சொல்றியாளெண்டு எனக்கு விளங்குது. உங்களுக்கு இப்ப என்ர சங்கதி கரைச்சலாக்கிடக்கு. உங்கட விஷயம்தான் முக்கியமாப்போச்சு. எந்த விஷயத்திலையும் ஒவ்வொருதருக்கும் மற்றவேயின்ர நலனைவிட தங்கட நலன்தான் முக்கியம். என்னை இஞ்ச வச்சிருக்க மனமில்லை. அதை வெளிய காட்டாமல் ஏதோ என்ர நன்மைக்கே எல்லாம் செய்யிறதாகச் சாட்டுச் சொல்லி வெளிக்கிடுத்தப் பாக்கிறியவள். இதை நேர சொல்லாமல் ஏன் மறைச்சுக் கதைக்கிறியளெண்டு வடிவா விளங்குது...."

ஒரு நாளும் வராத திருவாக்கு இவள் வாயில் முறுக்கேறி வந்திருக்கிறது. இந்தக் 'குத்துக்கதை'களைத் தாயானவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மனசாலும் கற்பனைபண்ணாத விஷயங்களை மகள் வாய்க்கு வந்தபடி தன்னை அந்நியப்படுத்திப் பொரிந்து கொண்டாளே என்ற ஆதங்கம் தாய் வயிற்றைத் தகித்தது.

இவளின் விபரீதப்போக்குத் தன்னைவிட அவளுக்கே

வில்லங்கமாகிவிடும் என்ற ஏக்கம் தாயை உலுப்பியது. இந்த விசனத்தில் ஆழ்ந்துபோன பொன்னம்மா, அவலை நினைத்து உரலை இடிக்கிற இந்த பிள்ளை இனி எப்படி ஆவாளோ?' என்று பரிதவித்தவளாய், ஒருவித ஆவேசம் கொண்டு பதறித்துடித்து எழுந்து மகளை ஆரத்தழுவிக் கொஞ்சி முந்தானையால் முகத்தை துடைத்தாள்.

"உன்ர மனம் நல்லாப் பேதலிச்சுப்போச்சு. அதனாலதான். இப்பிடிக் கவ்வைக்குதவாத கதை உன்ர வாயில வந்திருக்கு. தாயின்ர மனசை ஒரு தாயாலதான் அளவிட ஏலும். உனக்கு அந்தப் பாக்கியமும் கிடைச்சிருக்கு. ஆனபடியால் உனக்கும் என்ர தாற்பரியம் பிறகு விளங்கும். இப்ப நான் என்ன சொன்னாலும் உனக்கு வேறமாதிரித்தான் தோணும்...?"

மகள் ஏதும் பதில் சொல்கிறாளா என்று கவனித்தாள். தான் சொன்னதை ஆமோதிப்பது போல் நின்ற பக்குவத்தை அவதானித்தபின் உசாராக மகளைப் பார்த்தாள்.

"புருஷன் பெண்சாதி சகோதரம் பிள்ளையளைவிட தாயானவள்தான் சுக துக்கம் பாராமல் தன்னை ஒறுத்துப் பிள்ளையளில பாசங்கொள்கிறவளெண்டதையும் உங்களைப் பெத்தபிறகே நானும் உணர்ந்தன். அதனால நீ வெடுசுடுத்துச் சொன்ன வார்த்தையும் எனக்குப் பெரிசாத் தெரியல. கொடிக்குச் சுரக்காய் பாரமெண்டாலும் தாங்கிக் கொள்ளும். சுரக்காயும் கொடியாகிறதைப் பாக்க ஆசைப்பட்டேனே தவிர நீ நினைக்கிறமாதிரி உன்னைப் பிரிச்சு விடுகிறதுக்கில்லை. இனி இதைப்பற்றி ஒண்டும் பறையப் போவதில்லை. எப்பவும்போல இருந்து சகல காரியங்களையும் நடத்து. பிள்ளையின்ர நற்சீவியம்தான் தாயின்ர சந்தோஷம். நீ அப்பிடி இருந்தால் அது எனக்குப் போதும்"

மாதாவின் மனம் தன்னால் வெந்து விட்டதை இப்போது மகள் தாங்காமல் தவித்தாள். பேதலித்துப் போன பெண்மனசை நினைத்தபோது சஞ்சலம் உண்டாயிற்று. தவித்திருந்த அவள் நெஞ்சு சற்று வேளையால் கேவிக் கேவிக் குமுறலாயிற்று. தன்னை முழுவதுமாய் ஒப்புக் கொடுத்த சாடை சடாரென்று தாயின் பாதங்களில் விழுந்த மகள் கேருந்தொனியில் கதறினாள்.

"என்ர அம்மா, என்னைப் பாடுபட்டுச் சுமந்து பெத்த என் மாதாவே, என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோம்மா...."

தாயும் அக்காளும் சோகக் கலக்கத்தில் மூழ்கியிருக்கிறபோது வாயில் இனிப்புச் சூப்புத்தடியும் ஒரு கையில் மண்ணெண்ணைப் போத்தலும் மறுகரத்தில் ஒரு கடதாசிப் பொட்டலமுமாக வந்து சேர்ந்தான் ரஞ்சன்.

சின்னக்கா அதட்டிக் கேட்டாள்.

"இவ்வளவு நேரமும் எங்க மிலாந்திக் கொண்டு நிண்டனி உதென்னடா கையில் பார்சல்?"

'இவவுக்கு நான் ஏன் பதில் சொல்வது?' என்ற தோரணையில் முழிசிப் பார்த்த ரஞ்சன், விறுக்கென்று குசினிக்குள் சென்று அந்தப் பார்சலைத் தாயிடமே கொடுத்துவிட்டுச் சொன்னான்.

"இதைப் பெரியக்காவிட்டக் குடுக்கச் சொல்லி அத்தார் தந்துவிட்டவர்"

இவன் சொல்லி வாய் மூடவில்லை. பூமணி ஆவேசங்கொண்டவளாகப் பாய்ந்து போய் அவன் கன்னத்தில் பளார் பளார் என்று அடித்த கையோடு அந்த பார்சலைப் பறித்து முற்றத்தில் வீசி எறிந்துவிட்டுக் கத்தினாள்.

"மூளை இல்லாத கழுதை. வேண்டினமாதிரிக் கொண்டுபோய் நீயே குடுத்திட்டு வாடா"

இவள் சுழற்றி எறிந்த வீச்சில் கட்டுப் பிய்ந்துபோன பார்சலுக்குள்ளிருந்து நீல நிறச் சருகைப் புடவை ஒன்றும், சிறு தடித்த துண்டும் முற்றத்தில் சிதறின.

எதுவும் புரியாமல் விக்கித்துப் போய் தறுதறுஎன முழுசிக் கொண்டு தாயைப் பார்த்துத் தேம்பிய ரஞ்சன், சிதறுண்டுபோன பார்சலை எடுக்கவா விடவா என்று தயங்கி நிற்க, தாய் சொல்கிறாள்.

"இது ஒரு வாய்விடாச் சாதி. புத்தி பேதலிச்சபிள்ளை. அதுக்கென்ன தெரியும்? அவன்பாவி குடுத்துவிட்டதை வஞ்சகமில்லாமல் கொண்டு வந்திருக்கு"

சகிக்கமுடியாத பிறவித்துயரம் அக்காளைப் பிசைந்தது. அவள் தலை தலையென்று அடித்துக் கொண்டு வயிறு குதற அங்கலாய்த்தபடி ஓடினாள்.

"வஞ்சகமில்லாத எங்கட செல்லத்துக்கு, மடச்சி நான்

அடிச்சுப்போட்டன். அழாதயடி ராசா...."

சகோதரனை வாரி அணைத்துக் கொஞ்சின அக்காள் கண்கள் புரைந்து கண்ணீர் பொலுபொலுத்துச் சொரிந்தது.

"சரி சரி, அக்காள்மாரும் தம்பியும் அழுதது காணும். அவரவ ரேபோய் உங்கட அலுவலைப் பாருங்கோ. அதை நான் குடுத்து அனுப்புறன்"

சமாளித்துச் சொன்ன தாய் சிதறிய பார்சலைக் கோதி எடுத்தாள். அந்தக் கடிதத் துண்டை விரித்தாள்.

'அன்புள்ளமாமி' என்று ஆரம்பித்த கடித வாசகம் பொன்னம்மா மனசை ஒருகணம் நெகிழ்த்தியது.

'இதென்ன சில்லெடுப்பு. என்னவோ நினைக்க எதுவோ ஆகுதே.'

மனைவி இருக்க, தாயான மாமிக்கு மருமகன் கடிதம் எழுதிய விந்தையை யாழ்ப்பாணத்தில் பொன்னம்மா இப்பத்தான் காண்கிறாள்.

'வித்தையடி மாமி கொத்துதடி கோழி?'

கவிதைபோல் வாய்க்குள் பழமொழி சொல்லிக் கடிதத்தை வாசித்த பொன்னம்மா மலைத்தே போனாள்.

மூன்று பிள்ளைகளுக்குத் தாயான காலத்துக்குள் காலஞ்சென்ற புருஷனோ, பெற்றபிள்ளைகளோ, இனசனபந்துக்களோ தன்னைச் சரியாக மட்டிட்டு இதமாக ஒரு வார்த்தை சொன்னதோ எழுதியதோ கிடையாது. இந்தக் குடும்பத்தில் வந்து இரண்டு வருஷத்துக்குள் சீதனத் தகராறில் டைவோஸ் பண்ணக் கோடேறி நாணயசீலப்பட்ட பிறகு, இந்த மருமகன் இருந்தாற்போல திடீரென்று மனம் மாறிவிட்டதை இவளால் நம்பமுடியவில்லை. கட்டிய மனைவியையே ஒரு பரத்தை போல் நடத்திவிட்டுப்போன மருமகனின் இந்தச் சடுதி மாற்றம் எதற்காகவென்றும் இவளுக்குப் புலனாவதாயில்லை.

'ஒரு வேளை மறுக்காலும் ஆசை காட்டி மோசம் செய்ய வேஷம் போடுறானோ?'

யோசிக்கிறபோது ஒன்றும் தடக்குப்படுவதாய் இல்லை.

'என்னால் துயரத்துக்குள்ளான பூமணியை உங்கள் கண் பார்க்கவே ஒரு ராசாத்திபோல் நடத்திச் சீராக வாழ்ந்து காட்டுறேனே'யெண்டு இவன் இப்ப மவுசுக்காக எழுதினதின்ர சூத்திரம் என்ன?'

'ராசாத்தி போல்' என்ற வசனத்தை மீட்டபோது தாயான இவள் மனசு ஆனந்தபரவசத்தில் குதூகலித்தது.

அந்தக் குதூகலமும் வினாடியில் மறைந்தது.

காதலித்துக் கைப்பிடித்து வாழ்ந்தபோது ராசாத்தியாக வைத்திருக்க முடியாத இந்த மருமகன், அவளைத் தாயும் பிள்ளையும் ஆக்கிய பின் இப்படி எழுதுவதில் உண்மை நேர்மை சத்தியம் உண்டா என்பதை இவளால் ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. வேஷதாரிகள் நேர்மையான சத்தியவந்தர்கள்போல் வார்த்தைகளை அலங்காரமாக பேசுவதில்தான் கண்ணுங்கருத்துமாய் இருப்பார்கள். அப்படி ஒரு மேதாவியாகத் தன்னைக் கருதிக் கொண்டு வெறும் போலியாகத்தான் இந்தக் கடிதத்தை இந்த நேரத்தில் எழுதினானோ?

மண்டை புழுத்த யோசனையில் பொன்னம்மா ஆழ்ந்திருக்கிறபோது, படலையடியில் ஒரு குரல் கேட்டது.

"எடி புள்ளையள், உங்க இருக்கிறியளோ?"

'அவுக்'கென்று எட்டிப் பார்த்தாள் பூமணி. தரகு வேலுப்பிள்ளைக் கிழவன் படலை திறந்து முற்றத்துக்கு வந்து கொண்டிருந்தான்.

# 4

பூமணி இடிந்துபோய் நின்றபோது அதைக் கவனிக்காதவர்போல் உள்ளே பிரவேசித்த கிழவன், "என்ன, சத்தஞ்சாவடியைக் காணேல்ல?" என்று தானாகச் சொன்னவாறு தாய் பிள்ளைகளை ஏறு கண் வைத்துப் பார்த்தார்.

வந்த மனுஷனை 'வா, போ, இரு' என்று ஒருவரும் சொல்வாரில்லை.

தன்னை அவர்கள் வெறுப்போடு பார்ப்பதைப் புரிந்தும், அப்படித்தான் சினப்பார்கள் என்று தெரிந்துகொண்ட வேலுப்பிள்ளையர், மதியாதார் முத்தம் மிதியாதே என்பதையே மதியாமல் வெகு நிதானமாக அவதாமாக ஆறுதலாகத் திண்ணையில் குந்தினார்.

குந்தியவர் மடி அவிழ்த்து வல்லுவத்தை எடுத்து வெற்றிலைப்பாக்கைக் கைக் குவளைக்குள் துவைத்துக்கொண்டு, "பிள்ளையள், நாக்குவறண்டு போச்சு. குடிக்க எப்பன் தண்ணி கொண்ட மோளை" என்றார்.

'பூமணி தண்ணி' எடுத்துக்கொண்டு வரவேணும்' என்ற அவர் எதிர்பார்ப்புப் பிழைத்தது.

தாய் பிள்ளைகளைப் பார்க்க, பிள்ளைகள் தாயை நோக்க, தண்ணி எடுப்பார் இல்லை, கொடுப்பாரும் இல்லை. என்பதை இவர் கவனித்துக்கொண்டார்.

அவருக்குச் சிரிப்பாக வந்தது. பூமணியைப் பார்த்தே சிரித்தார்.

விவேக சிந்தாமணியின் பாடல் ஒன்றை ராகமாகச் சற்று உரத்துப் பாடலானார்.

"ஆபத்துக்குவாதப் பிள்ளை,<br>
அரும்பசிக் குதவா அன்னம்<br>
தாகத்தைத் தீராத் தண்ணீர்<br>
தரித்திரம் அறியாப் பெண்டிர்<br>
கோபத்தை அடக்கா வேந்தன்<br>
குருமொழிகொள்ளாச் சீடன்<br>
பாபத்தைத் தீராத் தீர்த்தம்<br>
பயனில்லை ஏழுந்தானே"

அவர் பாடி முடிய தங்கச்சி ராணி செம்பும் தண்ணியுமாக வந்தாள்.

வாங்கிய செம்பைக் குந்தில் வைத்த கையோடு கிழவனார் நாரி நிமிர்த்தி நெஞ்சு குதற ஒரு பாட்டம் ஏவறை விட்டார். ஏவறை கழிய, வாய்க்குள் வெற்றிலையைப் போட்டுக்கொண்டு சொல்கிறார்.

"பிள்ள, நான் உங்களோட ஒரு வியளம் பேசலாமெண்டு வந்தனான். இஞ்சால தாயும் பிள்ளையளும் வாருங்கோ"

ஒரு தக்கு வைத்து வெற்றிலைச் சாரம் துப்ப ஒரு கன்னைச் செத்தை ஓரமாகக் குனிகிறபோது....

"எணை அப்பு, நீங்கள் என்ன பறைய வந்தனீங்களெண்டு எங்களுக்கு வடிவாத் தெரியும். தயவு செய்து அத்தை விட்டுப்போட்டு வேற அலுவலைப் பாருங்கோ"

கோடை இடியாக இது அவர் காதில் அடித்தது. அதை அவர் காட்டிக்கொள்ளாமல் மனசுகள் முறுவலித்தார்.

தாயிருக்க மகள் இப்படிச் சொல்லியிருக்கிறாள்.

அவருக்கு இதுவே செப்பமான பிடியாயிற்று.

"பிள்ள, நீ கோவியாத. தலை இருக்க வால் ஆடுறதால தான் எல்லா வில்லங்கமும் வாறது. ஊர் உலகம் வீணாக நாசமாப் போறதுக்கு இதுதான் காரணம். எதுக்கும் மூளையைப் பாவிக்க வேணும், உணர்ச்சிவசப் படக்கூடாது......"

ஒரு பீடிகையோடு ஆரம்பித்த வேலுப்பிள்ளையர் தொடர்ந்து, "பிள்ள, நான் உங்களைப்போலக் கல்லூரிப் படியளேறிப் படிக்கேல. ஆனபடியால் உப்படியெல்லாம் எனக்குப் பேசத் தெரியாது. நானறிந்த அளவில் அனுபவந்தான் முறையான உயர்ந்த படிப்பு" என்றவர், தாயைப் பார்த்து, என்ன பொன்னம்மா, நீ என்ன சொல்றாய்?" என்று ஒரு சாட்டுக்குக் கேட்டுவிட்டு மனிசியின் மறுமொழிக்கும் காத்திராமல், "நான் கதைக்கத் துவங்கவே அதைவிட்டுப் போட்டு வேர அலுவலைப் பாருங்கோவெண்டு உன்ர மோள் சொன்னபடியால்தான் நான் அதை விட்டுபிடாமல் பேசவேண்டியிருக்கு. நான் உங்கட தனிப்பட்ட விஷயத்தில தலையிடுறனெண்டு நினைக்க வேண்டாம். இந்த உலகத்தில் எந்த விஷயமும் தனிப்பட்டதாக ஒண்டுமில்லை. எல்லாத்துக்கும் ஏதோ ஒருவகையில் தொடசல் இருக்கு. இந்தத் தொடசல்தான் எங்களையெல்லாம் கூடிப் பேச வைக்குது. இதுதான் இப்பத்தைய உலக நடபடி"

"அதுக்கு இப்ப என்ன?" என்று தன்பாட்டில் ஆரவாரித்துக் கேட்டாள் பொன்னம்மா.

"ம்... அப்பிடிக்கேள். உனக்கு ஒருதலைப்பாசம் தான் தெரியுது. நீதி தெரியேல்ல. உந்தப் பாசம் நீதியையும் அநீதியையும் மறைக்கிற ஒரு கண்ணாம்பூச்சி. சரி பிழை தவறு நல்லது கெட்டதுகளைத் தெரியாதபடி இது ஆட்டி வைக்கிறதாலதான் எல்லாரும் குருட்டுத் தனமாக நடக்கினம். அப்படியான பாசம் உன்ர பிள்ளையின்ர குடும்பத்தையே கெடுக்கிறதை உனக்கோ, உன்ர பிள்ளைக்கோ தெரியாதபடியால்தான் சின்னச்சின்ன விஷயங்களையும் பெரிசாக்கிக் கோடு கச்சேரியெண்டு அலஞ்சு கடசியா விரத்தியடைஞ்சுபோய்த் தவண்டையடிக்கிறயள்......"

கிழவனார் என்ன சொல்கிறார் என்று சரியாக இவளுக்குப் புரியாதபோதும் அவர் வார்த்தைகளில் பொதிந்துள்ள அர்த்தம் சரியாகவும் உடன்பாடுபோலவும் தெரிந்த போது இனங்காணாத பூரிப்பு இவளுள்

சூல்கொண்டது. வேலுப்பிள்ளையரை இவள் தரகர் என்றுதான் தெரிந்து வைத்திருக்கிறாள். ஆனால், அவரோ ஒரு மேதைக்குரிய அறிவுச்சுரங்கம் என்பதை இப்பொழுதுதான் காண்கிறாள்.

இத்தனைக்கும், இந்தக் கிழவன் என்ன சவத்துக்கு இஞ்ச வந்து நாண்டுகொண்டு நிக்குது என்று பூமணியும், மனிசனுக்கு அறளை பேந்திட்டுது. அறுபது வயது செண்டா வீட்டுக்கு நாய் வேண்டாம் என்று ராணியும் இந்த இரண்டு சகோதரிகளும் தற்காலத் தமிழ்ச்சினிமாக்காரச் சிட்டுக் குருவிகளைப்போல் தங்களையும் நவநாகரிக யுவதிகளாக எண்ணிக்கொண்டு கேந்தியாகவும் கேலியாகவும் தத்தமக்குள் சொல்லிக்கொண்டார்கள்.

அங்குள்ள சூழ்நிலையையும் அவர்களின் மனோபாவத்தையும் முற்றாகப் புரிந்துகொண்ட வேலுப்பிள்ளையார் சுற்றிவளைக்காமல் நேரடியாகவே விஷயத்திற்கு வந்தார்.

"பிள்ளை பொன்னம்மா, இஞ்ச எனக்கு முன்னால உன்ர மூத்த மோளை ஒருக்காக் கூப்பிடு" என்றவர் பூமணியைத் தானாகவே "மோள, இப்பிடிக் கிட்ட வா" என்று கை காட்டி அழைத்தபோது, அவள் வரவே, "உதில ஆறுதலா இருந்து தனிய அமைதியாக கவனமாகக் கேள்" என்று ஆசுவாசப்படுத்திச் சொல்லிவிட்டு, அவளை மேலும் கீழும் உற்றுப் பார்த்தார்.

சற்று நேரம் பார்த்தபின் கட்டுக்கடங்காத ஒரு வெடிச் சிரிப்புடன் மறுபாட்டம் சொல்கிறார்.

"மோள, நீ ஒரு இளம் புள்ள. நறுக்காப் படிச்சனி. ஆயிரங்காலத்துப்பயிர். எந்தக் காரியத்தையும் ஆஞ்சோஞ்சு பாக்கவேணும். ஆஞ்சோஞ்சு பாக்காதவன்கருமம் தான் சாகக் கடவானெண்டு படிச்சிருப்பாய். குடும்பத்துக்க நடக்கிற காரியத்தைக் குடும்பத்துக்க பேசித்தீர்க்க வேணுமேயல்லாது கோடு கச்சேரி பொலிசுக்குப் போய்ப் பிரியோசனமில்லை. அதுகளில சட்டங்கள்தான் இருக்கும். ஆனா, சனங்களின்ர சீவியத்துக்கான முறையோ மனிதாபிமான நீதியோ மருந்துக்கும் இருக்காது. சட்டம் ஒரு இருட்டறை யெண்டு கேள்விப்படிருப்பாய். அதுக்குள்ள கால் வச்சால் பாதை தெரியாமல் தடவிக்கொண்டு அந்தரிச்சு அலையவ் வேண்டி வரும். தவறோ இல்லையோ மனிசரைத் தண்டிக்கத்தான் இந்தச் சட்டம் இருக்கே தவிர, இந்தத் தவறுகள்

எப்படி உண்டாகிறதெண்டுற சங்கதியள் இந்தச் சட்டத்துக்குத் தெரியாது. சட்டத்தில நீதியப் பாக்கேலாது. சீவியத்தின்ர முறையில்தான் நீதியைக் காண முடியும். ஆனபடியால் உங்களுக்கோ கோடு கச்சேரி பொலிசுக்கோ முடியாதகாரியத்தை வேணுமெண்டா நான் சகோத்தியா முடிச்சு வைக்கிறேன். முதல்ல இதுக்குச் சம்மதம் சொன்னால் போதும்..."

தாய் அவள் முகத்தை ஊனிப் பார்த்தாள்.

ஓ, மெண்டு சொல்லுபிள்ளை என்று கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

கழுதைப் புண்ணுக்குப் புழுதி மருந்து என்று தனக்குள் பழமொழி ஒன்றை நினைவுப்படுத்திக்கொண்டாள்.

பூமணி வாயே திறக்காமல், என்ன செய்வம்? என்ற குதிர்போடு நெற்றியைச் சுருக்கிக் கீழே பார்த்தபடி நின்றபோது அந்த நிலையில் அவளை மட்டுக்கட்டிய தாய் கொஞ்சம் உசாராக, "என்ன பிள்ள, இதில் என்ன வந்திட்டுது. வாயத் துறந்து சொல்லன்?" என்று பொச்சரிக்க, அவள், சரி என்று மெல்லத் தலையாட்டினாள்.

"பாத்தியே, கள்ளப் பெட்டை. சண்முகத்தில வெறுப்பில்ல, அவன் நடந்துகொண்ட முறையில்தான் கொதிப்பு. என்ன அப்படித்தானே?" என்று கிழவனார் அவன் செயற்பாட்டைக் கண்டித்த பாங்கு இவளுக்கு உவப்பாயிருந்ததைத் தாயும் கவனித்துக் கொண்டாள்.

ராணிக்கு இது பெரும் வினோதமாக இருந்தது. அவள் தனக்குள் தன்னாரவாம் சிரித்ததை வேலுப்பிள்ளையர் கவனித்துக்கொண்டார்.

"பொன்னம்மா, நானும் பிள்ளையும் பரையிறம். நீ உதில இருந்து கேட்டுக்கொண்டிரு. பிள்ள, நீ ஏன் சண்முகத்த வேண்டாமெண்டனி. முதல்ல அதச் சொல்லு?"

"அவற்ர போக்குச் சரியில்லை"

"என்ன போக்கு"

"எல்லாந்தான்"

"சீதனம்தானே கேட்டவன்?"

"சீதனம் கேட்காமலே சீதனம் கொண்டு வாவென்றமாதிரி நெடுகலும் அதை இதைச் சொல்லி ஒரே ஆக்கினை"

"அதுக்காகப் பிறிவினை பண்ண, டைவோஸ், வழக்கு வைச்சிட்டியவள்...."

"பொறுத்துப் பொறுத்துப் பாத்து ஏலாமல் கடைசியாத்தான் வழக்கு வச்சது.

"பிறகு என்னெண்டு உங்களுக்கு குடும்ப ஒற்றுமை வந்தது?"

"அதுக்குப்பிறகு ஒற்றுமையே இல்லை"

"ஒற்றுமை இல்லாமலே பிள்ள சனிச்சது?"

அவள் திடுக்கிட்டே போனாள். ஆனால், காட்டிக் கொள்ளவில்லை.

"அவர் தானாக மன்னிப்புக் கேட்டு வந்தவர்....."

வெடித்து வந்த சிரிப்பை அட்க்கிக்கொண்டு கிழவனார் கேட்டார்.

"பேச்சில் மயங்கினாயல்லாமல், உன்ர சீவியத்தைப் பாக்கேல்ல. ஒருதன் என்ன சொல்றானெண்டு பாக்கக்கூடாது, என்ன செய்யிறானெண்டு பாக்கவேணும். அது சரி, நீ என்ன பிடியை வச்சுக்கொண்டு அப்பிட நடந்திடினி?"

அவள் பதில் சொல்ல வக்கின்றித் திமிறிய பாங்கை அவர் வாறாகப் பயன்படுத்தினார்.

"பிள்ளை, கோடேறி வழக்காடிக்கொண்டிருக்கேக்க ஒரு வாக்கை நம்பி உன்னையே கைவிட்ட நீ, அவன்ர ஒரு கதையைக் கேட்டு எப்படிக் கோடேறி வழக்கு வச்சாய்? கோட்டில சட்டத்தைக் காட்டி டைவோஸ் பண்ணலாம். ஆனா உன்ர குடும்ப சீவியத்தை நீயோ அல்லது வேற ஆருமோ ஒருக்காலும் பிரிக்க ஏலாதெண்டு நீ உனக்குள்ல நினைச்சபடியால்தான் அப்பிடி நடந்துகொண்டாய். அப்படி யிருந்தும் ஒரு வெப்பிசாரத்துக்காக உன்ர சீவியத்தை ஒரு கௌரவப் பிரச்சனையாகப் பார்த்தபடியாத்தான் இந்தச் சீரழிவுக்கு நீ ஆளாக வேண்டி வந்தது. சீதனப்பேய் இந்த நாட்டில ரண்டு நேற்று வந்ததல்ல. இந்த நாட்டுச் சட்டதிட்ட வழக்கபழக்கங்கள் மாறாமல் சீதனப் பிசாசை விரட்டுறது கஷ்டம். இப்பவெல்லாம் சீதனப் பேய்க் கலியாணம் செய்யிறதும் ஒரு கௌரவமான சம்பிரதாய முறையாக இருக்கிறதே தவிர, சீவியத்துக்குண்டான பாசத்துக்கு அத்திவாரமாக அது இருப்பதில்லை. நாட்டில இதுக்கான மாற்றத்துக்கு வழி காண முடியாமல் சீதனத்தை ஒழிக்கிறதெண்டு

சொல்றதெல்லாம் சுலோகமாகவும் போலியாகவும் இருக்குமே தவிர மெய்யாக இருப்பதில்லை. இந்தப் போலித்தனத்திலதான் நீயும் சண்முகமும் வேற வேற தினுசாக ஆளையாள் மாறுபட்டு நிக்கிறயளேயல்லாமல் ரண்டு பேருமே நோக்கத்தில் ஒண்டாத்தானிருக்கிறியள். ரண்டு பேற்ர நடவடிக்கையள் சீதனப்பேயை ஒருக்காலும் விரட்டாது. அந்தப் பேய்தான் உங்களை விரட்டிக்கொண்டிருக்கும். இனி அந்தப் பேய் உங்களை விரட்டத் தேவையில்லை, அதை நீங்கள் அரவணைக்கவும் வேண்டியதில்லை. அந்தப்பேயை விட்டுவிட்டு நீங்கள் ரண்டுபேரும் ஒற்றுமையாகச் சீவிச்சால் போதும் இதுக்கு இப்ப நீ என்ன சொல்றாய்?" சீதனம் கேட்டுச் சதா தொல்லையும் துன்புறத்தலும் புரிந்த அவன், இடை நடுவில் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட போது, அந்த ஒரு வாக்கை நம்பியே மகுடியில் கட்டுண்ட நாகம்போல் மயங்கிய அவள், கோடேறிய வழக்கையும் கைவிட்டு அவனோடு தாம்பத்திய உறவுகொண்டதும் போதாமல், அந்த உறவாலேயே பிரிக்கமுடியாத உறவாகிவிட்ட மாதிரித் தான் கர்ப்பம் தரித்துவிட்ட நிலையும் அவளை இப்போது சிப்பிலியாட்டின. இந்த நிலைக்கு ஆளான தன் வாழ்வைக் காட்டிலும், தான் இதுவரை கட்டிக்காத்துவந்த மான ரோச உறுதிப்பாடே ஒரு கௌரவப் பிரச்சனையாக அதுவே வாழ்க்கையின் அந்தஸ்தாக அவள் மனசில் பூதாகரித்து உருவெடுத்தது.

வாழ்க்கையை அதன் அர்த்தபாவத்துடன் பார்க்கத் தெரியாமல் மானசீகமாக அதனை ஒரு கௌரவ அந்தஸ்துக்குள்ளாக்கி அழிந்து நாசமாகிப்போன எத்தனையோ தம்பதியர்களை அவள் பார்த்திருக்கிறாள், இலக்கியங்களில் படித்துமிருக்கிறாள். மனசு கற்பிக்கின்ற மாய மானாகிய கௌரவ அந்தஸ்தோ அதனை ஒட்டிச் சமூகத்தில் நிகழ்கின்ற சம்பிரதாயங்களோ அர்த்தமுள்ள வாழ்க்கையல்ல என்றும், அந்தப் போலி வாழ்க்கையில் தூய்மையான இதய சுத்தியான வாழ்க்கையே கிடையாது என்பதையும் இவள் தெரிந்துகொண்டபின்பும், அந்தப் பழக்கதோஷம் இன்னும் அவள் மனசைத் தீண்டிக்கொண்டிருந்தால் கிழவனார் கேட்டதற்கு எந்த மறுமொழியும் கூறாமல் மௌனமாக ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

கிழவனார் மறுபடியும் உசுப்பலானார்.

"என்ன பிள்ள, கேட்டதுக்கு மறுமொழி சொல்லாமல் உப்பிடி யோசிச்சுக்கொண்டிருந்தாப்போல விஷயம் லேசில முடியுமா?"

இப்படி அவர் கிண்டலாகத் தூண்டிவிட்ட பின்தான் அவள் ஆசுவாசப்பட்டுக்கொண்டு என்னசொல்கிறேன் என்றும் எண்ணாமல் எழுந்தமானமாக, தான் கொண்டிருந்த தன்மான உணர்வோடு சொன்னாள்.

"அப்பு, நீங்கள் சொல்றது உண்மைதான். ஆனா, இப்ப ஏன்ர மனசு ஒருபோதும் சுகம் காணாதபடி நொந்து போச்சு. என்ர மனசை அவர் எப்பவோ சுட்டுப்பொசுக்கிப் போட்டார். இது சுட்டமண்... சுட்ட இந்த மண் ஒரு போதும் ஒட்டாது. ஆனபடியா, நீங்கள் இதில மினைக்கெடாதையுங்கோ... வேற சங்கதி இருந்தால் பறையுங்கோ"

கிழவனார் இப்போது கொஞ்சம் அட்டகாசமாகச் சிரித்தார்.

"பிள்ளை, இப்பதான் நீ குழந்தைப்பிள்ளையாட்டம் பேசியிருக்கிறாய். நீ நல்லாப் படிச்சுத் துறைகண்டனியெண்டுதான் நான் இம்மட்டு நாளும் நினைச்சிருந்தன். உப்படித்தான் கனபேர் படிச்சுப்பட்டம் பெற்றுப்போட்டு அந்தப்பட்டங்களையும் விட்டதாரியளாகக் கோட்டவிட்டிருக்கினம். வாழ்க்கையைச் சரியாகச் சொல்லாத படிப்பாலதான் எல்லாம் தலை கீழாப்போயிருக்கு... சுட்டமண் ஒட்டாதெண்டு எங்க படிச்சனி அப்படி எந்தமடையன் சொன்னவன்? சட்டமண்தான் ஒட்டி இறுகும். பச்சை மண் ஒரு போதும் ஒட்டாது. சுட்ட சங்குதான் வெண்மை தரும். உருக்க உருக்கத்தான் பொன்னும் மின்னும். பிரச்சனை வாறதே பாசத்தின்ர உச்னம்தான். உனக்கும் சண்முகத்துக்கும் உள்ள பாசத்துக்கு இந்தச் சீதனப் பேய் ஒரு பிரச்சனையாய் வந்ததே தவிர, இந்தப்பிரச்சனையால அந்தப் பாசம் இல்லாமல் போச்சுது என்பதும் அல்ல. பிரச்சனையைக் கண்டு ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. அதுக்கு முகங்கொடுத்தால்தான் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியும். தீர்க்கக் கூடியது எதுவோ அதுதான் பிரச்சனை. தீர்க்க முடியாத சங்கதி பிரச்சனையுமல்ல. இது தீர்க்கக் கூடிய பிரச்சனை. ஆனபடியால் இந்தப் பிரச்சனைக்கு முகங் குடுத்துத் தீர்க்கப் பாக்கிறதைவிட்டு தீர்க்கக் கூடிய இந்தச் சின்னப்பிரச்சனையைவிட்டு, தீர்க்க முடியாத சட்டப் பிரச்சினையைத் தேடிப்போவது எந்த விதத்தில் நேசிப்புத் தன்மையானது....?"

இந்தக் கட்டத்தில் அவள் நோக்கத்தினை அறிய விரும்பியதால் அவருக்கு நாக்கு வறண்டு தாகம் எடுத்த சாடை பாவனை பண்ணவேண்டியதாயிற்று. செம்புத் தண்ணியை ஒரு பாட்டம் மிண்டுவிட்டுத் தொடர்ந்து சொன்னார்.

"நீ உன்னை மட்டும் பாத்தாய். உன்ர சகோதரியை, உன்ர தாயாரை, உன்ர அயல் சனங்களை ஏன் உன் வயத்தில கருவாகிய உன்ர ரத்தமும் சதையுமான குழந்தைச் செல்வதைப் பாக்கவில்லை நேசிக்கவில்லை. இந்த நேசிப்பு அல்லது பாசம் இல்லாத ஒரு பிறவியாக நீ இருந்துகொண்டு, உன்னையே மட்டும் நினைச்சுக் கொண்டு வெறும் சுயநல இச்சைக்கு அடிமையாக இருந்ததாலதான் உன்னால அடுத்தவன்ர பிரச்சனையப் பாசத்தோடு அணுக முடியாமலிருக்கிறது. முதல்ல நீ உந்தச் சுயநலப் பிசாசான இச்சையின் மாயப்பிசாசை நீக்கிவிட்டு இந்த ஊரை உலகத்தைப் பார். உன்பெற்ற தாய், உடன் பிறந்த சகோதரி சகோதரன் உற்றம் சுற்றம் இன சனபந்துக்களெண்டு வேர் விட்டுப்போற எல்லாச் சனங்களையும் ஒருமுறை கண் துறந்து பார்... அப்பதான் ஒருவரையொருவர் புரிந்து பந்த பாசத்தோட சீவிக்கமுடியும். உனக்காகவே மற்றவர்கள் சீவிக்கவேணுமெண்ட உரை சுயநலப் பித்து உன்ர தாய் சகோதரங்களை எப்படியெல்லாம் சித்திரவதைக்குள்ளாக்கியிருக்கிறதெண்டு ஒரு தடவையெண்டாலும் யோசிச்சுப் பாக்காமல் முன்னமே சொன்னது போல இந்தச் சீவியத்தைப் பாக்காமல் வெறும் வாத்தைகளை வைச்சுக்கொண்டு அதுக்கு நுணுக்கம் பாக்க எத்தனிச்சு அதில நீ சுக திருப்தி கண்டதாலதான் இந்தச் சீரழிஞ்ச வாழ்க்கையில விரக்தியடைஞ்சுப்போய் தவிக்கிறாய்....

'முக்காலும் உண்மை' என்று அவள் மனசு இப்போது அடித்து சொல்லியதை அவள் முகபாவத்தில் புரிந்து கொண்ட கிழவன், அவளையே ஏறு கண் வைத்துப் பார்த்தார்.

விடுபடமுடியாத தனது மன அவஸ்தையை முறையாக நாடி பிடித்துச் சொன்ன கிழவன் இப்போது அவளுக்குத் தரகராகத் தெரியவில்லை இந்த வாழ்க்கையை இந்தச் சமுதாயத்தின் நெளிவு சுழிவுகளைச் சரியாக உணர்ந்த ஒரு மானிடதர்மவாத மேதாவிபோல் தோன்றினார். என்ற போதும், அவள் மனசில் கொண்ட சபலம் அவள் முகத்தில் தேங்கியிருந்தது.

"இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறியள்?"

இப்படி விரைவாக அவள் தன்னிடம் ஒருவழி மார்க்கம் கேட்பாள் என்று கிழவனார் எதிர்பார்க்காத போதும், கொஞ்மும் ஆசுவாசப்படாமல் சொன்னார்.

"சுட்டமண் இறுக்கமாக ஒட்டிப் பிடிக்கும். அதுபோல இந்த

ஒட்டுறவு உனக்குள் வந்தால் போதும். அடுத்த நிமிஷமே சண்முகம் இஞ்ச வந்து நிப்பான்...."

கிழவனார் எழுந்து முற்றந் தாவச் செல்கையில், அவரின் பாதச் சுவடுகள் அவள் கண்ணில் பசும் புஷ்பங்களாகத் தெரிந்தன.

மனசில் புதிய நம்பிக்கை துளிர்விட அவள் உள்ளம் பூரித்துச் சிலிர்த்தது.

கண்களில் வெளிச்சமான ஒரு கலங்கல்.

புத்தி பேதலித்தவனான ரஞ்சன் முற்றத்துப் பூங்கன்றுகளுக்குத் தண்ணீர் வார்த்து விளையாடியபடி கிழவனாரைப் பார்த்துச் சிரித்தான் சிரித்தவனாகவே நின்றான்.



## கோடீஸ்வரப்பிரபுவுடன் ஒரு சந்திப்பு

வாழ்க்கை என்பதன் அர்த்தம் என்ன? அது சொர்க்கமும் நரகமும் நிறைந்தது. இந்த நியதியை மாற்றுவதென்பது ஒரு போதும் முடியாத காரியம். சோஷலிஸ்டுகளோ அதனை மாற்றி அமைக்க முடியும் என அடித்து கூறுகிறார்கள். நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?"

இப்போதுதான் நான் மனம் வெளுக்கச் சிரித்தேன்.

என் நக்கரித்த சிரிப்பின் அர்த்தத்தை நான் யூகித்தவாறு புரிந்துகொண்ட தோரணையில் அவர் முகபாவம் இருக்கவில்லை. இவர் ஓர் அப்பாவி என்று ஒருவேளை அவர் என்னைக் கணித்தாரோ என்று தோணிற்று. நல்லதொரு முட்டாள் தன்னை மேதாவி என்று அபிநயத்துக் கொண்டு அநாயாசமாகப் பார்ப்பது போல் நெற்றியைச் சுருக்கிக் கைப்புடங்கால் முகத்தை அழுத்திய அவர், சற்றும் எதிர்பாராத கேள்வியொன்றைத் தூக்கிப் போட்டார்.

"கலாசாராம் என்று நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?"

# கோடீஸ்வரப்பிரபுவுடன் ஒரு சந்திப்பு

## 1

ஒரு பீடிகை

நெடிய வரலாற்றினைக்கொண்ட உலகப் பிரச்சினைகளை மனசிருத்தியபோது நீண்டகாலமாக என்னோடு கலை இலக்கிய அரசியல் சம்பந்தமாகச் சர்சைப்படும் ஒரு மனிதர் என்னில் உருவகமானார். அவரோ ஒரு கோடீஸ்வரப் பிரபுவாக என் மனக்கண்ணில் தோன்றினார். அவ்வாறு தோன்றிய இந்தப் பிரபு நீண்ட காலமாகவே என்னோடு ஈடுபாடு கொண்டவர்போல் திகழ்ந்தார். இவர்தம் பராக்கிரமங்கள், வீரதீர சாகசங்கள், மதிநுட்பத் தர்க்கங்கள், கலை, இலக்கியம், அரசியல், விஞ்ஞானம், வரலாறு, சட்டம், உளவியல், பாலுறவு, மனோ தர்மம், மொழி, இலக்கணம் ஆகிய துறைகளில் மேதாவியாகத் திகழ்கிறார். அன்றாடம் அவர் பற்றி இப்படியான செய்திகளும் அடிபட்டவண்ணம் இருந்தன.

உலகத்தின் தலைவிதியை மாற்றி அமைக்கும் தகைமைசான்ற புரட்சிகரச் சித்தாந்த மேதைகளையெல்லாம் நினைவிற் கொணர்ந்தேன். அத்தகையவர்கள் போல் இவரும் ஒரு மேதையாக இருப்பாரோ என்று அலசிய போது மனசு நெருடிற்று.

அந்த அறிவுலக மேதைகள் புதிய உலகத்தைச் சிருஷ்டிப்பதற்காக மகத்தான தியாகங்கள் புரிந்தவர்கள் என்பதை அறிவேன். ஆனால், இந்த மனிதரோ கோடீஸ்வரப் பிரபுவாகவிருப்பதால், சகல சௌகரியங்களும் உடையவராக இருப்பாரென்றும், இவர்தம் உணவு, உடை, வாழ்விடம், வாழ்க்கை யாவும் இவரை ஒரு தந்தக் கோபுரவாசிபோல் ஆக்கியிருக்கும் என்றும் கற்பனை பண்ணியபோது இவரை ஒரு சாதாரண மனிதராகக் கணிக்கவும் மனசு மறுத்தது. இவர் ஓர் அமானுஷ்ய மனிதராக இருப்பரென்றும், இவர் தோற்றம் நமது புராண இதிகாசங்களில் வரும் பூதகணமாக இருக்குமென்று அனுமானித்தேன். இப்பேர்ப்பட்ட மனிதரை

என்னால் அண்டமுடியுமா? என்ற ஐயம் என்னைக் குடைந்தது.

பல்லாண்டு காலமாக உலகத்தின் தலைவிதியைக் காலடியில் வைத்துச் சாம்ராஜ்ஜியம் நடத்திய ஆதிபத்தியத்தின் வாரிசான இந்தக் கோடீஸ்வரப் பிரபுவின் சொத்துக்கள், இருபது ஆண்டுகளாகப் பத்துக்கோடி மக்கள் சொகுசாக வாழப் போதுமானவை. இந்தக் கோடீஸ்வரப் பிரபு பதின்மூன்று தொழிற்சாலைகளுக்கு அதிபதியாக இருக்கிறாரெனவும், பதினாறு விமானங்களில் மூன்றைத் தவிர ஏனைய விமானங்கள் வாடகைக்கு விடப்பட்டவை என்றும், சுமார் அரைலட்சம் தொழிலாளர்கள் இவரின் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள் என்றும், அந்தரங்க ஆலோசகர்கள் பதின்மூன்றுபேர் தவிர, நவீன யந்திரசாதனங்களில் விற்பனைக்காக விசுவாசம் மிக்க தரகர்கள் எழுநூறு பேர் நாடுபூராவும் பரந்திருக்கிறார்கள் என்றும் அறியமுடிகிறது.

ஒரு மனிதனின் மூளையைத் திணறவைக்கும் இந்தச் சொத்துடமைகளை இந்தப் பிரபு எப்படித்தான் ஆண்டனுபவிக்கின்றாரோ? என்று வியப்புத் தெரிவித்த ஒரு பத்திரிகையாளனுக்கு, முன்னேறவேண்டும்மென்ற ஆசையைவிட அவற்றை அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் தான் முக்கியமானது என்று ஒழிவு மறைவின்றிப் பதிலளித்திருக்கின்றார். ஆக, இந்தப் பிரபுவை மட்டுக்கட்ட எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்ல.

இப்பேர்ப்பட்ட மனிதரான இந்தக் கோடீஸ்வரப்பிரபுவை இன்று சந்திக்கப் போகிறேன் என்று முடிவு எடுத்த பின்தான் எனது அறிவு, ஆற்றல், சாமர்த்தியம், சாணக்கியம், தந்திரோபாயம் என்பன அவருக்கு ஈடுகொடுக்குமா என்கிற சந்தேகம் எழுந்தது. கூடவே நடுக்கமும் எடுத்தது. இந்தச் சந்திப்புக்காக நான் செய்த ஏற்பாட்டைக் காட்டிலும், அவர் இதற்காக ஒரு நாளை ஒதுக்கி அனுமதி அளிப்பதால் அவருடைய லாப வருமானத்தின் இழப்பு அப்படியொன்றும் பிரமாதமாக இல்லை என்பதும் நம்பமுடியாத செய்திதான். சில மனிதர்களைப் பொறுத்தவரை நம்ப முடியாத செய்திகளையும் ஜீரணிக்கவே வேண்டியிருக்கிறது. அந்த ரகத்தில் இந்தப் பிரபுவைச் சேர்த்தியாக்குகிறேன்.

# 2

கொடுகி விறைத்துப்போன என் சடல விறைப்பு இன்னும் எடுபடவில்லை., மெல்லிய ஊதற்காற்று மேனியுள் சிலாம்புகிறது. சீதளப் பனிப்புகார் காற்றுடன் கலந்து காதுக் கணுக்குகளுள் புசுபுசுத்தது. நந்தவனத்தைச் சுற்றி அமைந்த வர்ணப் பூக்களின் வாசனை மூக்கிற் கமழ்ந்து நறுமணம் வீசிற்று. முற்றிலும் மலர்ச்செடிகளால் எழுப்பப் பட்ட மதிற் சுவர்கள் பங்களாவரை செங்குத்தாக நீண்டு செல்கின்றன. கோபுர வாசல்வரை கோடுகள் போல் பஞ்சுப் பொதிகளாகத் திகழும் பூமதில்கள் அடர்ந்துள்ளன.

நிலைகுத்தி நின்று தலைநிமிர்ந்து பார்த்தேன்.

வானளாவிய கோப்பிசம். அந்தப்பங்களாவின் மூன்று மாடிகளிலும் பக்கவாட்டு நிலையங்களிலும் எந்தச் சலனத்தையும் காணவில்லை. ஓரே அமைதி. சற்று வேளை ஊமை கண்ட கனவினன் போல் மிலாந்தி நின்றேன்.

அதிர்கின்ற வெடிமுழக்கங்களை விட அமைதியான சோகநிலை மிகப் பயங்கரமானது என்பதை அது உணர்த்திற்று.

இந்தப் பெரிய பிரமாண்டமான பங்களாவில் சூல்கொண்ட அமைதியான ஊமைத்தனம், மயான பூமிபோல் ஒரு பயப் பிராந்தியை ஊட்டிற்று.

ஒரு வேளை இடம் மாறி வந்துவிட்டேனா?

அழைப்பு மடலைப் பார்த்தேன். இம்மியும் பிசகில்லை. சாட்சாத் இதே பங்களாதான். வாசல் முகப்பு வரை நகர்ந்து நாலாபக்கமும் பார்த்த என் கண்ணில் எந்த மனித நடமாட்டமும் தெரியவில்லை. இருந்தும், வெகு பவ்வியமாக வாசற்படிகள் தாவி ஏறி நின்று அழைப்புக் குமிழை அழுத்தினேன்.

"ஆம், உள்ளே வாருங்கள்" என்ற இதமான குரல் திடுக்கிட வைத்தது. எனினும், என் மனசு குதூகலத்தில் ஆழ்ந்தது.

உள்ளே சென்றதும், இத்தனை தடல்புடல்களுக்குப் பிறகும் அவர் பணியாள்தான் என்னை வரவேற்பதா? என்று என்னுள் எழுந்த

ஆதங்கத்தையும் ச கொள்ளாமல் சாடையாகச் சிரித்தேன். அவர் பதிலுக்குப் புன்முறு பூத்தபடி சாந்தமான குரலில், "அதோ அந்தப் பூந்தோட்டத்தில் உள்ள கூடைக் கோடியில் ஒரு சிறு குடிசை தெரிகிறதே, அதுதான் அவர் வசிப்பிடம். அவர் தங்களை அங்கே அனுப்பி வைக்குமாறு எனக்குப் பணித்துள்ளார். தயவு செய்து நேரே அங்கு செல்லுங்கள்" என்று சைகை காண்பித்தார்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

என்ன அதிசயம், என்ன வேடிக்கை, என்ன விந்தையான மனிதர்? இந்தப் பெரிய கோடீஸ்வரப்பிரபு பெரும் பிரமாண்டமான பங்களாவை விட்டு ஒரு சிறுகுடிசையை வசிப்பிடமாக்கிக் கொண்டாரா?

கற்பனை பண்ணவே சிரமமாக இருக்கிறது. ஒரு வேளை சித்தபபிரமைபிடித்த மனிதராக இருப்பாரோ? என்று ஓர் ஐயம் என்னுள் எழுந்தது.

எனது வருகையை அவர் பணியாள் தொலைபேசியில் அறிவித்திருக்க வேண்டும். அந்த மனிதர் வாசலில் என்னை எதிர்கொண்டு நின்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நினைவுகளையும் கனவிற் காண்பதில் நான் விண்ணன். அந்த விண்ணத்துவமே அவரைக் கண்டதும் அடியோடு மறைந்துவிட்டது. ஒருசிறு அம்சம்கூட நான் கற்பனைபண்ணிய மனிதராக அவர் உருவம் இருக்க வில்லை.

ஆளை வறுகி எடுத்தாலும் பத்துச்சிறங்கை சதை தேறாது. புடங்குகளின் என்புக்கூடுகளில் விறைப்பான தசைச்சோணங்கள் திட்டுத்திட்டாக தொங்கிக் கிடக்கின்றன. புடைத்துக் கிடக்கும் நரம்புகள் தேகமடங்க வியாபித்துத் தெரிந்தன. வலிச்சலான தேகம். நரைத்துப்போன செம்மயிர்க்கற்றைகளை வாரிவிட்டிருந்தார். காதுகளில் கெம்பிய மயிர் பூஞ்சணமாகச் சிலிர்ப்புக் கொண்டிருந்தது. அறுத்துப்போட்ட பன்றி இறைச்சி மாதிரி அவர் சதிரம் குங்குலி ரத்தமாகத் தொளதொளத்துப் போய்கிடந்தது. எனினும், ஒரு வாலிப மிடுக்குத் துள்ளிற்று.

அவர் வயோதிபம் தெரியவில்லை. கருநீலவிழிகள் கமண்டலத்துள் இரு கண்ணாடிப் பேழைகள் போல் பளிச்சிட்டன. நெடிதாக ஒட்டி உலர்ந்த வலிச்சல் உடம்பு மிகக் கெட்டியாக இருக்கிறது. தேகத்தில் நரம்புகள்

புடைத்துக் கொண்டிருந்தன. ஏறுநெற்றியின் கீற்றுக் கோடுகள் கமண்டல உச்சி வரை தாவிக் கிடந்தன. ஒரு காத்திரமான சிரு ஷ்டி இலக்கியகர்த்தாவைப் போல் அவர்தம் பார்வை குண்டூசி மாதிரி என்னிற் பாய்ந்தது. சுமார் அறுபது வயசைத் தாண்டியிருப்பார். என்றபோதும், அவரின் கச்சிதமாய் சுறுசுறுப்பான கிருத்தியங்கள் ஒரு விடலைக்குரிய பாவனைகளை நினைவுட்டின.

"நீங்கள் மதுபானம் அருந்துவதுண்டா?"

இந்தப் பெரிய பிரபுவிடமிருந்து எடுத்த எடுப்பிலேயே இம்மாதிரி ஒரு கண்ணியம் மிக்க வினாவுடனான உபசரிப்புக் கிடைக்குமென நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

நாணங்கலந்த உணர்வுடன் சொன்னேன்.

"இருந்துவிட்டு எப்போதாவது அருந்துவதுண்டு"

கலகலத்துச் சிரித்தார். அவர் சிரிப்பு என் பதிலில் திருப்தி கொள்ளாதவராகக் காட்டிற்று.

கொஞ்சம் வெட்கமாக இருந்தது. நான் சமாளித்துக் கொண்டதை அவர் கவனித்தபோதும் அதனைக் காட்டிக் கொள்ளாமல் மறுபடி சிரித்தார்.

"உண்மையைச் சொல்லப்போனால் மது, மாது, சூது இந்த மூன்றையும் தீண்டாத எந்த மனிதனும் உலகத்தில் இல்லை. மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில் நாம் இவற்றை யதார்த்த நிலைப்பாடோடு கணித்து இதனை ஒரு மேன்மைக்குரிய செயலாகவும், இதனால் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லையென்றும் கருதுகிறோம்...."

நான் ஏதும் சொல்கிறேனா என்று கவனித்துவிட்டுச் சொல்கிறார்.

"உண்மை என்னவெனில், தங்களைப் போன்ற கீழைத்தேய மனிதர்கள் இவற்றை வெறுக்கத்தக்க கிருத்தியங்களாகவும், இவற்றால் தங்கள் வாழ்க்கை மாசுப்படுத்தப்படுகிறதாகவும் கருதுகிறார்கள். இவர்கள் இப்படிக் கருதுவதால் தங்களுக்கு இயல்பாக உண்டாகும் ஆசைகள், உணர்வுகள், ஆசாபாசங்கள் யாவற்றையும் இழந்தவர்கள் போல் பாசாங்கு காட்டிக்கொண்டே இதே செயல்களில் நாசுக்காக இறங்கிவிடுகிறார்கள். இந்த கிருத்தியங்களே அவர்கள் வாழ்க்கையில் இப்போது சம்பிரதாயங்களாகிவிட்டன. இவை பாவத்தின் வாசல் என்று சொல்லிக் கொண்டே இந்தப் பாவத்துக்குத் தம்மை அன்றாடம் உட்படுத்தாத

மனிதர்களை நீங்கள் எங்கேயாவது கண்டதுண்டா?"

"இவ்வளவு யதார்த்தபூர்வமாகப் பேச இவர் எங்கே கற்றுக்கொண்டார்?" என்ற வியப்பில் ஆழ்ந்தே போனேன்.

அவர் தொடர்ந்து சொன்னார்.

"உண்மையில் வாழ்க்கை சம்பிரதாயம் அல்ல, சம்பிரதாயம் வாழ்க்கையுமல்ல. சம்பிரதாயம் வாழ்க்கையானால் அந்த வாழ்க்கை முழுக்க முழுக்கப் போலியாகிவிடுகிறது. இந்தப் போலி வாழ்க்கை எங்களிடமிருந்து எப்போதோ தொலைந்து போய்விட்டதால்தான் நாங்கள் உலகிலேயே நாகரிகத்தின் உச்சத்திற்கு வந்திருக்கிறோம்....."

கொஞ்சம்கூடக் கூச்ச நாச்சமின்றி வாழ்க்கையைப் பச்சையாகச் சொல்லும் திராணி இந்த மனிதரிடம் எப்படி உண்டாயிற்று? நான் நினைத்ததைப் போல் இவர் அப்படியொன்றும் சோமாறிப் பேர்வழியல்லர் என்று தெரிகிறது.

'இன்றைய சந்திப்பில் நான்தான் முட்டாள்தனமாக நடந்துகொள்ளவேண்டி வருமோ?'

கிலி எனக்குள் சூல்கொண்டது. என்றாலும், நான் கொண்ட தத்துவபோதத்தின் நிபுணத்துவம் என்னை உசப்பிற்று. எனவே, சித்தாந்த மேதைபோல் சிரித்துக் கொண்டு அதே வேளை வெறும் பேயன்போல் பாவனை காட்டியவாறு சம்பாஷணையில் ஈடுபடலானேன்.

'மது போதையூட்டும் வஸ்து. மங்கை இன்பம் துய்க்கும் ஊற்றுக்கண். சூது மன ஆவலைத்தூண்டி வாழ்வை அழிக்கும் நச்சிரம். இவற்றை இடம், பொருள், ஏவல் அறிந்து கையாளும் வாழ்க்கைமுறையின் பண்பாடே எங்கள் கீழைத்தேய நாகரிகம்'

இவ்வாறெல்லாம் எடுத்து விளக்கி வைக்க எத்தனிக்கையில், அவர், "மன்னிக்கவேண்டும். நீங்கள் புகை பிடிப்பதுண்டா?" என்று கேட்டுக்கொண்டே, மதுப்புட்டிகள் மத்தியில் உள்ள டம்பரில் ஊதிய சிகரட் சாம்பலை நுனி விரலால் தட்டினார்.

"புகை பிடிப்பதுண்டு. ஆனால், அதற்கு அடிமையானதில்லை?" என்றேன்.

அவர் அதன் அர்த்தத்தைப் புரிந்தவராக சிரித்துக் கொண்டு, "நான்

அதற்கு அடிமைப்பட்டவனாக தெரிகிறேனா?" என்று விடுத்துக் கேட்டு என் முகத்தைப் பார்க்க, நான், "ஆமாம் அப்படித்தான் தெரிகிறது" என்பது போல் தலையாட்டினேன்.

எனது கூற்றுக்குப் பதிலுத்தாரமாக அவர் சொன்னார்.

"ஒன்றைக் கவனியுங்கள். ஒரு மனிதனால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு வாழ்க்கையில் கிடைக்கும் சகல இன்பங்களையும் அனுபவித்து விட வேண்டும். இது அவன் அடிப்படை ஜனநாயக உரிமைகளில் ஒன்று. இதற்காகத்தான் நாம் மக்களுக்குக் கங்குகரையற்ற சுதந்திரத்தை வழங்கியிருக்கின்றோம். இந்த உரிமைகளை மனிதர்களிடமிருந்து பறிப்பது கட்டுப்படுத்துவது சுதந்திரமோ ஜனநாயகமோ அல்ல. இதற்காகவே நாங்கள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பற்றி உலகம் பூராவும் அடிக்கடி உரத்துச் சொல்வதோடு அவற்றைப் பேணிப் பாதுகாத்து வருவதற்கான அரசுகளையும், அந்தந்த அரசுகள் மூலம் சட்டங்களையும் வகுத்திருக்கிறோம். விவகாரம் இப்படியெல்லாம் இருக்க, நீங்கள் இந்தச் சின்ன விசயத்திற்கே அடிமைத்தனம் என்ற வாக்கைப் பிரயோகிக்கிறீர்கள். சுதந்திரம் என்பது எல்லையற்றது. எந்த ஒரு மனிதன் மட்டிலும் அதனை ஒரு வரையறை செய்து வைத்து அனுபவிக்க முடியாது. அதனால்தான் எந்த ஒரு மனிதன் வாழ்க்கையில் மட்டுமல்ல, எதிலும் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை வழங்குவதில் முன்னிற்கிறோம்"

எனக்கு மெய்யாகவே மூளை கலங்கிற்று. நான் எதையோ சொல்ல, இந்த மனிதர் எதையோவெல்லாம் சம்பந்தமில்லாமல் அழகான வார்த்தைகளை அர்த்தமில்லாமலே அடுக்கிச் செல்கிறார். இவர் பேச்சில், சிக்கல் உண்டே தவிர, விளக்கமோ வழிமார்க்கமோ இருப்பதாக தெரியவில்லை. இப்படிச் சிக்கற்படுத்துவதுதான் சாணக்கியமா?' என்ற சந்தேகம் எழுந்தது.

"சுதந்திரம் ஜனநாயகம் பற்றிய உங்கள் கருத்து என்ன? என்று என்னிடம் கேட்க மாட்டாரா?" என்கிற எதிர்பார்ப்பில் இருந்த என்னை அவரின் அடுத்த கணை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

"மதுபான ரசத்தையோ, மங்கைகளையோ, சூதாட்டக் களியாட்டங்களையோ அனுபவிக்கும் சுதந்திரம் வழங்கப்படாதவிடத்து உங்களுக்கு இந்த மனோபாவம் ஏற்பட்டதா? உங்கள் மனோநிலை அறிந்து இத்தகைய இன்பசுக லாகிரிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதா? இந்தச்

சுகானுபவங்களை அனுபவிப்பதற்கு ஏற்ற பக்குவம் இல்லையென்று கருதப்பட்டதால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டனவா...?"

இந்த மனிதர் மனோவிகாரம் பிடித்தவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், கோடானுகோடி மக்களின் வாழ்க்கை அதள பாதாளத்திலும் ஒருசில மனிதர்களின் வாழ்க்கை உல்லாசபுரியிலும் மேடுபள்ளமாக அமைந்திருக்கிறபோது, அதனைத் தெரியாதவர்போல், அந்த வாழ்க்கையின் கோரத்தைப்பற்றி ஒரு வார்த்தைக்கூடப் பேசாமல், அந்த உணர்வே இல்லாமல், ஒரு சில மனிதர்களின் இச்சாபூர்வங்களில் மட்டும் மூழ்கியிருப்பாரா? இவர் கருதும் சுதந்திரமும், ஜனநாயகமும் யாருக்காக?

என் முகத்தில் படர்ந்த வெளுப்பின் சாயலை அவர் கவனித்திருக்கவேண்டும்.

கலகலத்துச் சிரித்துக்கொண்டே, "நான் வாழ்க்கைக்கு வேண்டாத விசயங்களைச் சுற்றி வளைத்துச் சம்பாஷிக்கிறேன் என்று நினைக்கிறீர்கள். உண்மையில் வாழ்க்கைக்கு எது தேவையோ, எது முக்கியமோ அதைப் பற்றிதான் நான் பேசுகிறேன். இவற்றை ஒரு சிலரே அனுபவிக்கிறார்கள் என்பதால், இந்தத் தேவை முக்கிய மற்றதாகிவிடுமா" சரி, இது உங்களுக்குப் பிடித்தமில்லை என்று கருதுகில் அதை இன்னோர் கட்டத்தில் பேசிக் கொள்வோம்" என்றார்.

ஒரு காலை மடக்கி மறு கால் மேல் அட்டணமாகப் போட்டுக் கொண்டு மறுபடி கேட்டார்.

"வாழ்க்கை என்பதன் அர்த்தம் என்ன? அது சொர்க்கமும் நரகமும் நிறைந்தது. இந்த நியதியை மாற்றுவதென்பது ஒருபோதும் முடியாத காரியம். சோஷலிஸ்டுகளோ அதனை மாற்றி அமைக்க முடியும் என அடித்துக் கூறுகிறார்கள். நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?"

இப்போதுதான் நான் மனம் வெளுக்கச் சிரித்தேன்.

என் நக்கரித்த சிரிப்பின் அர்த்தத்தை நான் யூகித்தவாறு புரிந்துகொண்ட தோரணையில் அவர் முகபாவம் இருக்கவில்லை. இவர் ஓர் அப்பாவி என்று ஒருவேளை அவர் என்னைக் கணித்தாரோ என்று தோணிற்று. நல்லதொரு முட்டாள் தன்னை மேதாவி என்று அபிநயித்துக் கொண்டு அநாயாசமாகப் பார்ப்பதுபோல் நெற்றியைச் சுருக்கிக் கைப்புடங்கால் முகத்தை அழுத்திய அவர், சற்றும் எதிர்பாராத கேள்வியொன்றைத் தூக்கிப்

போட்டார்.

"கலாச்சாரம் என்று நீங்கள் எதனை கருதுகிறீர்கள்

நான் விக்கித்துப்போனேன். இதுகாறும் எமது கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் என்று பேணிப் புகழ்ந்து வந்த கிருத்தியங்கள் எல்லாம் யந்திர வளர்ச்சியால் செல்லாக்காசாகிவிட்டன. வாழ்க்கையைச் செழுமைப்படுத்துவதற்கான நாகரிகம் இன்று மாறுபட்டுத் தலைவிரித்தாடுகிற கோலத்தில் தோற்றவிக்கப்படுவதால், அது எத்தகைய அசூசையானது என்பதும், இக்கலாச்சாரம் வாழ்க்கையை முற்றுமுழுதுமான போலியான பழக்க தோஷத்திற்கு இட்டுச் செல்கின்ற மந்திரச் சொல்லாகிவிட்டது என்பதும் புலனாகிற்று.

ஆக, கலாசாரம் என்பதனை, அவர் ஒப்புக்கொள்ளும் விதத்தில் எவ்வாறு அர்த்தபுஷ்டியாக வெளிப்படுத்துவது என்று யோசிக்கலானேன்.

எனது நீண்ட கால அனுபவங்களைப் புடமிட்டுப் பார்க்கையில், கலாசாரம் என்று சொல்வதெல்லாம் வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் தன்னை மகிழ்விப்பதற்காக, அவனவனே தன்தனக்கு ஏதோ ஒரு வகையில் நிரந்தர மவுசு தேடுவதற்காக தன் தன் வசதிபோல் ஏற்படுத்திக்கொண்ட வைபவங்களைத் தவிர வேறொன்றும் இல்லை. மனிதனின் தேவைகளைக் கடந்து மவுசுக்காகவே உண்டான இச்சம்பிரதாயங்கள் பூராவும் அறியாமை பெற்றெடுத்த குழந்தைகளாகும். சில வேளை மனிதனின் விஞ்ஞான அறிவு சான்ற ஆய்வுக்களாக நிகழும் வைபவங்களாகவும் திகழுகின்றன.

இதனை இந்த மனிதருக்கு வகைப்படுத்தி வைப்போமா? என்று அதற்கான ஆதாரங்களை மனசில் உருப்போட்டுக் கொண்டிருந்தேன்.

அவர் சிரித்தவாறு கேட்டார்.

"பல முட்டாள்கள் தங்கள் வாழ்வைச் சீரழித்துக் கொண்டு அந்த அழிவில் நின்று தம்மைச் சுயம்புவாகப்பிரகடனப்படுத்துவதே கலாச்சாரம் என்றாகியபின்னும், தொடர்ந்து அதுபற்றி விஸ்தரிப்பதானது வேடிக்கையான விஷயமாகத் தெரியவில்லையா?"

நான் வாயடைத்து நின்றேன்.

சிறந்த முற்போக்குவாதிபோல் நல்ல கருத்தைச் சொன்ன இந்த அறிவாளி, கலாச்சாரங்கள் அனைத்தையும் ஒரே தன்மையாகப் பார்க்கும்

தோரணையை நோக்குகையில், அடிமுட்டாள்தனமாகப் பேசும் சிறுவன் போலவும் இருக்கிறாரே என்று எண்ணியபோது அவர் வினாவும் ஒரு தமாஷாகப் பட்டது.

நான் ஒரு கணை தொடுத்தேன்.

"கலாச்சாரம் வாழ்க்கை நிலையிலிருந்தே வெளிப்படுகிறது. வாழ்க்கையை மனிதன் எப்படி வகுத்துக்கொண்டான் என்பதிலிருந்தே அதற்கு அர்த்தம் உண்டாகிறது. வாழ்க்கையை விஞ்ஞானபூர்வமாகப் பார்க்கின்றபோது கையாளப்படும் கலாச்சாரம் ஒருவிதமாகவும், விஞ்ஞானத்தை நிராகரித்துப் பார்க்கின்ற போது கையாளப்படும் கலாச்சாரம் வேறுவிதமாகவும் அமைந்துவிடுகிறது. இதில் ஒன்று பொய்மையான தோற்றத்தோடு மனிதனை ஆட்டிப் படைக்கிறது. சிக்குண்ட மனிதன் தன்னைத்தானே சீரழிப்பதோடு அடுத்தவனையும் அதற்குள் தள்ளிவிட முனைகிறான். இதற்கெல்லாம் காரணம் அவன் தான் பார்க்கிற உலக அறிவைப் பெறுவதற்குப் பதிலாக, பார்க்காத பரலோகத்தைப் பற்றிப் பீற்றிக்கொள்வதுதான். படைப்புகள் பற்றியும், படைப்பாளன் பற்றியும் அறியவேண்டிய மனிதன் இவற்றை அறியும் திராணி அற்று வாழ்க்கை நிலையைக் கண்டு பிரமித்துப் போய் சித்தங்கலங்குவதோடு, பயப்பிராந்தியால் தனக்கே புலனாகாத வேறு உலக மனசால் படைத்துவிடுகிறான். இவனுடைய அறியாமை பெற்ற குழந்தையே இவனை ஆட்டிப் படைக்கிறது. இதில் சுகங்காணத்திரியும் மனிதன், கானல் நீரில் தாகம் தீர்க்க அலையும் மானினம் போல், தானும் அலைந்து அடுத்தவனையும் அலையச் செய்ய மாய்கிறான். அதனால் வாழ்க்கை துன்பக் கேணியாகிவிடுகிறது. இந்தத் துயரங்களைப் போக்க இவன் கற்பிதம்பண்ணிய அநாசாரங்களையே கலாச்சாரங்களாக்கிக் கொள்கிறான். இந்தக் கலாச்சாரங்களே இன்று வாழ்க்கையை அர்த்தமற்றதாக கேலிக் கூத்தாக மிலேச்சத்தனமாக ஆக்கிவிட்டிருக்கிறது. இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

மூளை மயங்கியவர் போல் திக்பிரமைகொண்டு எழுந்து நின்று எதையோ சிந்திக்கிற பாவனையில் இவர் புன்னகைத்த விறுத்தம், என்னிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை என்பதைக் காட்டிற்று. எனினும், இவர் ஏனையோர் போல் புரியாத விஷயங்களைப் புரிந்து கொள்வதாகப் பாசாங்குகாட்டும் அபாசப் பேர்வழி அல்ல என்பதில் எனக்கு ஐயம் இருக்கவில்லை. விஷயத்தைக் கிரகிக்கத் துடிக்கின்ற காந்தக் கண்கள் அவர்பால் இருந்தன. ஒருவேளை கலாச்சாரம் பற்றிய

விஷயங்களை நான் எடுத்துச் சொன்ன தோரணையில் புரியாமல் பிரமைபிடித்து நிற்கிறாரோ? என்றும் எண்ணத் தோன்றியது.

மனிதனின் உன்னத வாழ்வுக்கான கிருத்தியமே கலாச்சாரம். அப்படியிருக்க, அதனைத் தனக்கே தெரியாத மாயாஉலகின் மோஸ்தராக்கிவிட்ட இந்த மனிதர்கள் மீது உண்டான வெறுப்பைக் காட்டிக்கொள்ளாமலே, இதற்கான காரண காரியத்தை இவர் அறிந்து வைத்திருப்பார். அதனைப் பரிசோதிக்க என் மனசு தூண்டிற்று.

அவர் சரஸ லீலையில் மூழ்கிய ஒரு சல்லாப நங்கையைப் போல் திமிறிச் சிரித்துக் கொண்டு சொல்கிறார்.

"கலாச்சாரம் பற்றி நீங்கள் நாங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆனால், நாங்கள் இந்தப் பேர்வழிகளை நம்பியே எங்கள் மூலதனங்களை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம். சற்று விரிவாகச் சொல்வதானால், இப்படியான முட்டாள்களை நாங்கள் உற்பத்தி பண்ணவில்லையென்றால் எங்கள் உயர்பீட சாம்ராஜ்ஜியங்கள் எப்பவோ அஸ்தமித்து விடும். அதனால்தான் கற்பனாலோகத்தைப் பற்றியே சிந்தித்தபடி, உலகப்பிரச்சினைகளை முற்றாக மறந்து போகும் பிறவிகளை இத்தகைய கலாச்சாரங்கள் மூலம் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். இந்த விஷயத்தில் நாம் கையாளும் பிரச்சாரங்கள் மிருக இச்சையைவிட ஆபாசமானதுதான். ஆனால், இவற்றை நெகிழ்த்தினால் எமது நோக்கம் பிசகிவிடும். எனவேதான் நாங்கள் கலாச்சாரத்திலும் இச்சாபூர்வ ஆபாசங்களை வளர்த்துவிடுவதோடு, இவர்களையே, விவேகமுள்ள பெரிய மனிதர்கள் என்றும் பறைசாற்றிக் கொள்கிறோம். ஒன்றைக் கவனியுங்கள். நாம் சிருஷ்டிக்கும் அபூர்வ மனிதர்களுள் நீதபதிகள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள்கள் என்றெல்லாம் அடங்குவர். இவர்கள் அனவருமே எங்கள் கூலி உழைப்பாளர்களாக இருப்பதை இவர்களே அறியாமல் இருக்க, இவர்களை மாயத்திரை போட்டுக் கட்டிவைக்கும் மந்திரசக்தி எங்களிடம் உண்டு. அதுதான் மதம்......"

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

என்னைப் போலவே மதம் பற்றிப் பிசகின்றி அறிந்து வைத்திருக்கும் இந்த மனிதர், தனது வர்க்கக்குணாம்சங்களை இப்படியெல்லாம் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறாரே. குழந்தைத் தன்மையுடைய

இந்த மேதாவியால் ஒரு கோடீஸ்வரப்பிரபுவாக இருக்க எப்படி முடிகிறது?

எனது வியப்பினைப் புரிந்துகொண்ட அவர் தொடர்ந்து சொன்னார்.

"ஒருவன் எப்பேர்ப்பட்ட புத்திசாலியாக இருந்தபோதும், விஞ்ஞான ரீதியான வரலாற்றுடன் சமுதாயத்தைப் பார்க்கத் தெரியாவிடின், மதச் சேற்றுள் அமிழ்ந்திப் போய் விடுகிறான். இச்சேற்றுள் புதையுண்டவனின் மேதைத் தனங்கள் எத்தகைய உன்னதமாயினும் அவை அவனை இந்தச் சமுதாயப் பிரச்சினையிலிருந்து முற்றாக நீக்கிவிடுகின்றன. இதே மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட மதங்கள் லட்சக்கணக்கான தெய்வங்களையும் தோற்றுவித்து யுத்தக் களத்தில் இறக்கிவிட்டுள்ளன. மதங்களின் வரலாறே தெய்வங்களின் யுத்தங்களாக ஆக்கிவிடப்பட்டிருக்கும் போது, அவற்றில் மூழ்கிப்போன ஒவ்வொருவனும் உலகத்திற்குப் போதனை செய்கிறவனாகிவிடுகிறான். இதனால் மதபோதகர்கள் சமுதாயத்தில் நல்ல மனிதர்கலாக ஊசாடமுடிகிறது. இவர்களை நாம் தெய்வ தொண்டர்களாகவும் போதகர்களாகவும் உற்பத்தியாக்கிடுகிறோம். இவர்களைக் கொண்டு வீணர்களையும், விறுத்தாப்பியர்களையும், உதவாக்கரைப் பேர்வழிகளையும் உற்பத்தியாக்கிவிடுவது ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கலை கலாச்சாரங்களே சமுதாயத்தில் வியாபித்திருக்கின்றன. கலை இலக்கியங்கள் பொழுதுபோக்கிற்காக என்ற சுலோகத்தின் பின்னணியும் இதுதான். மதங்களின் வழிப்பாட்டு முறைகளைக் கலாசாரங்களாகவும், இந்த கலாசாரங்களின் வெளிப்பாடாகக் கலைகளையும் ஆக்கிவிடப்பட்டிருப்பதால் புத்தி பேதலித்த ஜனக்குழாமை இலகுவாக உற்பத்திசெய்து விடுகிறோம். இப்பேர்ப்பட்டவர்களை நம்பியே எமது சுரண்டல் அமைப்பைப் பாதுகாததுக் கொள்ள முடிகிறது.. மத ஆசாரங்களால் ஆணாதிக்கத்தை வலுப்படுத்தும் கைங்கரியமாகக் கீழைத்தேச நாடுகளில் பெண்களை உடன்கட்டை ஏற்றி உயிர்க்கொலைபுரிவதை மகத்தான கலாச்சாரமாக ஆக்கி விட்டிருந்தோமென்றால் பாருங்களேன்..."

'அட சண்டாளா... கொஞ்சமும் ஈவிரக்கமின்றி, உயிர்க்கொலை பாதகத்தையும் கலாச்சாரமாக்கிவிட்டதை வேடிக்கையாகச் சொல்லும் இந்த மனிதன் நெஞ்சுள் இதயமா இரும்புத்துண்டா?'

நீருபூத்த நெருப்பினன் போல் கனன்று அவரை ஏறெடுத்துப் பார்த்தேன்.

அவரோ ஒரு பரமசாது போல் எழுந்து மதுப்புட்டியை எடுத்து

வாயிலூற்றிவிட்டுப் பொச்சடித்துக்கொண்டே, "ஒரு டோஸ் அடியுங்களேன்" என்று என்னை மெளடீகமாகப் பார்த்துப் புன்னகைத்தார்.

இப்பேர்பட்ட பாதகச் செயல்களுக்கு வழிசமைத்துக் கொண்டே, உலகத்துக்கு நீதியைப் போதிக்க உங்களால் எப்படி முடிகிறது? உங்கள் நீதி, நேர்மை மனச்சான்று, போதனை யாவும் வெறும் போலிகளல்லவா? என்று சாடி, அவர் வேஷங்களை அம்பலப்படுத்துவோமா என்று யோசித்தேன். ஆனால், அவர் அப்படி ஒன்றும் வேஷதாரியாகவும் தெரியவில்லை. எதையும் பட்டவர்த்தனமாகச் சொல்கிறார். மூளை குழம்பிப்போன நிலையில் அவர் ஆசனத்தில் அமர்ந்து சிகரட் புகையை இழுத்துக் கொண்டு, நான் கூறியவற்றிலிருந்து நீங்கள் என்னை ஓர் ஈவிரக்கமற்ற மனிதர் என்று கொள்வீர்கள், அப்படித்தானே?" என்று வினவி, நெற்றிபுருவம் சுருக்கி என்னை நீவிப்பார்த்தபோது, அவர்மட்டில் என் கணிப்புச் சரியாகவே பட்டது.

வேஷதாரியல்ல. ஆனால், கருமம் என்னவோ நீசத்தனந்தான். எனவே, அவர் சார்ந்த வர்க்கக் குணவியல்புகளையும், மோசடிகளையும், குரூரங்களையும் அம்பலப்படுத்த எத்தனிக்கையில் அவர் தொடர்ந்தார்.

"அப்பட்டமாகச் சொல்வதாயின் நாங்கள் மதங்களாலும், கேளிக்கைக் கலை இலக்கியங்களாலும் உலகத்தில் ஜனங்களை முட்டாள்களாக புத்திசுயாதீனமற்றவர்களாக ஆக்கிவிடுவதற்குக் காரணமே, அவர்கள் மீது நாம் கொண்டுள்ள பாச உணர்வும் நேச உறவுமே தவிர, ஈனச்செயல்களுக்காக அல்ல. இந்த உலக்தின் சுமைகளை நாம் எடுத்துக்கொண்டு, அப்பேர்ப்பட்டவர்களை அதே சுமைகளிலிருந்து நீக்கிவிடுகிறோமல்லவா? அதனால்தான் அவர்கள் நொந்து உழைக்கவும், பொழுது போக்கவும், தன்னிச்சையாக வாழவும் 'சுதந்திரம்' வழங்கியிருக்கிறோம். ஒருவர் வாழ்வு இன்னொருவரில் தங்கியிருக்கும் முறையை அவர்கள் சர்வ சுதந்திரமாக அனுபவிக்கும்போது ஜனநாயகவாதிகளான நாம் அதில் தலையிடுவதில்லை. சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பது எங்கள் லட்சியமாதலால், இது ஒரு கடமையாகிறது. எங்கள் இந்தப் போக்கைக் கர்ணகடூரமாக எதிர்ப்பவர்கள் கம்யூனிஸ்டுகள் மட்டும்தான்...."

இந்த கட்டத்தில் அவர் முகம் விகாரித்துக் கொண்டது.

செட்டை கழற்றிய பாம்பின் கோலம்போல் அவரிடமிருந்த விஷம்

மெல்ல வெளிப்பட்டபோது, உண்மையில் நான் உள்ளூர மகிழ்ச்சியடைந்தேன். இப்பொழுதுதான் அவர் என் பிடிக்குள் வாறாகச் சிக்கிக்கொண்டார்.

என் கண்கள் அவரை மினவி விழுங்கின.

## 3

யந்திர சாதன வளர்ச்சியற்ற ஆதிப்பொதுவுடமை அமைப்பிலிருந்து அடிமை, பிரபுத்துவ, சமுதாயங்களைத் தாண்டிய உலகில் பல்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் புரிந்து வந்த அமைப்பின் முரண்பாட்டைத் தக்க விதமாக இயக்கி, முதலாளித்துவத்தை உலுப்பிச் சோஷலிச அமைப்பைத் தோற்றுவிக்கவே, இச்சமுதாயத்தை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து சகல கொடுமைகளிலிருந்தும் மக்களை விடுவிக்கப் போராடுபவர்கள் கம்யூனிஸ்டுகள். இதைத் தெரிந்தும், ஜனநாயகத்திற்கும் சுதந்திரத்திற்கும் அவர்கள் எதிரிகள் என்ற தோரணையில் பேசும் இந்த மனிதர் இதுகாறும் தெரிவித்த கருத்துகள் கொஞ்சமும் தர்க்கவியலுக்குப் பொருந்தாதன.

"முதலாளித்துவ ஜனநாயகத்தில் மக்களுக்குள்ள சுதந்திரம் என்ன?" என்று ஒரு கொக்கியைப் போட்டேன்.

அவர் நிலைதடுமாறி ஒருகணம் திகைத்து நின்றார்.

தொழிலாளர்களின் உழைப்பையும் உணர்வுகளையும் அன்றாடம் நசுக்கிச் சுரண்டிக் கோடீஸ்வரப் பிரபுவாக உயர்ந்திருக்கும் இந்த மனிதர்கள், ஜனநாயகம், சுதந்திரம், மனிததர்மம் என்றெல்லாம் பேசுவதற்கு உரிமையற்றவர்கள். இப்பேற்பட்ட இந்த மனிதருடன் ஆழமாகச் சம்பாஷித்து இவர் வேஷத்தைக் கலைப்பதோடு இவர்தம் வர்க்கக் குணவியல்களை இவர் வாயாலேயே கக்க வைக்கத் திடங்கொண்டேன்.

"உங்கள் தொழில் ஸ்தாபனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நீங்கள் ஒருநாளைக்கு வழங்கும் ஊதியம் எவ்வளவு?"

அவரது உயிர் மூச்சான மூலஸ்தானத்தைத் தொடுகின்ற இந்தக் கேள்வியை அவர் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

"எந்தத்தொழிலாளியும் ஒரு நாள் முழுக்க வேலை செய்வதில்லை. அப்படியிருக்க, ஒரு நாள் ஊதியத்தை எப்படிக் கறாரானகச் சொல்வது?

சுரண்டற்பேர்வழிகள் விஷயத்தை வழக்கமாகச் சிக்கற்படுத்தி வேறு விஷயத்திற்குத் திசை திருப்பி அதில் குளிர்காயும் தோரணை அவர்தம் அர்த்தமற்ற மழுப்பலில் ருசுவாயிற்று.

"சரி, தொழிலாளி ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்?"

"எட்டு மணி நேரம்"

"அவர் எட்டு மணி நேரம் வேலை செய்வதற்காக ஒரு நாள் செலவிடும் நேரவிரயம், இருப்பிடம், போக்குவரத்துச் சாதனங்களால் அதிகரிப்பதை நீங்கள் கணக்கில் எடுப்பதுண்டா?"

"இல்லை"

"ஏன்?"

"அது எங்கள் விவகாரம் அல்ல"

"ஆனால், ஒரு தொழிலாளி எட்டுமணி நேரம் வேலை செய்வதற்காகப் பிரத்தியேகமாச் செலவிடும் நேரத்தை அவர் பொறுப்பில் விடுவதோடு வைத்திய லீவு, கட்டாய லீவு, தற்காலிக லீவு, காலங்களில் ஊதியம் வழங்காமல் விடுவதானது, அவர் ஓய்வே இன்றி வருஷம் பூராவும் யந்திரமாக இயங்க வேண்டும் என்று நீங்கள் மறைமுகமாக நிர்ப்பந்திருக்கிறீர்கள் என்றாகிறது. அப்படித்தானே?"

இவ்வாறான சூட்சுமத்தை நான் வெளிச்சமாகிய போது அவர் முகத்தில் நெய் வளிந்தது. வெலவெலத்துப் போன அவர் கண்கள் மோக லாகிரிகொண்ட வேல்விழியாள்போன்று வெளிறின. ஆயினும், இவற்றைக் காட்டிக் கொள்ளாமல் அசைவற்று நின்றார்.

தொடர்ந்து பேச்சை ஆரம்பித்தேன்.

"எட்டுமணிநேரம் வேலைசெய்யும் ஊழியருக்கு நீங்கள் வழங்கும் ஊதியம் என்ன?"

"இது ஊழியரின் வேலைநேரத்தைப் பொறுத்தல்ல, அவர் செய்யும் வேலையைப் பொறுத்தது"

"உதாரணம்......?"

"ஒரு விரிவுரையாளர், ஆசிரியர், விஞ்ஞான ஆ.ய்வகர், டாக்டர்,

இஞ்சினியர் ஆகியோரை எடுத்துக்கொள்வோம். அவர்களும் ஊதியம்பெறுகின்ற ஊழியர்கள்தாம். அவர்கள் சேவை மூளை உழைப்பாதலால் அவர்கள் உடல், உள்ளம், மனம் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். வேறு எந்தச் சிந்தனையிலும் சிக்காத வாழ்க்கை முறை அவர்களுக்கு வேண்டியிருப்பதால் ஊதியமும் அவர்களைச் சிக்கற்படுத்தாதவரை வழங்கப்படுகின்றன. உடலுழைப்பாளர்களின் நிலை அப்படியில்ல..."

எனக்குச் சிரிப்பு வந்தது.

அவர் நேரடியாக பதிலிறுக்காமல் மழுப்புவதையும், அவரின் மன அவசம் அவரையறியாமலே வெளிப்படுவதையும் அவதானித்த நான், அவர் மனம் கோணாமல் பிசகின்ற அவரே ஒப்புவிக்கும் படியான கேள்வியைச் சரமாரியாகத் தொடுத்தேன்.

"ஒரு தொழிலாளியின் எட்டு மணி நேர வேலைக்கான ஊதியத்தைக் கேட்டேனே தவிர, தொழில்களின் தாற்பரியங்களையோ தராதர அந்தஸ்துப் பற்றியோ அல்ல. நீங்களோ, மூளை உழைப்பாளர்கள், உடல் உழைப்பாளர்கள் என்று பேதப்படுத்திப் பிரித்துப் பேசுகிறீர்கள். டாக்டர்கள், இஞ்சினியர்கள், நீதிபதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் என்கிற புத்திஜீவிகளும், உடல் உழைப்பாளிகளான தொழிலாள விவசாயப் பாட்டாளி மக்களும் ஒரேவிதமான மூளை உழைப்பாளர்கள்தாம். இந்த உலகத்தில் சகல பெண் ஆண் உழைப்பாளர்களும் புத்திஜீவிகள் தாம். அவர்களின் மூளைகளிருந்தே சிந்தனைகளும், உணர்வுகளும், கருவூலங்களும் தோன்றுகின்றன. மலசலகூடத்தைச் சுத்தஞ்செய்யும் வேலையாளும், டாக்டரும் தொழிலாளர்கள்தான். இவர்கள் செய்யும் தொழில் வினைப்பாடுகளும் உணர்வுகளும் வேறுபடலாம். ஆனால், இருவரும் தொழிலாளர்களே. நான் கேட்பது, உங்கள் தொழிற்சாலைகளில் எட்டுமணி நேர வேலைபார்க்கும் தொழிலாளிக்கு நீங்கள் வழங்கும் ஊதியம் என்ன?" என்பது தான்?"

இருந்தவாக்கில் அவர் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார். நெற்றிப்புருவத்தைக் கைப்புடங்கால் அழுத்தினார். முகத்தில் அப்பிய சோகை மீள ஒரு வரட்டுச் சிரிப்பை உதிர்த்தார். இதற்கு மேல் அவரால் பாசாங்குசெய்ய முடியாது என்று யோசிக்கையில், நான் எதிர்பாராத ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

"நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட்டா?"

நான் கேட்டேன்.

"நீங்கள் எப்படிக் கணிக்கிறீகள்?"

அவர் பாணியில் நானும் நேரடிப் பதில் சொல்லாமலே அப்படிக் கேட்டு வைத்தேன்.

அவருக்கு விஷயம் வெளித்திருக்க வேண்டும் இல்லாவிடில் இம்மாதிரிக் குழப்பியடித்திருக்கமாட்டார்.

மனிதகுலம் இன்பமாக வாழும் தர்ம முறையை, சமதர்ம சாமாஜ உலகை, சகல கொடுமைகளிலிருந்தும் மக்கள் மீள்வதற்கான மார்க்கத்தை, அதனோடு பிரசவிக்கின்ற புதிய சமுதாயத்தை, கருச்சிதைவு ஏற்படாமல் மருத்துவிச்சிபோல் உயிர்ப்பிக்கின்ற புரட்சிகர கம்யூனிஸ்டுகளாகவிருப்பதில் உள்ள மன நிறைவும் பெருமைக்குரிய விசயமும் வேறுண்டா?

ஆனால், அவர் என்னை "ஒரு கம்யூனிஸ்ட்டா?" என்று கேட்டவிதம் வேறு வகையாகத் தோணிற்று.

கலை, இலக்கியம், கலாச்சாரம், விஞ்ஞானம், சமுதாயம் பற்றியெல்லாம் விஷயஞானத்தோடு வெளுத்து வாங்கியதெல்லாம் முழுப்போலியானது என்று நான் தெரிந்துகொண்டே தன்னுடன் சம்பாஷித்தேன் என்பதை அவர் யூகிப்பதாக எனக்குப்பட்டது. அவர் பேச்சின் மழுப்பலும் விவகாரத்தை வேறு திசைக்குத் திருப்பும் அவர்தம் வர்க்க சுபாவமும் இதனை அர்த்தப்படுத்தின.

தொழிலாளர்களையே வஞ்சித்து சொகுசாக வாழும் செல்வச் சீமான்கள் சமதர்மவாதிகள் போல் தொழிலாளர்களுடன் சல்லாபித்துச் சம்பாஷித்தாலே, முதலாளிகள் மிக நல்லவர்கள் என்று தங்களை மேலும் சுரண்டுவதற்கு வழிசமைத்து நிற்கும் வர்க்கக் குணாம்சம் இழந்து தொழிலாளர்கள் கருதுவதால்தான் இத்தகைய வார்த்தையை என்னிலும் பிரயோகித்தாரோ?

எனினும், நான் விடவில்லை.

"பிகு பண்ணாமல் நேரடியாகச் சொல்லுங்கள். எட்டுமணி நேர வேலைக்கு நீங்கள் கொடுக்கும் ஊதியம் எவ்வளவு?"

"ஏன் ஊதியம் என்று கேட்கிறீர்கள், சம்பளம் என்று கௌரவமாகச்

சொல்லலாமே?"

உண்மையில் கூலி எவ்வளவு? என்றே நான் கேட்டிருக்க வேண்டும். வேலை நேரம், அதற்கான உடல் உழைப்பு, உற்பத்திப் பொருட்களின் தேவை, அவற்றின் தரம் அளிக்கும் வேதனம், முதலாளி பெறும் லாபம் என்றெல்லாம் வகைப்படுத்திப் பார்க்கையில் அது கூலியே தவிர, சம்பளம் அல்ல. எனினும், இதனையே தனது கௌரவமாகக் கருதும் இந்தப் பிரபுவின் மனோபாவத்தை நினைத்து எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

"சரி, உங்கள் பாஷையில் கேட்கிறேன். மழுப்பாமல் நேரடியாகச் சொல்லுங்கள். எட்டுமணி நேர வேலைக்கு ஒரு ஊழியர் உங்களிடம் பெறும் சம்பளத்தொகை எவ்வளவு?"

"இருநூற்றி ஐம்பது பிராங்."

"ஆக, ஒரு மாதத்திற்கு அந்த ஊழியர் ஐயாயிரம் பிராங்கிற்கே பெருமதியாகிறார். அதைவிட அவருக்கு எந்தப் பாத்தியதையும் கிடையாதா?"

"இது எனக்குப் புரியவில்லை"

"ஒரு தொழிலாளியின் எட்டுமணி நேர உழைப்பால் நீங்கள் பெறும் லாபம் எவ்வளவு?"

"என்ன, அவர்கள் உழைப்பால் எங்களுக்கு ஆதாயமா? முழு உற்பத்திச்சாதனங்களும் எங்களுக்கே சொந்தமாக இருக்கும்பொழுது எங்கள் வருமானமும் அவற்றிலிருந்தே கிடைக்கின்றன. இது உங்களுக்கு தெரியாதா?"

"ஆனால், நீங்கள் கடின உழைப்பாளி அல்லவே?"

"நாங்கள் ஏன் உழைக்கவேண்டும்? மூலப்பொருள் எங்களுடையதாயிற்றே?"

"அதுதான் இல்லை. உற்பத்திச்சாதனங்கள் உங்களுக்கு எப்படிச் சொந்தமாக வந்தன என்ற வரலாற்றிற்கு இழுத்துச் செல்வதை ஒதுக்கிவிட்டுக்கேட்கிறேன். உற்பத்திச் சக்திகளான தொழிலாளர்களின் உறவின்றி உங்களால் ஓரடிக்கூட நகரமுடியுமா? அவர்கள் கரங்கள் பாவாமல் எந்த உற்பத்திச் சாதனங்களோ கருவிகளோ உலகில் இயங்க முடிந்ததா?"

சகல கலாவல்லவன் போல் சம்பாஷித்த பிரபு இப்போது பதிலேதும்

சொல்ல வக்கின்றித் தறுதருத்து முழிசலானார். அவர் பார்வை, "என்ன சவத்துக்கு இந்த நபருடன் கனமான விஷயத்தில் வாய் வைத்தேன். தயவுசெய்து வேறு விஷயங்களைப் பேசுவோமா?" என்று கெஞ்சுவது போல் இருந்தது.

எனினும், அவர் இறுதிவரை போரில் தோற்றுப்போன வெள்ளடிச் சேவல்போல் தேகத்தை உலுப்பிக்கொண்டு சொல்கிறார்.

"வரலாறு ஒருபக்கம் இருக்கட்டும். தற்போதைய யதார்த்த உலகிற்கு வருவோம். தொழிற்சாலைகள், உற்பத்திச்சாதனங்கள் அனைத்திற்கும் உரிமையுள்ள எங்கள் தயவின்றி, எந்த உழைப்பாளியாவது வாழமுடியுமா? வாழத்தான் முடிகிறதா? எங்கள் தயாள குணத்தை நீங்கள் ஏன் சிந்தித்து பார்ப்பதில்லை...?"

"தொழிலாளர்களது உழைப்பின்றி ஒருநாள்கூட உங்களால் வாழமுடியுமா? இதனை நீங்கள் ஏன் உணர்ந்து கொள்வதில்லை?"

"முதலாளிகள் இல்லாமல் தொழிலாளர்கள் வாழ முடியாது. இதை நீங்கள் ஏன் தெரிந்து கொள்வதில்லை?"

இதையே நான் திருப்பிக் கேட்கலாம். ஆனால், நான் அப்படிக் கேட்கவில்லை.

என்னைச் சிறுபிள்ளையாகவும் தன்னை மேதாவியாகவும் கணித்து, இந்தக் கேள்வியைப் போட்டு என்னை மடக்கிவிட்டதாக அவர் தன்னுள் பெருமிதங்கொண்டு என்னைப் பார்த்தார். வக்கரித்துப்போன பத்தாம்பசலித்தனமான அவர்தம் வாதம் எனக்கு எரிச்சலை மூட்டிற்று.

சரித்திர ஓட்டத்தில் இருந்து வாழ்க்கைச் சுவடுகளைப் பிரித்து நிகழ்வுகளையே அவற்றின் விளைவுகளோடு நோக்கும் யந்திர அரசியல், பெரிய மேதாவிகளையே நிலை குலைத்திருக்கும்போது வெறும் வாய்ச்சவடால்வாதியாய் கோடீஸ்வரரான இந்த மனிதர் எம்மாத்திரம்?

அவர் வரித்த சுரண்டும் வர்க்கத்தின் கேடுகெட்ட தன்மைகளை விளக்கி அம்பலப்படுத்துவதோடு, அவரை விரோதி, எதிரி, துரோகி என்று என்னுள் ஆசுவாசப்படுவதை விடுத்து, அவர் சார்ந்த சித்தாந்தங்களைத் தோற்கடித்துத் தொழிலாள வர்க்க தத்துவங்களைப் பிரயோகித்து வசப்படுத்தச் சித்தங்கொண்டேன். விரோதி பணியாவிட்டால் என்னசெய்வது? என்பதையும் என்னுள் தீர்மானித்துக்கொண்டேன்.

"மது, மாது, சூது மீது கொண்ட ஆசையை அறுப்பவன்தான் முழு மனிதன்" என்று சொன்ன இந்த மனிதர், பொருள், பொன், ஆசையின் வேரறுக்க முடியாமல் தன் ஆளுமையையும் இழந்து தவண்டையடிக்கும் நிலைக்கு ஆளாக்கியது என்ன என்பதையும் புரியாமலிருக்கும்போது, ஒரு மேதாவி என்று அவரை நான் கணித்தேனே, அது எத்தகைய பேதமை என்று என்னுள் நொந்துகொண்டேன்.

இறுதியாக அவர்தம் வர்க்கசுபாவத்தைத் தக்க ஆதாரங்களோடு அம்பலப்படுத்த என் மனசு துடிதுடித்தது.

## 4

முதலாளித்துவச் சுரண்டல் ஏகாதிபத்தியச்சிகரத்திற்குப் போய் உலகம் முழுவதையும் கபளீகரம் செய்த விறுத்தத்தைத் தொட்டுக்காட்டிவிட்டுச் சுரண்டல்வித்தையை விளக்கியபின், இந்தப் பிரபுவின் சந்திப்புக்கு முத்தாய்ப்பு வைக்கவும் தீர்மானித்தேன்.

சியாங்கேஷேக், சிங்மென்ரி, டல்லஸ், மக்கார்த்தி போன்ற உலகவிழுங்கிகள் கம்யூனிஸத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்துக்கட்ட வெளிக்கிட்ட அபூர்விகள். கம்யூனிஸம் ரஷ்யாவிற்கும், நவசீனத்துக்குமே மார்க்ஸ் / எங்கல்ஸ் எழுதிக்கொடுத்த முதுசம் என்று இவர்களின் குழந்தைத்தன நினைப்பு. வியட்நாமுக்கு இவர்கள் ஏவிவிட்ட ஜனநாயகச் சண்டியர்கள், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற தோரணையில் தப்பிப் பிழைத்த வரலாற்றை இந்தப் பிரபுவுக்கு நினைவூட்டினேன்.

அவர் அசந்தே போனார். தன்னிச்சாவாதப் புளுகுக் கலை இலக்கியக்காரர்போல் அவர் முகம் வெளிறிச் சாம்பியது.

மார்க்ஸிஸ கம்யூனிஸ விரோதிகளுக்கு நவசீனச் சரிவும், சோவியத் ரஷ்ய சிதைவும் வெகு குஷியான சங்கதிகள். இந்தச் சங்கதிகளே மார்க்ஸிஸம் புதிய வீறுகொண்டு உயிர்ப்பிக்க வழிவகுத்துள்ளன. என்பதை இந்தக் கோடீஸ்வர மூளையிலும் தடக்குப்படவில்லை என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்ல. கோயிற்கோபுரக் கட்டிடங்களில் மெழுகுவர்த்தி கொளுத்துவதே இவர் காணும் சுதந்திரதாகம். கடவுளே, கம்யூனிஸ்டுகள் வலுகெதியாகச் செத்துமடிய வேண்டும் என்று கோயில்களில்

நேர்த்திக்கடன் வைத்த பெருமை இந்தப் பிரபுவையும் சார்ந்தது என்றும் ஏலவே அறிந்து வைத்திருக்கிறேன்.

உண்மையில் கம்யூனிஸ விரோதிகள் யுத்தப்பங்கிடாளர்கள். எங்கெங்கே யுத்தம், கலகம், அராஜகம், சுரண்டல், அடிமைத்தனம், ஒடுக்குமுறை உண்டோ அங்கெல்லாம் கம்யூனிஸ விரோதிகளே காரணர்களாயினர். ஜனநாயகப் போர்வையில் முதலாளித்துவ ஆயுதக் கலாசாரத்தை மக்கள் மீது சுதந்திரமாகப் பரப்பியவர்களும் கம்யூனிஸ விரோதிகளே. அண்மைய வளைகுடா யுத்தமும் கம்யூனிஸ விரோதிகளால் நடத்தப்பட்டதே. இன்றைய இலங்கை அரசியலும் கம்யூனிச விரோதிகளால் நடத்தப்படுவதே.

இச்சம்பவங்களையெல்லாம் வரலாற்றுடன் ஆதாரத்தோடு விஸ்தரித்துவிட்டு, "இவற்றையெல்லாம் உங்களால் மறுக்கமுடியுமா?" என்று கேட்டேன்.

இல்லை. என்று மறுக்க அவரால் முடியவில்லை.

"இவை மட்டுமா? இரண்டாவது உலக யுத்தகத்தை நடத்தியவர்களும் கம்யூனிஸ விரோதிகளே" என்று முத்தாப்பு வைத்தேன்....

ஹிட்லர், கொயரிங், முசோலினி போன்ற பாஸிஸ்டுகளின் உருவங்கள் அவர் மனக்கண்ணில் திரைபாவியிருக்கவேண்டும். அவர் முகத்தில் பிரேதக்களை பரவியது.

"உலகச்சொத்தை வறுகி ஏப்பம் விடுவதற்காகவே ஏகாதிபத்தியங்களால் கம்யூனிஸ விரோதம் பரப்பப்படுகிறது. அதே தோரணையில்தான் நீங்களும் அப்பாவித்தனமாகக் கம்யூனிஸ விரோதியானீர்கள்" என்றேன்.

அவர் இதை மறுக்கவில்லை, ஏற்பதாகவும் தெரியவில்லை. மௌனித்துக் கண்களைச் சிமிட்டினார்.

மேற்சொன்ன பாஜிஸ நாஜிகள் மூலம் இரண்டாம் உலகயுத்தத்தைக் கட்டவிழ்த்தவர்களின் வாரிசான இந்தப் பிரபு கம்யூனிஸ்டுகளை நிந்தனை செய்வது ஒன்றும் எனக்கு வியப்பாகத் தெரியவில்லை.

வளைகுடாப் பிரச்சினையை உலகயுத்தமாக்க முனைந்த ஏகாதிபத்தியத்தின் தோல்வியை மறுத்த இவர், துப்பாக்கியிலிருந்து

அரசியல் பிறக்கிறது. என்ற தீவிரவாத யுத்தமரபுச் சிந்தனையைத் துதிக்கலானார். யுத்த முஸ்தீப்பு அவர் மண்டை ஏகலும் நிரம்பியதை இது நிரூபிக்கப் போதுமானது. ஆயினும், அவர் ஓர் அப்பாவி போலவே தன்னைக் காண்பித்தார்.

சுரண்டல் முறை என்பது எந்த வகையில் கையாளப்படுகிறது என்பதை விளக்கும் என் நோக்கத்திற்கு இறுதியில் முறையான அத்திவாரமிடலானேன்.

"ஒரு தொழிற்சாலையில் உள்ள தொழிலாளி மாதம் ஐயாயிரம் பிராங் பெறுகிறார். அவரின் வேலை நேரம், உழைப்பு, கூலி, லாபம் எல்லாம் இதில் அடங்குகின்றன. இந்த லாபம் உங்கள் உற்பத்திச் சாதனங்களிலிருந்தே கிடைக்கிறதென்றால், யந்திரவிசையால் அந்தச் சாதனங்கள் இரட்டிப்பு உற்பத்தியை வழங்கும்போது தொழிலாளர்கள் இரட்டிப்புச் சம்பளம் பெறுகிறார்களா?"

'இல்லை' என்று அவர் நேர்மையாகச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், அப்படிச் சொல்லவில்லை.

"என்ன கேட்டீர்கள்?" என்று அசமந்தமாக மழுப்பலானார்.

நான் விடவில்லை.

"உற்பத்தி இருமடங்காகிறதே தவிர, தொழிலாளர்களின் ஊதியம் இரட்டிப்பபாவதில்லை அப்படித்தானே?" என்று கேட்டேன்.

அவர் பதிலளிக்கத் தயங்கினார். அநியாயத்தை ஒப்புக்கொள்ளவும் அவர் போக்கிரி மனசு துணியவில்லை.

நானே மறுபடி கிண்டினேன்.

"உங்கள் தொழிற்சாலைகளில் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவதுண்டா?"

"ஆம்"

"அந்தச் செக் ஷனில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்?"

"ஆயிரத்துக்கும் அதிகம்"

"ஆயிரம் என்று வைத்துக்கொள்வோம்"

"சரி"

"ஒரு தொழிலாளி ஒரு மாதம் ஐயாயிரம் பிராங் சம்பளம் பெறுகிறார்?"

"ஆமாம்"

"மேலதிக வேலையுமுண்டு?"

"உண்டு"

"மேலதிக நேர ஊதியத்தை எப்படி நிர்ணயிக்கிறீர்கள்?"

"அவரவர் ஊதியத்தின் வீதத்தைப் பொறுத்து...."

"உதாரணம்....?"

"ஐயாயிரம் பிராங் பெறும் ஒருவருக்கு மணித்தியாலம் ஐம்பது பிராங்கும், ஆறாயிரம் பிராங் பெறும் ஒருவருக்கு அறுபது பிராங் என்றும் ஆகும்"

"மேலதிகநேர ஊதியம் கொடுப்பதைத் தவிர்த்து எட்டுமணி நேர வேலைப்படி நாளொன்றுக்கு மூன்று தொழிலாளர்களை அமர்த்திக்கொண்டு, வேலை இரட்டிப்பாகும்போது மேலும் மூன்று தொளிலாளர்களை வேலைக்கு உட்படுத்தலாம் அல்லவா? இதனால் வேலையில்லாதிண்டாட்டம் குறைகிறது. ஒரு தொழிலாளி எட்டுமணி நேர வேலை ஊதியத்தோடு ஓய்வாகிறார். லாபத்தை உற்பத்தியாளர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதுடன், மேலும் வேலைநேரத்தையும் குறைக்கலாம் அல்லவா?"

மலைத்துப்போன பிரபு சற்றுச் சீற்றத்துடன் சிறு குழந்தை போல் பதிலளித்தார்.

"அப்படியானால் நாங்கள் தொழிற்சாலைகளை இழுத்து மூட வேண்டியதுதான்.

அது தான் நல்லது. தொழிற்சாலைகள் தனி நபர்களிடமிருந்து மாறி உழைப்பாளர்களின் பொதுச்சொத்தாகிவிடும். என்று சொல்ல நினைத்தேன். ஆனால், சொல்லவில்லை.

"இதை நீங்கள் எப்பவோ செய்திருக்க வேண்டும். ஆனால், அது உங்களால் முடியாத காரியம்"

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"தொழிலாளர்களை வஞ்சிக்காமலோ சுரண்டாமலோ உங்களால் ஒரு கணமேனும் உயிர்வாழ முடியாது. உற்பத்திப் பெருக்கம் கூடினால் உங்கள்

லாபம் பாதிக்கப்படும். ஆகவே, தொழிலாளர்கள் உற்பத்திப் பண்டங்கள் போல் தொழிற்சாலைகளுடன் அடைப்பட்டுவிட வேண்டும். அப்படித்தானே?"

"புரியவில்லை ?"

"புரியவில்லையா அல்லது நீங்கள் கையாளும் முறை வேறுபட்டதா?"

மீண்டும் மழுப்பலானார்.

முதலாளித்துவ வளர்ச்சியின் பொருளாதார உச்சநிலை உபரி மதிப்பாகும். உபரி மதிப்பை ஏற்படுத்துதல் இந்த உற்பத்தி முறையின் வழி என்பதை விபரித்துக் கூறினேன்.

"அந்த விதி உங்கள் சுரண்டலின் சாராம்சத்தைக் கொண்டது. உங்கள் வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. அதுதான் உண்மை."

"இதை நான் முற்றாக மறுக்கிறேன்"

"நீங்கள் தொழிலாளியை உங்கள் யந்திரங்களின் விசையோடு இணைத்துவிடுகிறீர்கள். அவர் தன் மேலதிக உழைப்பை உங்களுக்கே இனாமாக அளிக்க நிர்பந்திக்கப்படுகிறார். இல்லையேல் அவர் உயிர் வாழ முடியாது. அவர் உழைப்பதற்கு அவசியமான உற்பத்திச் சாதனங்கள் உங்கள் உடமையாக இருக்கின்றன. இந்த லட்சணத்தில் தொழிலாளி ஒரு நாள் உழைக்கின்ற நேரமானது அவசியமான உபரி நேரம் என்றாகிறதல்லவா?"

தலையிடி வந்தவர் போல் நெற்றியைச் சுழித்துக்கொண்டார்.

நான் விட்டுவிடுவதாக இல்லை.

"தொழிலாளி அவசியமான நேரத்தில் அவசிய தேவையான பொருளை உற்பத்திபண்ணுகிறார். அதன் மதிப்பு அவருடை உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமானது. உபரி நேரத்தில் மேலதிக பொருளையும் உற்பத்தி செய்கிறார். அந்த உபரி மதிப்புப் பொருளுக்கு நீங்கள் கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்கிறீர்கள். அது லாபம் என்று உங்கள் வைப்பில் போய்விடுகிறது. இப்படித்தான் உங்களது முழு அம்சங்களும் சுரண்டலையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன, அல்லவா?"மீ

காற்றுப் போன பலூன்போல் தம் விட்டுப் போயிருந்தார் பிரபு.

"நீங்கள் ஜனநாயகப் பல்லக்கில் ஏறி இருந்து கொண்டு தொழிலாளர்களை இப்படித்தான் ஈவிரக்கமின்றிச் சுதந்திரமாகச்

சுரண்டுகிறீர்கள். இதுதான் உங்கள் வர்க்கக் குணாம்சம்"

மயக்கம் தெளிந்து உசார் பெற்றவர் போல் சாங்கோபாங்கமாக சம்பந்தமில்லாத ஒரு குண்டை அவர் தூக்கிப் போட்டார்.

"நீங்கள் ஒரு பத்திரிகையாளரை அனுப்பியிருக்கலாம். சமூகவியல் தத்துவ சித்தாந்த வித்தகரான ஒருவர் என்னைப் பேட்டி காண வந்திருக்கக்கூடாது."

எனக்கு விஷயம் புரிந்தது, அவருக்கும் புரிந்தது புரியாதவர்கள் மாட்டிக்கொள்ள வேண்டியதுதான். அதைத் தான் அவர் விரும்புகிறார்.

என்னைச் சபிப்பதுபோல் அவர் கண்கள் என் மீது விழி குத்தி நின்றன.

நான் நீறுகக்க உற்றுப்பார்த்தேன்.

பிரேத விசாரணைக்குட்பட்ட கொலைக் கைதிபோல் அவர் முகம் தேம்பிக் கிடந்தது.....

அவர்கூறும் சுதந்திரமும் ஜனநாயகமும் சுரண்டும் வர்க்கத்தின் கபடத்தனமான கவசங்கள் என்பதை விளக்க எத்தனிக்கையில், அவர் திரை நீவி மறையலானார்.

'முதலாளித்துவ அத்திவாரமே சுரண்டலாகையால் அது தனக்கே சவக்குழி தோண்டித் தன்னையே மோட்டுத் தனமாக அழிக்கவல்ல வெடிக்குண்டைத் தன்னுள் வைத்திருக்கிறது' என்று சொல்ல வாயுன்னினேன்.

திரை நீங்கியதாய் இல்லை.

எனினும், குளிர் விடுவாதாயில்லை.

சூரியன் உதிக்கும் வரை.....



# நரகத்திலிருந்து...

இந்நாவலில் சஞ்சரிக்கின்ற கதாபாத்திரங்கள் நாம் பூணாதவர்கள், குறிப்பிட்ட ஒரு களமும் இல்லாவர்கள். இவர்களை நீங்கள் உலகம் என்ற களத்தில் எங்கெல்லாம் தேட முடியுமோ அங்கெல்லாம் தரிசிக்கலாம். இந்த மனிதாற்றுமாக்களை எவ்வகையில் நீங்கள் பார்க்க அணுக அனுபவிக்க விரும்புகிறீர்களோ அவ்வகைக்கேற்ற நாமங்களைச் சூட்டியுங்கொள்ளலாம். என்றைக்கோ, எப்போதோ, எங்கேயோ தொடக்கம் இந்தத் தேசத்தின் மூலை முடுக்குகளிலிருந்து இன்றும் உழலும் மனிதர்கள் உலகளாவக்கிளர்ந்து குமுறும் அபயக் குரல்களைச் சற்றுச் செவிமடுப்பீர்களாயின், இங்கு ஒரு மானிட தர்மத்தைக் காண்பீர்கள். மதியூகம் இதற்குத் தேவையில்லை. மனித நேசம் உள்ளவர்கள் முகம் சுழித்தோ, அருசைப்பட்டோ விலகிச் செல்லாமல், நரகத்தில் பரதவிக்கின்ற இந்த மனிதர்களைத் தரிசிப்பீர்களாக.

எஸ்.ஏ.

## 1

மலைப் பிரதேசங்களில் பனி மூடம் கவிந்துகொள்ள நரம்புகள் குல்லிடுகிறசாடை மேனிகளில் குளிர் அப்பிக் கொண்டது.

நெடுநேரமாக உடல் கொடுகி விறைக்கும் வரை வெளியே நின்று ஆவலோடு பார்த்துவிட்டு அவளும் சலிப்போடு குடிசைக்குத் திரும்பினாள்.

சின்னஞ்சிறுவர்கள் குழந்தைகள் போடும் கூச்சல் காற்றினோசை யோடு சங்கமித்துக்கொண்டது.

மலையடிவாரங்களுக்குள் பொழுது உறைந்து பூமியில் இருள் மண்டிவிட்டது.

அவள் மனசு இன்று பிரளயப்படுகிறது.

நேற்றுத்தான் புதுசாக வேறு ஒரு வெள்ளை ஜடமேனியன் பெரும் பகட்டாக வந்து போனான். இவனும் பரவாயில்லை. இன்றும் வருவதாகச் சொன்னான். குளித்துவிட்டு வேறு இருக்கச் சொன்னான்.

சுத்தமாக இருக்கிறாள்.

அவன் சொன்னபடி வரவில்லை, வருவதான சுவடும் இல்லை.

மாய்ச்சல்தான். வழி மேல் விழி வைத்து வைத்த விழியும் இவ்ளுக்கு நோகிறது. என்றபோதும், ஏக்கமாக எட்டி எட்டிப் பார்க்கிறாள்.

இன்னும் வரக் காணோம்.

ஏமாற்றுவானோ?

பசியில் கதறிக் கூச்சலிடுகின்ற குழந்தைக் கணங்களுக்கு இப்போ இவளால் வகை சொல்ல வக்கில்லை. நாதியில்லை. வருவாயில்லை. வருவேன் என்றவனும் வரவில்லை.

வெட்கங்கெட்ட உறவு என அவள் மனசுள் புழுங்கி அழுந்தினும், அந்த உறவு அப்படி ஒரு தொடர்பு கொள்ளாவிடின், அவளின் வயிற்றுக்கொதி ஆற மார்க்கமில்லை.

வெள்ளை ஜட நாயகர்களின் தயவுக்குள்ளான நிலையை ஒரு விதியாக ஏற்று உழல்கின்ற ஆற்றுமாக்களில் இந்த இவளும் ஒருத்தியாக, இவள் சார்ந்த பிறவிகளும் ஒவ்வொருவராக அப்படி அமைந்துவிட்ட தங்கள் வாழ்க்கை எந்த முகாமின் நுகத்தடியில் மாட்டப்பட்டிருக்கிறது என்பதைப் புரியாதவர்களாக புரிந்தாலும் அதனை நிராகரிக்க தகர்க்கத் திராணியோ வழிவகைகளோ தெரியாதவர்களாக......

இன்றும் இப்பவும் அப்படி.........

அந்தச் சிறு குறுங்குடிசைகளில் அவர்கள் போடும் கூச்சல்கள் மாயும் மாய்ச்சல்கள்........

அவர்களுள் இவளும் ஒருத்தியாக உழல்கிறாள்.

மரத்துப் போன வாழ்க்கை செல்லரித்துப்போன சீவியம்.

வருவதாகச் சொல்லிவிட்டுப் போனானே, ஒரு வேளை அவனும் வேறு இட மேய்ச்சல்காரனோ? அல்லது இவளைக் காட்டிலும் வனப்பான அழகு சௌந்தர்ய ரூபவதி இளசாகக் கிடைத்தாளோ?

அப்படியும் இருக்காது. இந்தப் பிரதேசம் காளைகள் மிதித்து மேய்ந்து சதுப்பாகிவிட்ட நிலம். இது தவிர வேறு இல்லை. அதிலும் ஒரு சம நிலையான அழகு காம்பீரியம் லாவண்யம். இப்படி அவள் அவளை மாறி மற்றும் அவள். ஒருவளுக்கு ஒருவள் தெரியாமல் சொல்லிக்கொள்ளாமல் மறைத்துக்கொண்டு தங்கள் அந்தரங்க நினைவுகளை மனசில் தேக்கிக்கொள்வதில் சுயதிருப்தி காணினும், ஈற்றில் எழும் வெப்பிசாரத்தில்

கண்ணீர் வெதும்பிக்கொள்ளும் முகம் உப்பிப்போகிற வரை கண்ணீர் படிந்து அயறு படர்ந்து கொள்ளும்.

அந்த ஜனநாயக வெள்ளை ஜட ஜாம்பவான்களில் வந்தவன் வருகிறவன் எவனுமே சேற்றில் விழுந்து குளத்தில் கழுவுகிறவனாகிறானே தவிர, கொஞ்சம் தரித்திருந்து அனுபவிக்கிறவனாக அவளுக்கோ அவளையொத்த மற்றவள்களுக்கோ எப்பனும் புலனாகவில்லை.

இந்த ஜீவாற்றுமாக்களின் இதயங்களை அந்தச் சுதந்திர ஜீவிகளின் மேனாண்மைத் தனம் அடிமைப்படுத்திக் கூத்தாடுகின்ற பாங்காகவே அவளுக்களுக்குப் படுகிறது.

சிந்திக்கிறபோது அவளின் மனத்திரை நீக்கப்படுகிறது.

அந்த வெள்ளை ஜட நாயகர்கள் போடும் கூச்சல்கள் விசிலடிப்புகள் மலையடிவாரங்களை ஊடறுத்துக் கொண்டு வந்து காதுகளை நெருடுகின்றன.

பட்டிகளிலிருந்து கட்டவிழ்த்த செம்மறிப் புருவைகள் போல் அந்த ஜாம்பவான்கள் முகாம்களின் விடுதிகளிலிருந்து காலை மாலை நேரங்களில் வெளியேறுவார்கள்.

கரடுமுரடான அந்தப் பிரதேச வீதிகளில் குதிரை லாடன் கொண்ட அவர்களின் பூட்ஸ் கால்கள் லயம் தவறாது ஒலித்துக்கொள்ளும்.

'லெவ்ற், றைற்' என்ற 'மொமாண்டிங்' சத்தம் அவர்கள் நடைபவனியோடு கேட்ட மாத்திரத்தில் இவர்களும் இவர்களின் சின்னஞ்சிறு வட்டன்களும் கூட்டமாக ஒளித்து நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

ஓய்வு நேரப்பொழுது களியாட்டங்களுக்காகவென்று ஆகிவிட்டது.

அன்றும் வழக்கம்போல் அவர்கள் தங்கள் ஓய்வுப் பொழுதிலே கிளம்பிவிட்டார்கள்.

வெளியே நடைபாவும் 'பூட்ஸ்' பாதங்கள் லயம் பிசகாத அடி வைப்புகளாக விழுகின்றபோது, அவற்றின் சப்த ஒலிகள் இந்த இவள் காதில் நச்சரித்துக் கேட்கும்.

இன்றும் கேட்கிறது.

ஆனால், அவனைக் காணவில்லை.

இவன் வேறு ஆசாமியாக இருக்கலாம்.

## 2

மலையடிவாரங்களில் குச்சுவீதிகளில் அவர்கள் லாடன் பூட்ஸ் பாதங்கள் போடும் எதிரொலிகள் நிலமதிர்ந்து, பரதேசிகளாக ஜீவிக்கின்ற மனிதர்களுக்கு நைந்துபோன ஊனிப்பான மனிதர்களுக்கு நன்றாகக் கேட்கின்றன.

குளிர் சூழ்ந்து பனி மூடமான அந்தப் பனிப் பிரதேசங்கள், கம்பளிகளுக்குள் குடங்கித் தூங்கும் இந்த வெள்ளை ஜட நாயகர்களுக்கு என்னமோ குஷியாகவே இருக்கின்றன.

அவர்கள் இந்த மலைப் பிரதேசங்களில் இருந்து விடுகாலிகளாக அன்றாடம் சஞ்சரிப்பதுபோலவே இன்றும் அவர்கள் தாங்கள் அடைபட்டுக் கிடக்கின்ற முகாம்களை விட்டு விடுதிகளைவிட்டு அசுமாற்றம் தெரியாமல் வெளியேறி, அந்த மலையகத்துப் பிரதேசங்கள் மீது மீளாக் கண்கள் வைத்தபடி, ஓயாமல் அலைந்து கொண்டும் குதறிப்பாய்ந்து கொண்டும் திரிகின்றார்கள்.

ஜனநாயக சுதந்திர ஜீவிகளான அவர்களின் ஏகாந்த மேய்ச்சல் நாள் தோறும் இதே வித வழக்கமாகிவிட்டது.

தேசப் பாதுகாவலர்களின் நடமாட்டம் ஆரம்பித்து விட்டது......

அரவம் கேட்ட நாய்கள் குக்கிராமத்து லயங்கள் தோறும் அம்மாறு போட்டுக் குரைக்கின்றன, ஊழையிடுகின்றன, ஈற்றில் சிணுங்கி அனுங்குகின்றன.

தங்கள் ஜீவிதத்தை எங்கோ ஒப்படைத்தவர்களாக லயங்களில் அடைந்து குறாவிக் கிடக்கின்ற அந்த மனிதர்கள், ஆண், பெண், குழந்தை குட்டி குருமன்கள் அருண்டு விழித்துக் காது கொடுத்துக் கவனிக்கின்றார்கள்.

சற்று வேளையால் அவர்கள் நூதனக் காட்சி பார்ப்பவர்கள் போல் தத்தம் லயக் காம்பறாக்களிலிருந்து புற்றீசல்களாக கிளம்புகின்றார்கள்.

மனிதர்கள் என்ற விறுத்தத்திலே கிடந்து கூனிக் குறாவிப் போன அந்த அவர்களின் சடலங்கள் இந்த இவர்களுக்கும் நூதனப் பொருட்காட்சிபோல் தோன்றின. அவர்களின் எலும்புக் கூடுகளைக்

கொண்டு ஒரு பெரிய கோபுரம் கட்டலாமாயினும், அந்த விசனம் இந்த ஜாம்பவான்களுக்கு இல்லை.

ஒவ்வொருவனும் எதையெதையோ என்னவோவெல்லாம் புரியாத பாஷையில் பேசுகிறான். கெக்கலித்துச் சிரிக்கிறார்கள்.

மனசிற்கினிய அழகு லாவண்ய சௌந்தர்ய மேனியுள்ள ஒரு பெண் ஜென்ம ஜீவனும் அவர்கள் கண்களில் தென்படுவதாயில்லை. எல்லாம் விறகுக் கட்டைகளாக.... பரட்டைத் தலைகளாக...

ஏமாற்றத்தினால் ஒருவரை ஒருவர் கமறுகின்றார்கள். ஒருவனுக்கொருவன் · முஷ்டிகளால் உராய்கின்றான். ஒருத்தியென்றாலும் பதம் உள்ளவனாகத் தெரியவில்லையே,

கோரமாகப் பரவிய வறுமையின் விளைவாக அவர்களின் சடலங்கள் உண்மையில் சூம்பித்தான் போய்விட்டன. என்றாலும், அந்தச் சடலங்கள் மீதே அவர்களுக்குக் கண்.

குறிப்பாக வாலைக் குமர்ப்பெண் சடலங்கள் மீதே தாபம், தாகம், ஆசை, ஆவல், அகோரித்து எழுகின்றன.

தேச ஒற்றுமையின் பாதுகாவலர்களாகக் கடமையாற்ற வந்த இவர்களுக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் கண்ணியவான்கள் என்று ஏலவே தயாரிக்கப்பட்ட மாமூல் பிரகாரம், மேன்மைதங்கிய ஆதிபத்தியத் தலைவருக்கு அனுப்பி வைப்பதில் ஒருபோதும் அவர்களின் கட்டுப்பாடு தவறுவ்திதில்லை.

இவர்கள் கண்களில் காமாலை, அந்தப் பிரதேசத்தின் இயற்கை வனப்புகள் மனித ஜடம் பொருள் பண்டங்கள். விலங்குகள் பறவைகள் யாவும் பெண்கள் மயமாகவே தெரிகின்றன.

இந்த வேளைகளில் விவேகமுள்ள ஒவ்வொருவனும் அந்த மேய்ச்சலுக்காகவே தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்கிறான்.

அவனவன் அடுத்தவனுக்குப் புலனாகாதபடி தன் தன் மணிபேர்ஷை எடுத்து விரித்துப் பண நோட்டுகளைத் திணிக்கிறான். வைத்த நோட்டுகளை மீள எடுத்துக் கணக்குப் பார்த்துக்கொள்கிறான்.

பதிவிரதைகளான பத்தினிகள், கடைசி பத்துப் பேருடன் சல்லாபம் புரிகின்ற கலாசாரப்பண்பாட்டினைக் கொண்ட தமது ஜென்ம பூமிக்கும்,

கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருசன் கணவனே கண்கண்ட தெய்வம், என்கின்ற இந்த நாட்டுப் பிரதேசப் பெண்ணடிமைப் பண்பாட்டிற்கும் உள்ள பேதத்தை, ஒரு சுலோகமாகவே தெரிந்து வைத்திருக்கிறான்களேயன்றி, இந்த இவர்கள் வாழ்க்கையைப் புரிந்துகொண்டவர்கள் அல்லர். எனவே ஜாதி, மத, குல, வர்ண பேதங்களை முற்றாகவே இழந்தவனாக ஒவ்வொருவனும் காந்தர்வ சம்சாரியாகும் விஷயத்தில் சமதர்மவாதியாக நடிக்கிறான். தன்னிச்சை தீர்ப்பதற்கே ஒவ்வொருவனுக்கும் அந்தச் சமதர்மம் தேவைப்படுகிறது. ஆனால், தேசத்தின் உலகத்தின் சமதர்ம அமைப்பு இவன்களுக்குக் கசப்பான வேப்பங்காய்.

யுத்த மேகங்களோ கவிக்கின்றன. விமானங்கள் வானமடங்க மின்னி மின்னி வெடிக்கின்றன. கவச வாகனங்கள் திடுமுடு என்று கமறி ஓடுகின்றன. இறந்து போன நாய்கள், செம்மறிகள், பசுக்கள் இவர்கள் கண்களுக்குப் பயங்கரப் பிறவிகளாகத் தெரிகின்றன.

மனிதர்களின் அபயக் குரல்கள் பூமியில் வியாபித்துக் கொண்டிருக்கின்றன.

தேசப் பாதுகாவலர்களான இவர்கள் அடிக்கடி ஓயாமல் ஜெபித்துக்கொள்கிறார்கள்.

'சமாதானம் நிலவ அதைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்கேளாம். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் கொடுங்கள்.'

இந்த வீரர்கள் மனித சடலங்களின் தசைகளில் ஊறுகின்ற ஊனத்தை உறிஞ்சி விழுங்கி, அதனையே மாபெரும் சாதனையென வெற்றிக்கொடி நாட்ட, இதே ஊனமுள்ள ஜடப்பொருளான பணப் பசாசையும் மஞ்சட் பூதத்தையும் மகாவலிமைகொண்டவை என்று நம்பி ஒவ்வொருவனும் கணிக்கிறபோது, அவனில் எழும் அந்த அவா அவனை மீறி ஆகாயத்தை மேவுகின்றது.

மண், பொன், விண் ஆசைகளை வென்ற பெண்ணாசை சித்தங்கலங்க வைக்கும் பித்து என்பதை ஒவ்வொருவனும் அறிவான்.

அவனவன் நரம்புகள் நாளங்கள் அவனவனில் துன்னி எழுகின்றன. ஆனபோதும் அவனவன் பாதங்களில் லாடச் சரடுகள் நிலமதிர ஒலி எழுப்பிக்கொண்டே இருக்கின்றன.

செக்கலாகிவிட்டது. மைமல் பொழுது மலைச் சாரல்களில்

உறைந்துகொண்டிருக்கிறது.

அவர்களின் வீரியங்கள் புடைத்துக்கொள்கின்றன. ஏகாந்த வெளியில் வீசிய காற்றின் அலை ஓசை அமைதி கொண்டுவிட்டது. பூமியை இருள் கவ்வுகிறது.

பார்த்த கண்ணுக்கு மின்மினிப் பூச்சிகளாகச் சிறு குடிசைகள் தெட்டந்தெறியனாகத் தெரிகின்றன.

ஒவ்வொருவனும் கண்ணூனிப் பார்க்கிறான்.

லயன்களில் மலையடிவாரங்களில் தோப்புகளில் திடல்களில் வெள்ளித் துகள்கள் போல் குப்பி விளக்குகள் சிமினி லாம்புகள் மின்னுகின்றன.

ஆயினும், சலித்துப்போன அந்த மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் கழிக்கும் தொழுவங்களிலிருந்து போடுகின்ற கூச்சல் சத்தம் குரல்கள் இந்த இவர்களுக்கு இந்த ஜாம்பவான்கள் செவிகளில் மிக இதமாகவே கேட்கின்றன. மரண ஓலத்தையும் திருமண இசை பொழிய வைக்கும் வல்லமையுள்ள மேதைகளாதலால் இப்படி.

இருந்தும், இந்த வெள்ளைநாயர்களின் மனசு பூரணமாவதாயில்லை. அவர்கள் தவண்டைகள் அபிலாசைகள் பூர்த்தியாகவேணுமாயின், இந்த தொழுவத்து மனிதர்களுடன் உறவுகொண்டு தாம்பத்தியமாகச் சீவிக்கும் ஆண் ஜென்மங்கள் தங்கள் காலடிகளில் கிடந்து தங்கள் தஞ்சத்திலேயே சீவியத்தை அர்ப்பணிக்க வேண்டும்.

மனிதனை மனிதன் பிரிக்க முடியாத அடிமைச் சங்கிலியை அவர்கள் கழுத்தில் இறுகப் பிணைத்துவிட்ட பின், அவர்களின் 'சுதந்திர வாழ்க்கையை' ஜனநாயகபூர்வமாகப் பறைசாற்றும் பண்பிற்கு இலக்கணமாக்கப்பட்ட இந்த இவர்கள், தேசத்தின் தொண்டர்களாக சுதந்திர ஜீவிகளாக காடேறிகாளாக ஏகாந்தமாகத் திரியலாம். எதேச்சையாக எதனையும் அனுபவிக்கலாம்.

இந்தக் குயுக்தியில் ஒவ்வோர் ஆதிக்க வெள்ளையனும் ஆட்பட்டிருப்பதால் அவனவன் பாட்டுக்கு அவனவன் மனசு சுதந்திரமாக எங்கெல்லாமோ ஆலவட்டமிடுகின்றது.

காலகெதியில் நாளாக ஆக அந்தத் தொழுவங்களில் ஆடவர்கள் வாடையே அரிதாய் போய்க்கொண்டிருக்கிறது என்ற நிலை புலனாகாதபடி

வறுமை அவர்களை ஆக்கிற்று என்பதும் பூஜ்ஜியமானதே.

## 3

குறைந்த கூலி, நிறைந்த வேலை.

இந்த ராஜானுபவர்களின் முகாம்களில் முகாம்களைச் சுற்றி வேலைக்கு அமர்த்தப்பட்ட அந்த மனிதர்கள் ஆடவர்கள் அவர்கள் கிழடுதட்டிப் போனவர்களாயினும் நாளொரு மேனியாகப் பொழுது உறையில் போகுமட்டும் இவர்களின் வசிப்பிடங்களை விடுதி முகாம்களைச் சுத்தம் செய்கின்ற கூலிகளாக மலஜல கூடங்களைச் சுத்திகரிக்கின்ற யந்திரங்களாக தோட்டிகளாக எடுபிடியாட்களாக்கப்பட்டுவிட்டார்கள்.

இந்த விசித்திரங்கூட எவருக்கும் சரியாகத் தெரியாது.

அந்த மனிதர்கள் இவர்களின் ஜனநாயக மந்திரத்தில் கட்டுண்டு நிரந்தரக் கூலிகளாக அகதிகளாக அடிமைகளாக்கப்பட்டபின் தான் ஓடி முழிசினார்கள்.

இதயங்கள் பூகம்பித்தன. ஆனால், இறுகப் பூட்டிய சங்கிலிகள் அவர்கள் கரங்களில் செப்பமாக மாட்டப்பட்டு விட்டன. அசைத்தால் கரங்களே துண்டிக்கப்படும்.

அவர்களைப் பொறுத்தவரை வீடு வாசல், புருஷன் பெண்சாதி, அந்த பிள்ளை குட்டி, ஓய்வு ஒழிச்சல் யாவும் அந்த மண்டப அடைப்புக்குள்தான்.

எச்சில் உணவு, பிச்சைக் கூலி.

'சுதந்திரப் பிறவிகளான இந்த ஜனநாயகப்பிச்சைத் தீனிக் கூலிகளுடன் அந்த அவர்கள் ஓய்வு நேரங்களில் தனியாகவும் இதமாகவும் குசுகுசுத்து எதையோ எல்லாம் ரகஸ்யமாகப் பேசிக்கொள்வார்கள்.

ஏதோ பேரம் பேசுகிறவன்பாணியிலும் சம்பாஷிப்பார்கள். பிரதேசங்களில் இரவின் இருள் மண்டியதும் அவர்கள் வீதிகளில் இறங்கிவிடுகிறார்கள் ஏகாந்தமாய்ச் சுற்றித் திரிகின்றார்கள்.

'அவர்கள் இரவு நேரங்களில் அணிகின்ற கன்வெஸ் சப்பாத்துக்கள் அந்த அமைதியான வேளைகளில் ஓசைப்படாமல் சக்சக் என்று மெதுவாகக் கேட்கும்.

நாளாக இந்த ஒலிகள் அன்றாடம் கேட்கின்ற நித்திய

ஓசைகளாகிவிட்டன.

செத்தைப் படலைகள் விடியும்வரை மூடிக் கிடக்கும். விடிந்தபின் அம்மணக் குழந்தைக் கணங்களும் செம்மறிப் புருவைகள்போல் சாரல்களில் உலாவும்.

இந்த எடுபிடிகள் மத்தியில் சகல விவகாரங்களுக்கும் மாறாக முரண்பட்டுப் போன வினோதமான ஒருவன் இவன் புத்தி பேதலித்தவனாக இருக்க வேண்டும் அந்த ஒருவன், தன் ஏனைய சகபாடிகளுக்கு ஒரு நாசகாரியாகத் தோன்றினான்.

இவன் கழுத்தில் குருசு இருக்கவில்லை. சுமத்தப் பட்ட சிலுவைகளை இறக்கிறவனாக இருக்கலாம்.

இந்த இவனால் இவன் சகபாடிகளின் கால்கள் சிலவேளை இடறி லயம் பிசகி அவலமாக முரண்டு விழுகின்ற கோலங்களை இவன் கவனித்துக்கொள்வான்.

இன்றும் அவர்களின் நடமாட்டம் இந்த இவனுக்குப் பிடிபடுவதாக இல்லை. அவர்களின் லாடன் பூட்ஸ்கள் லயம் பிசகிக் கரடுமுரடாகத்தான் காதில் கேட்கின்றன.

இவர்களில் வித்தியாசப்பட்ட இந்த இவன் சடாரென்று படுக்கைவிட்டு உன்னி எழுந்தான்.

விழித்த கண்ணில் அறை கும்மிருட்டாக அம்மியிருக்கின்றது.

கண்களைத் துடைத்துக்கொண்டு மெல்ல எழுந்தான்.

வீதியின் நடுச்சந்திக் கம்ப மின் வெளிச்சத்தில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

முகாம் விடுதியில் இவனும் இவனையொத்த சிலரையும் தவிர எந்த எவனையும் காணவில்லை.

நெஞ்சு டக் டக் கென்று துடித்துக்கொள்கின்றது.

ஓசைப்படாமல் மெதுவாக நகர்ந்து சுவிச்சைத்தட்டி விட்டான்.

மின்னலாய் அடித்துப் பரவியது பிரகாசம். சரியாக முக்கால்வாசிப் படுக்கைகள் காலியாகத் கிடக்கின்றன.

கனவுகளும் நினைவுகளும் கண்ட கேட்ட கற்பித்த உருவத்தின்

மறு வார்ப்புகள் என்று அவன் அறிவான். ஆனால், கனவுகள் நினைவுகளை போலவே காட்சிகளாகவும் அமைந்துவிடுகின்றன என்பதை அவன் இன்றுதான் கண்டான்.

'சீ, தூ... தேசவிசுவாசமற்ற, சகோதர பாசம் செத்த பெண்வேட்டைக் காமுகர்கள்... இவர்கள் மேனிகளே வெள்ளை. இதயங்களோ கண்டங்கரி... கழிசடைப் பாஷாணங்கள்.....'

'லையிற்'றை ஓப் பண்ணிவிட்டு மீண்டும் கம்பளியால் இறுகப் போர்த்திக்கொண்டு படுத்துக்கொண்டான்.

கண்களில் தூக்க மயக்கம் கவிந்த போதும் உறக்கம் வர மறுத்தது. அவன் மனசு அடித்துக்கொண்டது.

தனது சகாக்கள் சகவாசம் அகலிப்பாதல் தன்னை ஓர் உளவாளி என்று நினைத்துக்கொள்வார்கள் எனவும் ஒருகணம் யோசித்தான். தன் கழுத்தில் மாட்டியிருந்த சங்குப் பதக்கத்தைத் திறந்தான். திறக்கவே மின்னித்துலங்கும் ஒளியில் அழகாகத் தெரிகிறது அந்தப் படம்.

அரிவாள் சம்மட்டி பொறித்த செங்கொடிக்கு மேன்மைதகு வணக்கம் செலுத்துகிற ஒரு தோழன் உலகளாவிய மகோன்னத இயக்க வழிகாட்டியான அந்தத் தோழன் தோற்றம் புத்துணர்ச்சியை ஊட்டியும் விடுதலைக் கோஷங்களைச்சுட்டி நிற்கிற விதமுமாக உணர்வுற்றுருவகச் சித்திரங்களைப் பதிப்பித்தன., முதல் எடுப்பே காந்தியது. தன்னாரவாரம் சிலிர்த்துக் கொண்டான்.

'ஓ, சகோதரனே, சகல அடிமைத்தனத்திலிருந்தும் மனிதர்கள் விடுதலையடையப் போராடுவாயாக'

'விடுதலை'

அவன் இதயம் பூரித்துப் பொங்கியது

அடக்குகிறவனிடமிருந்து விடுதலை

ஒடுக்குகிறவனிடமிருந்து.......

கொடுமைக்காரனிடமிருந்து.....

சுரண்டுகிறவனிடமிருந்து....

ஆதிக்கக்காரனிடமிருந்து........

இனவாத வெறியனிடமிருந்து.....

குலவாத ஆணவனிடமிருந்து.......

ஜாதித் திமிரனிடமிருந்து......

மதவாதத் திடும்பனிடமிருந்து.......

விடுதலை.... விடுதலை...... விடுதலை.....

ஓ சகோதரனே, இதோ பத்துக் கற்பனைகள். விசுவாசத்துடன் ஏற்று நேர்மையாகச் செயல்படுவாயின் இந்தத் தேசம் உன் தாயாவாள். நீ இந்த மாதாவின் மைந்தனாவாய்.

மனனமாகிய வாக்கியங்களை அவன் மீட்கின்றான். அந்தப் படத்தை அந்தத் தேசத் தலைவனை முத்தித்து விட்டுப் பதக்கத்தை மூடிக்கொண்டான்.

விடிகாலை ஆகிறது.

சகபாடிகள் வந்து சேர்ந்ததாகக் காணோம்.

இவன் மனசில் ஒரு அந்தரிப்பு.

இவன்களின் இந்தப் பெண்பிடி நாடகம் எத்தனை நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது?

இவன் தனிமையான பிறகும் பழைய பிடிவாதங்கள், புதிய இலட்சியங்கள், நிதான போக்குகள் இவன் நெஞ்சில் வஜ்ஜிரம் போல் அழுந்திக் கிடக்கின்றன. ஆனால், நரம்புகளைப் புடைக்கவைக்கும் இந்தத் குளிர்ப் பிரதேசமும், பனிக் கூதலும் இடைக்கிடை இவன் வரித்துக்கொண்ட இலட்சியங்களைக் கடுஞ் சோதனைகளுக்குள்ளாக்கியதுண்டு. என்றாலும், இவன் அத்தனை உபத்திரவங்களுக்கும் முகங்கொடுத்து, வாலிப மிடுக்கின் அந்தரப் பேதலிப்புகளைச் சாடிநின்று வெற்றிவாகை சூடியிருக்கிறான்.

அவன் தன்னை ஒரு தூய்மையானனாக ஒழுக்கவாதியாக மனுக்குல மேம்பாட்டிற்காக அர்ப்பணித்துவிட்ட இலட்சியவாதியாக்கிக் கொண்டவன்.

வானவில்லின் வர்ணஜாலங்களில் மயங்கி அதுவே வானமாக நினைத்து அவன் வரித்த இலட்சிய வேட்கையின்பால் போதம் பெற்ற தத்துவங்களை வெறும் சுலோகங்களாக அர்த்தப்படுத்திக்கொண்டவனல்லன். வாழ்க்கையின் அடித்தள நுணுக்கங்களையும், அதன் அன்றன்றாடான காலங்களில் அதலபாதாள மேடுபள்ளங்களையும் நீவி நீவி துருவித்

துருவி ஆராய்ந்த ஒரு சரித்திர விஞ்ஞானப் பிரகிருதி என்றுகூட இவனைச் சொல்லலாம்.

அப்படித்தான் செயற்பட்டும் வருகிறான். அந்தச் செயலிலும் இவர்களுடன் இணைந்து சிப்பாயானது, இவர்கள் யார் எவர் என்பதைக்கண்டு தெளியவே அன்றி, இவன் தனக்கு வாசியாக எதையும் அபகரிப்பதற்காகவல்ல என்பதில் திடசித்தமானவன்.

எதிலும் தன்னை மாத்திரம் பிரத்தியட்சப்படுத்தாமல் அடுத்தவன் பற்றிச் சிந்தித்து ஊன்றி நடப்பவன் பாதங்கள் எப்படியெல்லாம் சேறு, சகதி, மேடு, பள்ளம் கல்லடி, சொல்லடி, பொல்லடி படுமோ அத்தனை வாதைகளும் பட்டுத் தேய்ந்து தேர்ந்துவிட்ட ஓர் அனுபவசாலி என்றே இவனைச் சொல்ல வேண்டும்.

இத்தனைக்கும் இவனை இளம் வாலிபப் பருவம் தாண்டிய தவஞானத் தாடிவாலாக்கள் வரிசையிலே, அவிழ்த்துவிட்ட காளைகளின் மிடுக்கான துடிப்புள்ளவன் வர்க்கத்திலோ சேர்த்தியாக்கவும் முடியாது.

இவன் திடகாத்திரமான ஓர் வாலிபன். வாலிபத்திலே பலவித தேர்ச்சிபெற்று முதிர்ந்த உள்ளமுடைத்தான ஒரு ஜீவி.

தன் சுய விருப்பு வெறுப்பு, ஆத்திரம், பகை, பழி ஆகியவற்றைத் தீர்த்துக்கொள்ளுமுகமாக ஏகாந்தமாகப் பரந்து கிடக்கும் பிரதேசங்களைத் துண்டு துகள்களாக்கி அந்தத் துண்டு துணுக்குகளில் தனியாதிக்கம் புரிந்துகொண்டு, தானே மூலதரக்காரனாகவும், தான் பிறந்த சொந்த மண்ணின் மைந்தர்களை அநாதைகளாக்கிவிட்ட சாணக்கியத்தை அதன் கோர விறுத்தத்தை எதிர்த்துச் சின்னஞ்சிறு பிராயத்திலேயே இவன் பலதரப்பட்ட போராட்டங்களில் குதித்து அந்தப் போராட்டத்தின் கண் மக்கள் விழிப்படையவும், எழுச்சிகொள்ளவும் கிளர்ச்சியடையவும் செய்திருக்கிறான்.

எங்கெங்கெல்லாமோ கிடந்து வந்த அந்த வெள்ளத் தோலுணிகளான பணநாயகர்களை உலுப்பிய இந்த இவனின் போராட்டச் சுவடுகள் இன்றும் இவன் நெஞ்சில் அழியாச் சித்திரங்களாகக் கிடக்கின்றன. உறுதிவாய்ந்த இந்த நெஞ்சு அதே அந்நியர்களின் ஜனநாயகப் போர்வையில் ஆக்கிரமித்த இந்தப் பிரதேசங்களிலும் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதை நினைக்க அவன் மனசு புழுங்கிற்று.

பெண்களுள் தாய்மையையும், ஆண்களுள் திடகாத்திரத்தையும், மனிதர்களுள் சகோதரத்துவத்தையும் அவன் பார்பை பாவி, அந்த இலட்சியங்களுக்காகவே தன்னை முற்றாக அர்பணித்துவிட்ட இவனுக்கு, கிணற்றுத் தவளை போல் உள்ளே கட்டுண்டு அடைப்பட்டுக் கிடக்கின்ற இந்த அதிகார சேவகம் தனது உலகளாவிய இயக்க இலட்சிய நோக்கிற்கு இட்ட விலங்காகவே அவனுக்குப் பட்டது.

இந்த இவர்களால் கவியும் யுத்த மேகங்களை இவனால் இந்த முகாமிற்குள் கிடந்து தடுக்க முடியுமா?

அவன் இந்தக் கவச சேவைக்கு விண்ணப்பித்த போதே அவன் தோழன் ஒருவன் கூறியிருந்த வாக்கியங்கள் எத்தகைய சத்திய வெளிப்பாடானவை. அவை இவன் மன்சுகள் அலை எழுப்பின.

'என் தோழனே, நீ மாறுவேஷம் அணிந்துகொள். அதனை நான் தடுக்கவில்லை. ஆனால், உனது உள்ளம் உடைப்பெடுத்த பெருவெள்ளம் என்பதை அறிவேன். அது சமுத்திரத்தில் சங்கமித்ததுபோல் பழக்கப்பட்டது. மனுக்குலத்தோடு ஒன்றித்த உலக நோக்கில் உன்னைத் தூய்மைப்படுத்திக்கொண்ட நீ இந்த ஆதிபத்தியவான்களுடன் சென்றால் ஜனவாடையே தெரியாமல் மனம் திணறித்துடிப்பாய். அந்தப் பிரதேசம் நம் நாட்டுத் தேசியப் புணருத்தாரண எழுச்சியால் அமைந்ததன்று. அது வெள்ளை ஆதிபத்திய பணநாயகர்களின் சாம்ராச்சியத்தைப் பலப்படுத்த ஏவப்பட்ட கூலிப்படைகளால் அமைத்த சிறைக்கேடயம்.

எச்சரிக்கை செய்த தோழனின் ஞானபோதம் இவனுக்கும் உண்டு. இவனும் இத்தாற்பரியங்களைப் புரிந்தவன் தான். எனவே, அவன் யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டே கிளம்பியவன். அப்படியே இந்த சிறைக்கூடத்துள் வந்து சேர்ந்து ஐந்து ஆண்டுகளாகிவிட்டன. தான் இப்படி இந்த ஆசாமிகளுடன் வந்திருக்கக் கூடாது என்று இப்போது சிந்திக்க ஆரம்பித்திருக்கிறான். தனது முட்டாள்தனத்தை நினைத்துத் துயரப்படுவதும் அழுந்துவதுமே அவனுக்கு பகுதிநேர வாடிக்கையாயிற்று.

தன் வாலிப இதயத்தில் கருக்கொண்ட இலட்சிய தாகத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்ற விபரீத ஆசையில் அவன் பெற்றோர்கள் ஆக்ரோஷமாக எதிர்த்தார்கள். சித்திரவதை செய்து துன்புறுத்தி வருத்தினார்கள். ஆனால், அவன் கொண்ட தாகம்

தணியவில்லை. பெற்றோர் அப்படி அவனை எதிர்க்காதிருப்பரேயாகில் அவனுக்கு ஆக்கினை புரியாதிருந்தால்... அவனுடைய சமதர்மலோக இலட்சியத்துக்குக் குறுக்கே தடை போடாதிருந்தால்... அவன் இப்படியெல்லாம் ஒரு தேசாந்திரியாக ஏக ஆதிபத்தியங்களின் ஏவற் கூலிகளில் ஒருவனாக ஆகியிருக்க மாட்டான்.

தன் பெற்றோர், உற்றோர், உறவினர், இனசனர் ஆகியோரால் தான் அடைந்த அவமானங்களையும் துன்பதுயரங்களையும், அவர்கள் அவனுக்குச் செய்த கொடிய நிஷ்டூரங்களையும் அந்த அகால வேளை நேரத்திலே படுக்கையில் சரிந்திருந்து அவன் மீட்டு நினைவுபடுத்திய போது அவன் கண்கள் கலங்கிக் குமிழ்த்தன.

அவனைக்காதலித்த காதலியும் அதற்காகவே கைவிட்டு போயினாள். அவள் அவனை அமைத்திருக்கலாம். ஆனால், அவன் அவள் பேரத்திற்கு மசியவில்லை. அவளும் வெறுத்தாள்.

நான் அன்று வீட்டை விட்டு வெளியேறாதிருந்திருந்தால்.....?

தான் பட்ட துயரங்களை தனக்கெதிரான நிந்தனைகளை இனி நினைத்துப் பயன் என்ன என்றும் அவனுக்குப்பட்டது.

மனசில் ஓர் ஆயாசம் தட்டியது.

அந்த உத்தரிப்புகளை விஸ்தரித்து இரைமீட்டவனாக ஆகிய போது.... உடலயர்ந்து உறங்கிவிட்டான்.

## 4

காலைச் சூரிய ஒளிக் கதிர்கள் மின் கம்பிகள்போல் நெற் துவாரங்கள் வழியாக அவன் படுக்கையில் குத்திட்டு விழுந்தன. தலைசாய்த்து விழித்துப் பார்த்த கண்ணில் பிரதேசமெங்கும் ஒரே பரபரப்பாக சந்தடியாக இருந்தது.

நள்ளிரவுக்குப் பிறகு விடுதிக்கு விரைந்து வந்து அரைதூக்கம் போடுகின்ற சகபாடிகள் பொழுது புலர்ந்து பனிமூடம் கலைவதற்கு முன்பே எழுந்து பாத்றூம் பக்கம் சென்றுவிட்டார்கள்.

இவனோ இன்னும் படுக்கை விட்டு எழுவதாய் இல்லை. இவனுக்கு இதெல்லாம் ஒரு வெறுப்பாக மனசு விவரிக்கமுடியாத ஒரு பாதிப்பாக

இருந்தது. நெஞ்சில் குமிழ்த்த பிரளயம் மனசுகள் கமாரிட்டுத் தகித்துக்கொண்டிருந்தது.

சுகயீனக் கடிதமொன்றைப் படுக்கையிலிருந்தே எழுதி அடுத்த கட்டில்காரனிடம் கொடுத்தான்.

ஆஸ்பத்திரிக்குப் போகவேணும்......

சொற்ப நேரம் அப்படியே கட்டிலில் கிடந்தான். சகநண்பர்கள் கடமைக்குச் செல்லத் தயாராகிவிட்டார்கள்.

பாத ஒலிகள் லயம் பிசாகாமலே கேட்கின்றன.

இவன் சொற்ப நேரத்தால் சோம்பல் முறித்து எழுந்தான்.

ருத்ப்றஸ் எடுத்து பற்களைத் தேய்த்துக்கொண்டு பாத்றூம் பக்கம் தாவும்போது புதிதாக ஏதோ ஒருவித சிணிநாற்றம் அந்தப் பாத்றூமில் இருந்து இவன் நாசியில் குமுக் கென்று அடித்தது.

முகம் சுழித்தது.

இந்த உலகத்தையே அளந்த இவனுக்கு இந்த் நாற்றத்தின் அர்த்தத்தை அளக்க அதிக நேரம் எடுக்கவில்லை.

சீ, நாய்ப் பிறவிகள். தேசப் பிரேமிகளின் சேவை ரத்த வெடில்களாகவல்லவா அடிக்கிறது?

குடல் ஒருகணம் குமட்டிற்று. வயிறு குறாவ ஓங்காளித்து ஒருபாட்டம் காறித்துப்பினான். பாத்றூமிற்குள் போய் சவர்பாத் எடுத்துக்கொண்டு, நாக்கிளிப் புழுவாட்டம் நுளுந்திக்கொண்டு வெளியே வந்தான்.

படி ஏற, முனைந்து உட் பாடக் கதவுகளைத் திறந்து கால் தாவுகிறபோது, அவன் சற்றும் எதிர் பாராத ஓர் ஈனக் குரல் பல்லி சொன்ன மாதிரி இவன் காதில் விழுந்தது.

சலாம் சேர்

உள்ளே வைத்த கால் வைத்தபடி அவன் நின்றுகொண்டான்.

உடலைச் சற்று வளைத்து முகத்தைத் திருப்பிக் கூர்ந்து பார்த்தான்.

அது ஒரு படு கட்டை வயது போன கிழவன்.

கிழவனின் தாடைச்சதை தொங்கித் தொளதொளத்துப் போய்விட்டது. ஒரு கையில் இற்றுப்போன தும்பு கழன்ற ஒரு துடைப்பக் கட்டை. மறு

கரத்தில் விளிம்பு உடைந்த வாளியும் ஒரு ரிபன்கரியர் போல் மூன்று நான்கு இறாத்தல் சோறு கொள்ளத்தக்க கறள் கட்டி உக்கி நெளிந்த ஒரு தகரப்பேணியும்....

இந்த விதமான உபகரணங்கள் சகிதம் பழைய கோட் ஒன்றும் கிழவன் அணிந்திருந்தான்.

ஆசாரமாக வந்த அரிசிக் கூப்பனுக்குப் பின் அகோரித்து எழுந்த உணவுப்பஞ்சச் சாத்தானின் கடும் சோதனைக்குப் பாத்திரமானதாலோ என்னவோ கிழவனுக்கு நூறு வயசுக்கு மேல் என்று எந்தத் தேகசாஸ்திரியும் துணிந்து கூறுவான். ஆனால், வெற்றிலைக்காவி கறள்கட்டிய இறுக்கமான பற்கள் ஒன்றுகூட விழாமல் வரிசையாக கிடக்கிற விறுத்தத்தைப் பார்த்தால் கிழவன் அறுபதைத் தாண்டவில்லை என்றே கணிக்கலாம்.

வளர்த்த நாய் முகத்தைப் பார்க்கிறசாடை. கிழவன் இவனைப் பார்த்த கண்களை வெட்டாமலே அப்படியே நின்று கொண்டான்.

இவன் உள்ளே வைத்த காலைப் பின்னுக்கு இழுத்தபடி வேண்டுமென்றே ஒருவித அதிகார தோரணையில் கேட்டான்.

"ஓ மனுஷா, ஏன் உப்பிடிப் பாக்கிறே. என்ன வெசயம்.. என்ன வேணும்..... சொல்லு?"

கிழவன் தன்னிடம் பிச்சை என்று வாய்விடாமல், சந்தோஷம் ஏதும் வாங்கவே தயங்கி நிற்கிறான் என்று யூகித்த இவன் அதிகார தோரணையில் கிழவனைக் கடிவது போல் பாசாங்கு செய்த போதும் இவனையறியாமல் இவனுள் கசிந்த இரக்க நெஞ்சமும் விழிகளும் கிழவனுக்கு வியப்பாக இருந்தன.

இவரு மற்ற ஆளுங்களப்போல கரடுமுரடான தொரையில்லே என்று இவனைப் பற்றி கணிப்பிற்குக் கிழவன் வந்தான். எனவே, கிழவன் சற்றுத் துணிச்சலுடன், தான் இவனிடம் தயவு வேண்டி நிற்கும் பாவனையை மீண்டும் காட்டி அவன் எதிரே நின்றான்.

கிழவன் தன்னை எதிர்கொண்டதானது தான் வெளியே வைக்கிற திட்டத்திற்கு ஒரு தடையாக இருந்த போது அவன் மனம் சற்றுச் சலித்துக்கொண்டது. ஆனால், கிழவன் ஒரு சின்னஞ்சிரு குழந்தைபோல் வெறும் அப்பாவித் தனமாகத் தன்னைப் பார்த்துக்கொண்டு நிற்கிற கோலத்தைக் கவனித்த அவன் சற்று வேளை தன்னுள்ளே மனங்கனிந்து

நின்றான்.

"என்ன தாத்தா யோசிக்கிறீங்க, தாத்தவுக்கு என்ன வேணும்?"

பாஷைகள் ஒருவருக்கொருவர் புரியாதபோதும் பாசத்தோடும் பேசும் பாவனையில் கிரகித்துக்கொள்ளும் முறையில் பழகிப்போன கிழவனுக்கோ இவனுக்கோ இந்தப் பாஷைகள் குறுக்கே தடையாக இருக்கவில்லையாதலால் எந்தக் கிருத்தியங்களும் நிகழ முடியும் போல் இருவருக்கும் தோன்றியது.

இவன் போலவே கிழவனும் புரிந்துகொண்டான்.

கிழவன் இரண்டடி பின்னே வைத்து கான் ஓரமாகப் பதுங்கி நின்று ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தான். பம்மித்த வெற்றிலைவாயைக் குதப்பிப் பக்கவாட்டில் துப்பிவிட்டு, மேவாய்க்கட்டையைப் புறங்கையால் துடைத்தான்.

"சேர், இந்த ஊருங்களுக்குப் புதுசு போல..... அண்டாலத்தான் இங்கிட்டு வந்ததோ?"

கிண்டலாக அல்ல, சிரித்துக் கொண்டு ஹாஸ்யமாகத் தான் கேட்டான் என்பதைப் புரிந்துகொண்ட இவனும் சிரித்துக் கொண்டான்.

"நான் ஊருக்குப் புதுசு இல்லே. பழசுதான். ஆனா, நான் எனக்குப் புறம்பான தேவையில்லாத தனிப்பட்ட கருமங்கள் எதிலும் ஈடுபடுவதில்லை. அது என்னால் சாத்தியமாவதுமில்லை"

"ஓ... தொரையக் கண்டபோதே நானும் அப்புடித்தான் நெனைச்சேன். இங்கே நாள் முழுதும் அலைஞ்சு கழுவித் துடைச்சிக்கிட்டுத்தான் போறேன். ஆனா, தொரமாதிரி... ஒங்கமாதிரி இப்படி ஆளு இருக்கிறதா இம்புட்டு நாளாத் தெரிஞ்சுக்கலே...."

மனங்குளிர்ந்த சிரிப்பு இவன் முகத்தில் சிலிர்த்தது.

"அப்படி ஒண்ணும் விசேசமில்லே. ஒங்களப்போல ஆளுங்க இந்த மாதிரி ஆளுங்ககூட ஒண்ணாயிருந்து பழகவும் வேல வெட்டி டூட்டி செஞ்சுக்கவும் எப்படி முடியுது? அது தான் புதுமையா இருக்கு?"

"ஏன், இதிலே அப்படி என்ன புதுமை இருக்கு?"

கைகொட்டிச்சிரித்தான் கிழவன். மனம் அந்தரித்தது.

இந்த தொர ஒலகம் தெரியாத சரியான ஒரு அப்பாவி

தனக்குள் கிழவன் இப்படிக் கணித்தபோதே அவன்மேல் கிழவனுக்கு ஒருவித பரிதாபம் மேலிட்டது.

"தொரே, உண்மையிலே தெரியாமத்தான் இப்பிடிக்கேக்கிறீங்களா....?"

"ஆம்....."

"அட கழுதப்பிள்ளையாண்டானே"

மனசுள் சலித்துக்கொண்டான். இருந்தும், இந்தக் கழுதைப் பிள்ளையில் இனம் புரியாத பாசம் தலையெடுத்தது.

அந்தப் பாசமே அடுத்த கணம் கிழவன் நம்பிக்கையைத் தளர்த்திற்று.

முகம் சுண்டிக் கோணிற்று.

இந்தத் தொரைகிட்ட அந்த வெசயமாப் பேரம் பேசிக்க ஏலாது. இந்நாளு அதிலே நாட்டங் கொண்டவராத் தெரியலே... இவரால நமக்கு ஒரு சல்லிப் பிரயோசனமும் கெடையாது.

கிழவன் இப்படியெல்லாம் கற்பனைபண்ணி விசனப்பட்டுக்கொண்டான்.

கிழவனின் கற்பனை யூகம் சரிதான்.

இந்த இவனுடன் பேரம் பேசவோ, இவன் ஆசாபாசங்களை விலைபேசி எடுத்துத் தனது வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்ளவோ எதற்குமே லாயக்கற்ற இந்தத் துரையோடு நெடு நேரம் மினைக்கடுவதே வீண் பிரயத்தனம் என்று கிழவன் முடிவு கட்டினான்.

சலிப்புத் தட்டிற்று.

"சரி தொரே, நான் வரப்போறேன்... கையில் ஏதும் வசதியிருந்தா ஒரு சந்தோஷம் குடுங்களேன்"

கொஞ்சமும் வெட்க உணர்வோ கூச்சமோ குறுகலோ கொள்ளாமல் கிழவன் அப்பட்டமாகவே கேட்டான்.

எதுவித தயக்கமோ பதகளிப்போ நாமமோ இன்றிக் கை நீட்டிப் பிச்சை என்று கேட்கின்ற லட்சக் கணக்கான இந்நாட்டு மன்னர்கள் நகர வீதிகளில் நகரத்து மூலைமுடுக்குகளில் உற்பத்திசாதனங்களாகி, பிச்சாபாத்திரம் ஏந்தித் திரிகின்ற கோலம் இந்த இவனுக்கும் தெரியும். அந்த மோஸ்தரில் இந்தக் கிழவன் இல்லை. இந்த மனுஷன் சந்தோஷம் என்ற அழகான பதப் பிரயோகத்தினுள் பதுங்கிய ஒரு கொரவமான பிச்சைக்காரன்

என்பதையும் இவன் கண்டுகொண்டான்.

பிரபல பெரிய மனிதர்கள் எப்படிப் பெரிய மனிதர்கள் ஆனார்கள். என்ற சரித்திரப் புரட்டல் வேறு சங்கதி. தாம் செய்த கறுமங்களைத் தீர்க்கக் கடவுள் தயை நாடி கோயில் குளம் சத்திரம் சாவடிகளில் நிரந்தர பிச்சைக்காரர்களை வரிசைப்படுத்தி ஆளுக்கொரு நாணயதானம் பண்ணிவிட்டு வலு சுளுவில் பெரும் புண்ணியவான் களாகிறார்களே, அந்தப் பிச்சைக்காரர் ரகத்தை இந்தக் கிழவன் சார்ந்தவனல்ல என்றும் இந்த வீரன் தெரிந்துகொண்டான்.

விடுதியில் ஒரு தோட்டியாகவிருப்பதால் கிழவன் ஏதோ உரிமையோடு ஒருவித பாசத்தோடு அப்படிச் சம்பாஷிப்பதும் இவனுக்குப் புரிகிறது. ஆனால், சும்மா என்றால் அது என்னவானாலும் பிச்சை பிச்சைதான்.

பிச்சை கொடுக்கிறவன் மூன்று பெரும் குற்றங்களைப் புரிகிறான். என்று வேறு இவன் சொல்லிக்கொள்பவன். பிச்சைக்காரனாக்கப்பட்ட காரணத்தைப் பிச்சைக்காரன் தெரியவிடாமல் மறைத்தல் பிச்சை எடுக்க வைத்தவர்கள் யார் என்று தெரியவிடாமல் அவன் சிந்தனையை மழுங்கடித்தல் பிச்சைக்காரர்களையே தோற்றுவித்தவர்களை எதிர்க்கும் சக்தியை இழந்து அதே மனிதர்களின் தயவை நாடும் நிலைக்குள்ளாக்குதல் இப்படியாக அந்தக் குற்றங்கள் சூழ்கின்றன என்பது அவன் தீர்க்கம். புதிய ஒரு சமத்துவ சமுதாயத்துக்கான இந்தத் தத்துவங்களை இவன் தெரிந்தபோதும், சந்தோஷம் கேட்டு நிற்கிற இந்தக் கிழவனுக்கு இப்போது அதைப் பற்றி விரிவுரை செய்வதில் பிரயோசனமோ அர்த்தமோ இல்லையென்றே நினைத்தான்.

கிழவனோ இத்தனைக்கும் இவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

"தொரே, என்னமோ ஒரே யோசனையில் அமுங்குனாப் போல... போகலாம்நு பார்க்கிறேன். சந்தோஷம் ஏதாச்சும் குடுங்களேன்"

'துரை கட்டாயம் ஏதாச்சம் தருவார் என்ற நம்பிக்கை கிழவனுக்குப் பிறந்தது. அதனால் இந்த அழுங்குப்பிடியில் நிற்கிறான்.

அவனோ சாடையாகச் சிரித்துக் கொண்டு, தனக்கு அந்த விஷயங்கள் கொஞ்சமும் தெரியாது என்கிற பாவனையில் ஒரு குழந்தை மாதிரியே பேதலித்தபடி சம்பாஷித்தான்.

"நீங்க இங்கே வேல செய்யிறீங்க. அதுக்குச் சம்பளம் தருகிறார்கள்தானே, அது போதாதா? இதுக்கெல்லாம் சந்தோஷம் வேறு வேணுமா?"

கிழவன் கண்களைச் சுருக்கி நமட்டிச் சிரித்தான். முகத்தில் ஒரு பரிதாப கோலம் படர்ந்தது. "ஏன் கேட்டன்" என்ற ஒரு அழுந்தல் நெஞ்சிலுறைந்தது. எனினும், புன்முறுவலோடு வாயிலூறிய வெற்றிலைச் சாறைப் பொழிச்சிட்டுத் துப்பிவிட்டு, அந்த வீர இளைஞனைப் பரிவோடு பார்த்தான்.

"சேர், நீங்க சொல்றது நெசந்தான். நான் மறுக்கலே. ஆனா, அந்தச் சம்பளம் ஒரு ஆத்துமத்துக்கு அரை வயித்துக்கே போதாதுங்க. எனக்கே அப்புடீன்னா வூட்லே கெடக்கிற பெண்டாட்டி புள்ள குட்டியென்னு ஆறு ஏழு ஆத்துமங்களுக்கு என்னால தனியா நின்னு தாக்குப் பிடிக்க முடியுங்களா?"

இப்பிடி ஒரு கேள்விக்கணையோடு கிழவன் தன் அசுரபேச்சை நிறுத்தினான்.

"துரை"யின் நெஞ்சு சுரீரித்தது.

"ஆமா, தாத்தாவுக்கு இந்த வேலையைவிட வேறு ஏதும் வரும்படி இல்லையா?"

கிழவனுக்கு எடுத்தாற்போல் அரிச்சந்திர மயானகாண்டத்தையோ, "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்ற ஆறாம் கற்பனையையோ சும்மா வாசிக்க மனசு ஏவவில்லை. சற்று யோசனையில் ஆழ்ந்தவனாக மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னான்.

"வேற வரும்புடின்னா நாமளாத் தேடிக்கொள்ளத்தேவையில்லை. தானாகவே வந்துடும். நாமளாகவும் தேடிக்கலாம். அது சுளுவான காரியம்தான். ஆனா, அது சீரழிஞ்சவெசயம். ஒங்களப்போல ஆளுங்களுக்கு அது உவப்பாயிருக்கும்னு எனக்குத் தோணலே. வெறுப்புக் காட்டுவீங்க. அந்தந்த ஆக்களுக்குத்தான் அந்தந்த வெசயங்கள்ல விருப்பம் இருக்கும். ஒங்களுக்கெல்லாம் அது ஒத்துவராத வெசயம். அதுதான் யோசிக்கிறேன்.

துரைக்கு மூளை மயங்கிற்று.

"அதென்ன தாத்தா அது... எனக்கு ஒத்துவராத அந்த வெசயம் என்ன.....?"

நுணலை தன் வாயால் கெட்ட நிலை. வீரன் அப்படி ஒரு அவசர கோலத்தில் கேட்டு வைத்தான்.

கிழவன் முகம் சாடையாக மலர்ந்தது.

தொர அந்தரப்படுறதப் பாத்தா வெசயம் வாய்க்கும்போலிருக்கே? என்று கிழவன் தனக்குள் யூகித்துக்கொண்டான்.

தனது கேள்விக்குக் கிழவன் பதில் கூறத் தயங்கியதையும் முகக் கோலம் மாறியதையும் மட்டுக்கட்டிக்கொண்டான் வீரன்.

கிழவன் மனசில் ஒரு வலை பின்னிற்று.

சொல்லவா விடவா? ஒத்துக்கொண்டா ஜோர். இல்லேன்னா மாட்டிக்கணும். பொறவு ஆபத்து.

ஐயம் தயக்கம். யோசனை சிரசு முட்டிற்று.

இதையெல்லாம் இந்தத் தொரைக்கிட்ட விரிவாச் சொன்னாலும் நம்மளுக்குப் பிரயோசனம் இருக்காது. ஆளும் அந்த மாதிரித் தொரையாத் தோணலே. இப்படி ஒரு சாதுவான இவருக்கிட்ட அதச் சொல்லி நம்ப மதிப்பைக் கெடுக்கிறது தான் மிச்சம். புறகு எந்தக் காலத்திலயும் ஒரு செம்புச் சல்லியும் தொரைக்கிட்ட வாங்கிக்க ஏலாது. ஆனபடியா அந்தச் சமாச்சாரத்தை நசூக்கா மறைச்சுப்பூடணும்.

கிழவன் மெல்ல நழுவ ஆயுத்தமான போது....

"என்ன தாத்தா, எதுவுமே பேசாமல் அப்பிடியே திகைச்சுப் போயிட்டீங்களே... நீங்க சொன்ன விசயம் சந்தோஷம் கொடுத்தாத்தான் சரி வருமா?"

கிண்டலாகவே கேட்டார் துரை.

நெற்றியைச் சுருக்கி ஏதோ யோசித்த கிழவன் துரை முகத்தில் கண் பதித்துக்கொண்டிருக்க, கொஞ்சம் மிடுக்காகப் பார்த்து, "தாத்தா, ஏதோ எனக்கு ஒத்துவராது என்று சொன்னீங்களே, அது அப்படி என்ன அம்மட்டுப் பெரிய விசயமோ?" என்று வியப்பாக விடுத்துக் கேட்டான்.

கிழவனின் பதிலுக்காகக் காத்து நின்றவன்மாதிரி அவன் தன்னுணர்வின்றி தான் வெளியே செல்ல வேண்டும் என்ற திட்டத்தையும் மறந்து தனது சோலியையும் மறந்து நின்றான்.

தொரே சரியா இந்த ஒலகத்தைப் படியாத ஒரு அப்பிராணி என்று கிழவன் முடிவு கட்டினான். அப்போது கிழவனையும் மீறி அடங்காச் சிரிப்பொன்று குபீரித்து வெடித்தது.

"என்ன தாத்தா உப்பிடிச் சிரிப்பு வருது?"

"பின்னே என்னா தொரே. இம்புட்டுப் பெரிய எளந்தாரியா வளந்திட்டு அதுவும் இந்த மாதிரி ஆளுங்களோட இருந்துக்கிட்டு ஒண்ணும் தெரியாத பச்சைப் புள்ளகணக்காப் பேசுறீங்களே. அப்படிக்கொத்த நீங்க இந்த ஆளுங்க கூட இருந்து டூட்டி பண்ணிக்க எப்பிடி முடியுது? அது ஒங்க ம்னசுக்கு நிம்மதியா சந்தோஷமா இருக்கெங்கிறீங்களா?"

மல சல கூடங்கள் கழுவி அழுக்காய்ப்போன கான்கள் துடைக்கும் ஓர் அன்றாடம் காய்ச்சியான இந்தக் கூலிக்கு இந்தப் படுகிழவனுக்கு, தன்னை விடவும் தனது சகாக்களைக் காட்டிலும் தனது சகாக்களையும் அளந்து மதிப்பிடுகின்ற புத்தி சாதுர்யம் இருப்பதைக் கண்டு இந்த வீரன் உண்மையாகவே அதிர்ச்சி வியப்பு அடைந்தே போனான்.

கிழவன் வினவியதுபோல் அவனின் இலட்சியத்துக்கோ மனசுக்கோ கொஞ்சமும் ஒத்துவராத ஜென்மங்களுடன்தான் இவன் சதா நொய்து இணைந்துகொண்டிருக்கிறான் கிழவன் கணிப்புக் கொஞ்சம் கூடப் பிசகில்லை அதற்காக இந்த விடுதியைவிட்டு இவன் யாருக்கும் தெரியாமல் ஓடித்தப்புவதோ மறைந்துகொள்வதோ அதுவும் சாத்தியமாகப் போவதில்லை. இவனுக்கும் ஓர் வாழ்க்கை, வயிறு, பெற்றோர், உற்றோர், மற்றோர் என்று பல்வேறு சுமைகள் பயங்காட்டிக் கொண்டிருப்பதும் ஒரு காரணமா என்றும் யோசிக்கிறான். என்றாலும், இலட்சியப் பற்றோடு அதன் போராட்ட உணர்வோடு இந்த ஜாம்பவான்களுடன் இணைந்திருப்பதுகூட ஓர் அந்தர வாழ்க்கைதான்.

என்ன தொரே, நான் சரியா ஒரு வாக்குச் சொல்லலே. அதக் கேட்டுப்புட்டு அதிகமா யோசிக்கிறீங்களே... ஏன் தொரே நாம எவ்வளவோ படிச்சும் பழகியும் அவங்களைப்பற்றி நம்ப சகாக்களைப் பற்றிச் சரியாப் புரிஞ்சுகிடாத விஷயங்களை நீங்க சிம்பிளாத் தெரிஞ்சுகிட்டீங்க. அவங்கள் ஏதோ எங்கெல்லாமோ.

விடுகாலிகள் போல் போறாங்கள். புறகு உள்ளே வர்றாங்கள். அதுக்கு மேலே எனக்கு ஒண்ணும் தெரியலே தெரிய முனைந்ததுமில்லே உங்களுக்கு ஏதும் தெரியுமா?"

கிழவன் அவங்களப்போல நீங்களும் ஒங்க ஓய்வு நேரங்கள்ல காம்புக்குள்ள முடங்கிக்கிட்டு இருக்காம ஆறுதலாக வெளியே சுத்திப் பாத்தீங்கன்னா என்னைப் பாத்து உப்பிடிக் கேட்டிருக்க மாட்டீங்க. ஏன்னா, மத்தவங்க சொல்றத மாத்திரம் தெரிஞ்சுண்டு அப்புறம் தானே தன்னாட்டம் கண்டு விரும்புற காரியம்தான் மனசுக்கு நல்லாயிருக்கும் உவப்பாயிருக்கும். அப்பிடிப்பட்டதுதான் அப்புறம் நெலயாவும் உறுதியாவும் பிடித்தமானதாவும் இருக்கும். ஒருதருக்குப் படிக்கிற வெசயம் மற்றவங்களுக்கும் அதே மாதிரிப் பிடிக்காதென்னு அப்பவே சொன்னேனே தெரியுங்களா? அது இதுக்காகத் தான்..."

கிழவன் பீடிகையோடு பேசிய வார்த்தைகளையும் அவற்றின் அர்த்தங்களையும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே இவன் முகம் காட்டிற்று.

சற்றுத் தாமதமாக, தான் கிழவன் கூறியவற்றின் அர்த்தங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் துடிக்கும் ஆவலைக் காண்பிக்கக்கூடாதென்ற பிரயத்தனத்தில் துவாய்த் துண்டை எடுத்து ஒருவாட்டி முகத்தைத் துடைத்தான்.

"அது சரி தாத்தா, நீங்க இங்கே உள்ள சகாக்களைப் பற்றி இந்தத் துரைமார்களைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

சற்று வினையமாகவே கேட்டான் வீரன்.

கிழவன் முகம் சுருங்கிற்று. வாட்டசாட்டமாகத் தன்கூட நிற்கும் இவன் முகத்தை இப்போது ஓர் அர்த்த புஷ்டியுடன் பார்த்தான். கெண்டைக் கால்களை மெதுவாக மடக்கிப் பின்புறம் சாடையக நகர்ந்து சுற்றுமுற்றும் பார்த்த கிழவன், கொஞ்சம் தணிந்த குரலில் அனுங்கி ஒருவித நம்பிக்கையற்ற மனோபாவத்தோடு தயங்கித் திகைத்தான்.

"நாம மனந்துறந்து நமக்குத் தெரிஞ்ச வெசயங்கள வெட்டையாச் சொன்னால் தொரை மனசு பொறுக்குமோ என்னமோ....?

பீடிகையோடு அவன் முகத்தைப் பார்த்தான் கிழவன்.

"அப்பிடி ஒண்ணும் வராது. பயப்புடாமல் மனம் திறந்தே சொல்லுங்க"

கிழவனுக்கிருந்த சந்தேகமும் பயமும் மறைந்தன. இவன் வாக்கில் கிழவனுக்கு நம்பிக்கை துளிர்த்தது.

"எனக்கென்னமோ தொரமாருங்க மனசிலே மனுசாளை நேசிக்கிற தன்மையாக் காங்கலே. தங்க தங்க கடமையவுட்டுட்டு எல்லாரும் பொம்புளப் பொறுக்கியளாட்டம் ஊர் சுத்துறவங்க மாதிரித்தான் தெரியுது.... அப்புடி இல்லேன்னு நீங்க நெனைச்சா என்ன மன்னிச்சிருங்க...."

வீரன் நாணிச் சிரித்தான்.

கிழவனின் கணிப்பு முற்றும் சரியாகவே அவனுக்குப்பட்டது. அப்படித் தெரிந்தபோது, தன்னை ஒரு ஒழுக்கசீலனாக மதித்துக்கொண்டிருக்கிற கிழவன் எதிரே தான் ஒரு நிபந்தனையற்ற ஒப்புதல்காரனாக மாறி விட்டதாக இவன் கருதினான். இதனால் தனது எதிர் காலத் திட்டத்தைக் கிழவனுக்கு விரித்துக் கூறுவதோ, அப்படி ஓர் அக்கினிப் பரீட்சைக்கான தனது பிரவேசிப்பை அப்படிக் கங்கணக் கட்டிக்கொண்டிருப்பதைக் கிழவன் தெரிந்து கொண்டிருப்பதோ எந்தவிதத்திலும் சங்கையான காரியம் அல்ல என்றும் அவன் எண்ணினான். இப்படி அவன் எண்ணியபோது மனம் கூசிற்று.

ஆயினும், தன் திட்டத்தின்படி அந்த அக்கினிப் பரீட்சையின் களத்திலே பிரவேசித்து அதன் அதலபாதாளத்தை அளந்துவிடவேணும் என்ற தனது தீர்மானம்கூட கிழவனால் மட்டுமே சாத்தியமாகும் போலவும் அவனுக்குப் புலப்பட்டது. அந்த விஷயம் கிழவனால்தான் சாத்தியமாகுமென்றாலும் அது சம்மந்தமான அகூசையான வார்த்தைகளை வெறுத்துக் கிழவனே சபித்துக்கொண்ட "பொம்புளப்பித்துப்பிடிச்சவன்" களைப் போல் அதே சமாச்சாரத்தை அதே பெண் உறவுகளை விரும்புவதாகத் தான் எப்படித் துணிந்து வாய் விடுவது என்று அவன் மனசு சொற்ப வேளை பூகம்பித்துப் பிரலாபித்தது.

எப்போதும் ஆடவர்கள் பெண் பித்தர்களாகச் சம்சாரிப்பவர்கள் என்னுமளவிற்கு இந்தப் பெண்ணாய்ப் பிறந்தவள்ளெல்லாம் அப்படி ஒன்றும் ஒரு சேரப் படலைதிறக்கிறவளாகவும் இல்லையென்பதும் அவனுக்குத் தெரியும். ஆண்களைப் பித்தர்களாக்குவதற்குப் பெண்களுக்கு இயல்பாகவே உள்ள அங்கரூபம், லாவண்யம், அலங்காரம், சௌந்தர்யம்

ஆகிய சித்திரங்களைக்கூடச் சொல்ல முடியாது.

இந்த லட்சணங்களெல்லாம் வாலைப் பருவத்துக் கோலங்களே தவிர உருவ உணர்ச்சிப் பீறல்களுக்கு ஆளாகின்றவரை ஒரு மின்னல் வெடிபோல் தோன்றி மறைகிற கோலங்களேயன்றி நித்திய அலங்கார ரூபங்களல்ல என்பதையும் அவன் அறிவான்.

இந்த விதமான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்ட இவன் அவ்வகையான அவஸ்தைகளை அனுபவித்து அவற்றில் வெற்றியும் கண்டிருக்கிறான்.

ஆனால், இப்போது எழுகின்ற இந்தப் பெண்பித்து இவனுக்குத் தானாக எழுந்த ஒன்றல்ல. ஏதோ ஒரு பிற உந்துதலில் உயிரைப்பிடித்து வைத்திருக்கிற ஒரு சுமைதாங்கி என்கிற இந்த உடம்புக்கு ஆறுதலளிக்கும் விவகாரமாகத்தான் அதன் அக்கினிப்பரீட்சை என்ற கோதாவில் எழுகிறது.

புரிந்துகொள்ளமுடியாத இந்தச் சூட்சுமத்தை முற்றாக அறிந்து தெளிய அவன் அன்றாடம் முயன்றதுண்டு. ஆயினும் தனக்குள் அதனை அடக்கி ஆண்டு வெற்றி கண்டபின் ஒரு நம்பிக்கையும் அவனுக்குத் துளிர்விட்டிருக்கிறது. இதன் பேறாக அவன் அடைந்த ஆத்ம பலம் ஆத்மசக்தி அவன் சகபாடிகளிடம் மருந்துக்கும் கிடையாது என்பதால், தானே அவர்களுக்குள் ஒரு மகாத்மா என்ற கர்வமும் அற்றவனாகவே இருந்தான். எனினும், அந்த நண்பர்களின் எதேச்சாரத்தனமான சுற்றுலாக்களுக்குப் பிறகு இவன்மட்டில் எழுந்த ஒரு சிந்தனை நினைவு, கனவு, ஆசை, கேள்வி யாவும் இவ்விதமாகவே இருந்தன.

இந்த இவர்களின் இவ்விதமான பெண்பிடி விஷயங்கள் அந்தச் சமாச்சாரங்கள் எங்கே, எப்படி, யாரால நிகழ்கின்றன?

இப்போதும் இதே கேள்விகளே அவன் மனசைக் குடைகின்றன.

இந்த முஸ்தீப்புக்கு அந்தப் பரீட்சைக்கான பிரயத்தனத்துக்குச் சவாலாக, ஒழுக்கமுள்ள ஆசாரசீலன் என்ற நற்சாட்சிப் பத்திரத்தை அவனுக்கு வழங்கிய இந்தக் கிழவன் வேறு இவன் எதிரே நிற்கிறபோது கிழவனையும் மீறி அந்த விவகாரங்களில் இறங்குவதும் காரியசித்தியாக அவனுக்குத் தோன்றவில்லை.

இப்படியான தடைகளில் சிக்குண்டிருக்கும்போது அதே விஷயங்களைத் துருவி அறிந்துகொள்ளவும் அவற்றில் ஈடுபடவும் கிழவனே வழிகாட்டி வேதம் ஓதிவிட்டிருக்கும்போது அவன் மனசில்

ஒருவித தத்தளிப்பு பரிதவிப்பு ஏன் பரவசம் என்றும் சொல்லலாம் அப்படி ஒரு ஆனந்தபரவசங்கூட உண்டாயிற்று.

சமுதாயத்திலே தொடர்ந்து கொடுமைகள், ஈனத்தனங்கள், நிஷ்டூரங்கள் புரிபவனைப் பற்றி மனிதர்கள் அதிகமாக அலட்டிக்கொள்வதில்லை. அத்தகையோர்பற்றி அவர்கள் அலட்டி அலட்டியே அலுத்துப்போய்விடுகின்றனர். பெரும் ஆசாரசீலன், இலட்சியவாதி என்று பெயரெடுத்தவன், சிறுதவறு இழைத்தாற்கூட சோதனையாக ஏதும் மேற்கொண்டாலும் அவனையே மட்டரகமாக மனிதர்கள் தூஷிக்கவும் சாடவும் செய்கிறார்கள்.

இப்படி அபத்தமான அனுபவங்களையும் இவன் ஏலவே பெற்றுக்கொண்டவனாதலால் தனது அபிலாஷைகளைக் கிழவனுக்குக் கூறத் தயங்கினான்.

சொற்ப வேளை ஒரு வார்த்தையும் பேசாமல் பூகம்பித்துக் கிடக்கின்ற நெஞ்சோடு தன்னுள் தீவிர போராட்டம் நடத்திக் கொண்டிருந்தான்.

அப்போது நச்சிரம்போல் அவன் காதில் கிழவன் குரல் மீண்டும் விழுந்தது.

"தொரே, என்னாங்க கடுவலா யோசிச்சுக்கிட்டிருக்கீங்க... நேரமாப்போச்சு. நானு போயிற்று வரட்டுங்களா?"

ஸ்பிறிங், விசை குலைந்து வட்டமிட்ட சாடையான சுயஉணர்வு பெற்ற இவனுக்குக் கிழவன் என்ன சொன்னான் என்றே தெளிவாகவில்லை. அவன் சிந்தனை எல்லாம் எங்கோ சஞ்சரித்து அந்தப் பெண் விவகாரத்தில் ஆலவட்ட மிட்டுக்கொண்டிருந்தது.

"என்ன தாத்தா சொன்னீங்க?"

அவன் நைந்துகொண்டு விடுத்துக் கேட்டான்.

"தொரை இந்த லோகத்தில் இப்ப இல்லப்போல"

வாஸ்தவத்தில் அது உண்மைதான் என்பதுபோல் அவன் தலை தானாக ஆடிற்று.

"அப்புடீங்களா வெசயம்... மிச்சம் சந்தோஷம். அது சரி தொரே, எந்த லோகம்பற்றி...?"

துரைக்கு இப்போ கிழவன் கிண்டல் செய்கிறவரைக்குப் போய்விட்டது.

அந்தளவுக்கு அவனுடன் கிழவன் நெருக்கமாகிவிட்டானென்றால், பெண் விஷயம் லேசான காரியமா?

"நீங்க முதல்ல சொன்னீங்களே, அந்த லோகத்தைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்"

"ஓ... அதுங்களா? என்ன தொரே, அது ஒங்களுக்கு மனசாரப் பிடித்தமாயிருக்கா, இல்லே சும்மா சாட்டுக்குச் சொல்றீங்களா?"

அவன் இதற்கு ஒன்றும் கூறாமல் ஒருவித நாணிப்போடு கிழவனைப் பார்த்து நமட்டிச் சிரித்தான்.

கிழவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"ம்.. மொதல்லே ஒருவாக்குச் சொல்லியிருந்தா இம்புட்டு நேரமா இப்புடி இழுத்தடிச்சுப் பேசிக்கிட்டிருப்பேனா? ஒங்களப் பாத்தா அப்படிக்கொத்த ஆளா எனக்குத் தோணலே. அதான் அவுங்க அவுங்க மனசுக்கேத்த வழிக்கு ஒதவி ஒத்தாச செய்யோணும்கிறதுக்கா அப்புடியெல்லாம் பேசிக்கிட்டிருந்தேன். அது ஒங்களச் சொல்லிக் குத்தமில்லே. அந்தந்த வயசுகள்லே இந்த மாதிரியான எண்ணங்க வரத்தான் செய்யும் அது சகஜம் தானுங்க"

நீட்டி முழக்கி விஷயத்தை வேறு திசைக்குத் திருப்பி விட்டு அவன் முகத்தை ஏவிப் பார்த்தான்.

இருவரையும் மௌனம் விழுங்கிக்கொண்டிருந்தது.

கிழவனாகவே மறுபடியும், "தொரே அமரிக்கையா இருந்திச்சு. ஆனா, ஆளு சரியான ஆசாமிதான்" என்று செல்லமாகக் கேலிபண்ணி ஒருவித பயந்தெளிந்த தோரணையில் சற்று உரிமையோடு சமாளிப்பதுபோன்ற ஆசுவாசத்துடன் வீரனைப் பார்த்துச் சிரித்தான்.

பனி உறைகிற அதிகாலைப் பொழுதிலும் அப்போது அவன் முகம் நெய்யாக வெயர்த்தது.

மனிதஜென்மப் பிறவி வாழையடி வாழையாக இச்சாபூர்வ உணர்ச்சிகளுக்கு இரையாகியே வருகிறது. என்று கிழவனும்.....

"தாத்தா என்னை நன்றாக எடைபோட்டிருக்கிறார். நான் செய்யப்போவது ஓர் அக்கினிப் பரீட்சை என்பது அவருக்குத் தெரியாது. எனது நோக்கத்தைச் சொன்னால் இடையூறாக வரும். கிழவன் என்னதான்

நினைத்தாலும் இந்த விஷப் பரீட்சையில் பிரவேசிப்பதுதான் என்று அவனும்....."

தத்தமக்குள் நினைத்துக்கொண்டார்கள்.

சற்றுவேளை ஒருவர் மனோபாவம் மற்றவருக்குத் தெரியாமலே ஓர் அந்தரங்கமான பயங்கர மௌனத்தில் இருவரும் அமிழ்ந்திப்போயிருந்தனர்.

"தொரே, அப்போ நான் வரட்டுங்களா?"

"ஆ... சரி, ஆனா ஒரு வெசயம்?"

துரையின் பீடிகை கிழவனுக்குத் துப்பரவாக விளங்கிவிட்டது. கிழவனே உசுப்பிவிட்டான்.

"தொரே, அப்போ என்ன சொல்றீங்க? தொரைக்கு மனசிலே அப்புடி ஒரு நோக்கம் இருக்கும்னா, வாயத்தொறந்து ஒரு வாக்கு நறுவிசாச் சொல்லுங்க... நாலுபேருக்குந் தெரியாம கருமத்த அப்புடியே நைசாக ஒழுங்குபண்ணித் தந்துடறேன். அதுக்கு இப்ப என்ன சொல்றீங்க...?"

கிழவன் தனது மனோ நிலையை உரிஞ்சாணமாகத் தெரிந்துகொண்டான் என்று இவனுக்குப் புரிந்தபோது இவனிடம் இருந்த கொஞ்சநஞ்சக் கூச்சமும் பறந்துவிட்டது.

அடைப்புத் திறக்கும் வரைதான் வெள்ளம் மடைகட்டி நிற்கும். அது எடுபட்டால் ஓட்டந்தான். ஓட்டமேதான்.

அவனிடமிருந்த கூச்சம், நாணம், தயக்கம், கௌரவம் என்கின்ற கவசங்களை, பிரபஞ்ச லோகாயதம் என்ற மூலவிக்கிரகம் ஒரு நொடியில் அடித்துத் துரத்திவிட்டது. கேட்பானேன், துரை எதற்கும் ஆயத்தமாகத் துணிந்தே விட்டார்.

"நாலு பேருக்கும் தெரியாமல் கருமத்தை ஒழுங்குபண்ணித் தந்துடறேன் என்ற கிழவன் கவசம் வேறு அவனுக்குக் கிடைத்துவிட்டது.

எனவே, துரை எதற்கும் துணியாலானார். மேனியில் அப்பவே ஒருவித சுரீரிப்பு.

"சரி தாத்தா, நீங்க போங்க... நான் மைம்மல்படவர்றேன்"

"ஆமா, எடம் வலம் தெரியுங்களாா?"

"ஓ... அதைக்கேக்க மறந்துவிட்டேன்... எப்படி வர்றது?"

"கட்டாயம். வருவீங்களா?"

"ஏன் அப்பிடிச் சந்தேகப்பட்டுக் கேக்கிறீங்க?"

"அவனவன் சொல்லிக்கிறமாதிரி நடந்திக்கிறலே. களவுன்னாச்சும் நறுவிசா நடந்துக்கிடணுமில்லையா? அப்புறம் ஏமாத்தியிடக் கூடாது"

"இல்ல தாத்தா நான் அப்படியில்லே. சொன்னா சொன்னபடி கட்டாயம் வருவேன்"

"அப்புடீன்னா, சரியா பொழுது மலைக்குள்ள போவுற நேரமாப் பாத்து அந்த மலையடிவாரப்பக்கமா நேரே வாற மூணாவது மலை உச்சியில வந்து அங்கிட்டு நிக்கிற வாகை மரத்தோட நில்லுங்க. நான் அப்புறம் அங்க வந்து அந்த எடங்களுக்கு அழைச்சுக்கிட்டுப் போறேன். எங்க தங்கிக்கணுமோ அங்க தங்கிக்கலாம். சரிதானுங்களே?"

"ஓல் றையிற்"

"ஆமா, ரேட் என்ன தெரியுங்களா?"

"அதென்ன ரேட்... அப்படியென்றால்"

"மனசுதான் சம்மதிச்சுட்டுதே. "ரேட்" கூடத் தெரியாதா?" என்று நமட்டிக் கேட்ட கிழவன் சிரித்தபடி இருக்கன்னங்களையும் ஒரு தடவை பரக்க விழித்துப் பார்த்தபின், "ரேட் எல்லாம்.. அது பாருங்க சைஸ் சைப்பொறுத்தது" என்றான்.

வெகு சாதாரணமாக மாமூல்பிரகாரம் பேரம்பேசுவது போல் சொன்னான் கிழவன்.

"சரி, எவ்வளவு வரும்?"

"அது வந்து சைஸ்ஸப்பொறுத்துன்னு முன்னமே சொன்னேன் இல்லையா?"

"அதென்னப்பா சைஸ்?"

"இது தெரியாதுங்களா...?" கொஞ்சம் எளங்குட்டியென்னா பத்துப் பன்ரண்டு... அதுக்கு மேலைன்னா ஒரு அஞ்சு ஆறுக்குள்ள முடிச்சுடலாம்"

"அப்படியா...?"

துணிந்தவனுக்குத் துக்கமில்லை. சறுக்கி விழுந்தாயிற்று. சேற்றைக் கழுவினாலும் குளிர் குளிர்தான். இனி என்ன, கொரவமாகக் குளத்தில்

மூழ்கவேண்டியதுதான். அற நனைந்தவனுக்குக் கூதல் என்ன கொடுகடியென்ன?

துரை இனி எதற்கும் றெடி ஆள் மிக அந்தரகாறரானார்.

"சரி, வாறன்"

"அப்ப, மொதல்ல கைச்செலவுக்கு ஏதும் பாத்துக் குடுங்களேன்"

"எவ்வளவு கேக்கிறீங்க?"

"இது அதுக்கில்லே, எனக்கு"

"சரி, எவ்வளவு?"

"ஒரு அஞ்சுரூவா"

சொக்கை கும்மச் சிரித்தகிழவன், இவன் கொடுத்த காசைப் பவ்வியமாக இருகரம் நீட்டி வாங்கி இடுப்புவார்ச் செப்புக்குள் செருகிக்கொண்டான்.

கிழவன் மறையும்வரை துரை அந்த இடம் நகராமல் நின்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கண்களில் இரக்கவூனம் கக்கிற்று.

## 5

பூமியில் மலைச்சாரல்களில் வெட்டைகளில் பனிமூடம் பரவும் மாலை வேலை.

மலையடிவாரங்களில் பொழுது உறைந்து கொண்டு செங்குத்தாகப் போகிறது.

கிழவன் குறிப்பிட்டுச் சொன்ன மூன்றாம் மலைச் சாரலின் குன்றில் ஏறி நின்று அந்தப் வாகை மரத்தடியில் அவன் வெகுநேரம் வரை சுற்றும்முற்றும் பார்த்தான்.

முற்றாக மைம்மல்பட்டுவிட்டது.

கிழவன் வருவதற்கான ஒரு அறிகுறியையோ அசுமாற்றத்தையோ காணவில்லை.

இந்த வீரன் நெஞ்சில் லேசாகப் பயம் தட்டிற்று. தன்னந்

தனிமையிலே இது போன்ற பழக்கதோஷமில்லாதபடியால் ஏகாந்தமான மலைப்பிரதேசத்தில் வயல்வெளியான இந்த வெட்டையில் கொஞ்சங்கூட அவனால் திடனாக நிற்கமுடியவில்லை.

கிழவன் ஆசைமூட்டி அலைக்கழித்துவிட்டானோ?

புதிய பிரச்சனை ஒன்று அப்போது மனசில் உருவெடுத்தது.

விடுதியில் உள்ள நமது காடேறிப் பயல்கள் யாராவது இந்தவேளையாகப் பார்த்து இதேபக்கம் வந்தால்...?

இந்தச் சிந்தனை துளிர்விட்டபோதே நெஞ்சு கமாரிட்டுக் கொண்டது. நன்னி அடிக்கிறமாதிரி மேனி அடங்கச் சாடையாக நடுக்கம் எடுத்தது. இந்த நடுக்கம் பனி அம்முகிற குளிரால் அடிக்கிறதா, பிரமித்துப்போய் நிற்கிற திடுக்காட்டத்தால் எடுக்கிறதா என்று சொல்கிறமாதிரியும் இல்லை.

இந்த இழவு சனியனின் கூத்துக்குள் கோமாளியாக, சற்றுத் தொலைத்தூரத்து லயங்களிலிருந்து காதுகள் கிண்ணிட நாய்கள் வேறு ஊளையிட்டுக் கேட்கின்றன.

இந்த வீரன் உடம்பு காக்கிச் சட்டைக்குள் உப்பிவிட்டது. மனசில் இருந்த உற்சாகமும் கிட்டத்தட்டச் செத்துவிட்டது.

தேகம் நடுங்க மலை உச்சிக்குத்தாவி ஏறி நின்று கீழே எட்டிப் பார்த்தான்.

பசுமையாகத்தான் தெரிகிறது. ஆயினும், இருள் கவிந்த அந்த லயங்களில் உள்ள சனங்களின் ஈனக்குரல்களே அவலமாகக் கேட்கின்றன.

பாம்பின் வாய்த் தேரைபோல் அப்போது பூமியை அந்தப் பிரதேசத்தை இருள் மண்டி விழுங்குகின்றது.

பரவலாக ஏகாந்தமாக எழுந்து கிளரும் ஊதற்காற்று ஊமைக்குழல்மாதிரி இவன் செவிகளில் ஹோவென்று இரைகின்றது.

கூதல் அப்புகிறசாடை அப்போது ஓர் அரவம் மேனியில் விழுந்து நழுவி நெளிந்து நுளுந்திற்று.

ஆ வென்று பயபீதியில் துள்ளிப் பாய்ந்த வீச்சில் பற்றைக் கட்டைகள் அவன் கால்களைச் சிராய்த்துவிட்டன.

எழுந்து பார்த்தால், அது காற்றோடு அள்ளுப்பட்டுவந்த ஒரு

தருப்பைபுல் தண்டு. உண்மையில் வீரன் பயந்தேபோனான்.

"ஐயோடா" என்று வாய் குழறியது.

கிழவன் அஞ்சு ரூபா வாங்குவதற்காக என்னை நைசாக ஏமாற்றிவிட்டான். அவன் ஆடிய நாடகமெல்லாம் அதைப் பறிக்கும் வரைதான். எப்படியும் நாளைக்கு அந்தக் கிழவன் காம்புக்கு வந்தாகவேண்டும்தானே?

அவன் நம்பிக்கை தளர்ந்து மனம் முறிந்துவிட்டது. தேகம் சோர்ந்துவிட்டது. என்றாலும் சரி, நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்ற ஒருசுய திருப்தியுடன் மெல்லத் திரும்பினான்.

ஏக நடை.....

என்ன அதிசயம். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி, கிழவனே வந்து கொண்டிருந்தான்.

கிழவனைக் கண்டதே அவன் புத்துணர்வுபெற்று, அவன் ஆவேகித்து நிற்கும் அந்தப் புதிய அனுபவத்தைப் பற்றிய சிந்தனை சிக்கலடித்தது.

"ஆ... தொரே வந்துட்டீங்களா?"

"எப்பவோ வந்துட்டேனே"

எங்கே போவது? என்றும் இவன் கேட்கவில்லை. கிழவன் முன்னே நடந்து இந்த மலை உச்சியைக் கிழித்துச் செல்கின்ற செங்குத்தான ஒற்றையடிப் பாதையால் இறங்கிக் கைகளால் திசை காட்டிக் காட்டிக் கூட்டிக்கொண்டு நடந்தான்.

துரையோ கிழவன் பின்னே தொடர்ந்துகொண்டிருந்தார்.

தெட்டந்தெறியானாக, சின்னஞ்சிறு குடில்களில் அடைந்திருந்த குஞ்சு குருமன்கள் துரையைக் கண்டதே தாங்களும் நூதனம் பார்க்க, குய்யோ முறையோவென்று கூச்சல்போட்டுக் கூட்டங்கூட்டமாக ஓடி வந்து இந்த இவன் முன்னே துரைக்கு முன்னே தூங்கணாங்குருவிகளைப்போல் நிற்கிற கோலத்தை அவன் அப்போது கவனிக்கவில்லை. இருளில் தெரியவுமில்லை.

ஏதோ சகிக்க முடியாத ஒருவித புதிய நாற்றம் மூக்கைத் துருவிச் சிணியடித்தது.

அந்தச் சிணி நாற்ற வாடை எங்கிருந்து புகைகிறது என்பதைக் காற்றுமுகத்தில் முகந்திருப்பி மூஞ்சூறுபோல் மூச்சிழுத்தான்.

சந்தேகமில்லை. அதே குழந்தைக் கணங்களின் மேனிகளிலிருந்து அடிக்கிற வெடுக்கான துர்நாற்றம்தான்.

கைலேஞ்சியை எடுத்து மூக்கில் அழுத்தி வைத்துக்கொண்டான். பூமியில் பரவுகிற சூரிய ஒளியை உள்ளங்கையால் மறைத்துவிடலாம் என்ற மேதாவித்தனம் போலும், தற்காலிகப் பாதுகாப்புக்காக ஒரு கவசமாக அந்தக் கிருத்தியத்தில் ஈடுபட்டபோதும், நாற்றம் செழுநீர் போல் பரந்துகொண்டிருப்பதை அவனால் தடுக்க முடியவில்லை. சேறும் செழுநீர் வழுப்பும் செறிந்தெழுந்த வெடில் ஒன்று நாசித்துவாரத்தை நைத்தது.

முன்பின் பழக்கமில்லாத இந்தக் குழந்தைகுட்டிகளுடன் எப்படிச் சமாளிப்பது என்றும் அவனுக்குப் புலனாகவில்லை. தன்னுடன் ஒருபோதும் முகப் பழக்கம் இல்லாத இவர்களும் தன்னோடு இதமாகப் பேசமாட்டார்கள் என்றும் தனக்குள் வியாக்கியானம் செய்துகொண்டு இரண்டுங்கெட்டான் நிலையிலே, யாரோ கொலுசு ஒலி எழுப்பக் கலகலத்துக் கனைத்துச் சிரிப்பது அவன் காதில் கிளிக் கீச்சலாகக் கேட்டது.

நத்தைமாதிரிக் கழுத்தை நீட்டிப் பார்த்தான்.

செத்தையோரமாக ஒரு பெண்ணானவள் சரிவுப் பார்வைக்குக் கிழவிபோலவும், நெற்றிமுட்டுப் பார்வைக்கு எடுப்பான குமரிபோலவும் தெரிந்த அவள் நெளிந்து வளைந்துகொண்டு கண்களை அவன்மீது எறிந்து திமிறிக் குலுங்கிச் சிரித்தவாறு நிற்கையிலே....

அந்தக் கிழவன் இவனுக்கு வழிகாட்டி அழைத்துக்கொண்டு வந்த அதே கிழவன் அவள் அருகேயே மருவியபடி அவள் தாவி நின்ற செத்தைப்படலையை மெல்ல நீக்கி இவனுடன் எதுவுமே பேசாமல் வாசலால் குனிந்து வெளியேறி நின்று சற்று நிமிர்ந்தான்.

நிமிர்ந்து பின்புத் தாழ்வாரப்பக்கம் நோக்கி நெற்றிப் புருவங்களை மேலே சுருக்கிக்கொண்டு. அடி அம்மே, என்ன பாத்துக்கொண்டிருக்கிறே... தொர வெளிய நின்னுக்கிட்டிருக்காரே. உள்ளே அழைச்சுக்கிட்டுப் போயேன் என்று சொல்கின்ற தோரணையில் அந்தப் பெண்ணானவளைப் பார்த்து அவள் மனைவியா, மகளா, பேத்தியா? என்று இவன் மதிக்கத்தக்கதான அந்த அவளப் பார்த்து ஒரு கைக்சைகை காட்டியதைத் துரையும் வெகு

நுட்பமாக அவதானித்தார்.

இந்த இவள் தனக்குள் எழுகின்ற இயல்பான நாண உணர்வுகளின் அஷ்டகோணங்களை எப்படியெல்லாம் நகர்த்தமுடியுமோ, அப்படியெல்லாம் லாவண்யமாக நர்த்தகித்து, வெட்கித்து நிற்கும் பாவனைபண்ணி, அதனை ஒருபாட்டம் அவனுக்குக் காண்பிக்கும் தோரணையில் மின்னி முழங்குவதற்குள்ளே தனது பதிவிரதத்தனங்களையெல்லாம் சிலாகித்து ஒப்புவித்துவிட்டபின், வழக்கமான சிரிப்பு, நகைப்பு, தழுக்கு, மினுக்கு, குழைவு என்றெல்லாம் உள்ள அலங்கார நடைப்பாவனை அபிநயங்களைப் பாக்கி இல்லாமல் காட்டி, ஒரு கியாதிபெற்ற சினிமா நட்ஷத்திரம் போல் கனிவாக அழைத்தாள்.

"சேர், வெளிய நின்னுக்காம உள்ளே வந்து ஒக்காருங்க"

இந்த வீரனான துரைக்கு என்னவோ போல் இருந்தது. அந்த என்னவோ இவன் மனசு விவரிக்கிறதாக இல்லை. நெஞ்சு படக் படக் என்று அவன் இன்ப நினைககளையும் மீறி அடிக்கின்றது. தேகம் ஊனி உப்புகிறதாக ஒரு சோக உணர்வு.

உள்ளே வாங்க என்ற அவளின் அந்தக் கனிவான மென்குரலில் எழுந்த காந்தம் அந்த மோகனமான அழைப்பு, அவளின் கம்பீரிய வனப்பைக் காட்டிலும் அவளிடம் ஏதோ ஒரு பச்சாதாபம், ஏக்கம், பரிதாபம், ஏழ்மைத்தனம் உறைந்து கிடப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

இந்த நினைவுகளோடு அவளைப் பார்க்க இவன் மனசுக்கு இவள் இதமாகவும் இதமற்றதாகவும் தெரிகிற ஓர் இடைநிலையிலேயே ஒரு தீர்மானத்திற்கு வருவதற்குள்ள நிலையிலே...

அவள் உள்ளே விறுக்கென்று சென்று பக்கத்தேயுள்ள மரக் கப்புக்கு அருகே கிடந்த ஓடிச்சலான பக்கூஸ் பெட்டியைத் தூக்கி ஆசாரமாக வைத்தாள்.

அதன் பின் சட்டென்று திரும்பிப் பக்கவாட்டுக் கொடியிலே கிடக்கிற ஒரு துணியைத் தேடி அகப்பட்டதை உன்னி இழுத்தபோது, ஏலவே சிலும்பலாய்க் கிடந்த ஒரு பழந்துவாய் அவள் கை பட்டதும் அவன் நேர் மூதாவில் சதி புரியத் திட்டமிட்டமாதிரிக் கீலம் கீலமாக கிழிந்தது.

நர்த்தகிபோல் திமிறினாள். அவள் முகம் வெட்கத்தில் உப்பி மேனி அடங்கப் புல்லரித்தது. தேம்பி அழுகிற பாவனையில் முகம் கூம்பிற்று.

தடுமாற்றத்தில் அவள் தேகம் சற்று வேளை அந்தரித்தது. என்றபோதும் இதை எல்லாம் காண்பிக்காமல் கொடியில் அடுத்த கரம் போட்டு ஒரு துணியை வலித்து இழுத்தாள்.

கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற நமது பெரியவர்கள் கூற்றுக்கொப்ப, கந்தையாய்ப் போய்க் கசங்கிய ஒரு பூநிறப் பாவாடைத் துண்டு அவள் கையில் தட்ட, இது பராவாயில்லை என்ற சமாளிப்புடன் அதையே அந்தப் பக்கூஸ் பெட்டிமேல் அழகாக விரித்தாள்.

அப்பாடா... ஒரு கருமம் முடிந்தது.

விரித்த பிறகு நெஞ்சு துன்ன நிமிர்ந்து கப்புக்குச் சாய்வாக நின்று ஒரு புதுமணப் பிரவேச கன்னிபோல் துரையைப் பார்த்துக் கெக்கலித்துக் குலுங்கிக் குலுங்கித் திமிறித் திமிறிச் சிரித்தாள்... கனைத்துக் கனைத்துச் சிரித்தாள்.

இப்படி அவள் சிரித்துக்கொண்டிருக்க இவன் கண்கள் அப்போது கிழவனைத் துழாவின. கிழவனின் சஞ்சாரத்தையே அங்கு காணவில்லை. எங்கே போனான், எந்தப் பக்கத்தால் போய்ப் பறிந்தான் என்றும் தெரியவில்லை.

மனசு கிலேசத்துள் மாண்டு அடித்துக்கொண்டது.

இந்த கிழவன் யாராக இருக்கும்... ஒரு வேளை பக்கத்துக் குடிசை டாப்பர் மாமா வோ?

அவனுக்கு, என்ன இழவு சனியனுக்கு வந்தேன்? என்றாகிவிட்டது.

பிச்சைவேண்டாம் நாயைப் பிடிச்சால் போதும் என்ற நிலை.

அவன் கண்கள் தறுதறுத்து முழிசினன்.

இப்படியெல்லாம் அவன் முகம் பிரமை கொள்வதை அவதானித்த அவள், அவனின் சங்கடமான நிலையை வள்ளீசாகப் புரிந்துகொண்டாள்.

"என்ன தொரே, எங்க அப்பாவைத் தேடுறாப்பல பாக்கிறீங்க.. அவரு ஒங்க முன்னாடியே அந்தவாக்கில அப்புடியே போயிட்டாரு... ஏன், அப்பாவைக் கூப்பிடவேணுங்களா?"

இவன் மண்டைப்பூணாரம் கமாரிட்டது.

அவள் துரையின் எந்தவொரு பதிலுக்கும் காத்திராமல் சும்மா ஒரு

ஒப்புதலுக்காகச் சத்தம் போட்டாள்.

"யே தங்கச்சி... தொரே வந்துட்டுப் போகட்டாமென்னு அப்பாவுக்கு ஒருவாட்டி குரல் வச்சிட்டு ஓடியா...."

தங்கச்சிக்காறிக்குக் கண்சிமிட்டி வெளியே சாமர்த்தியமாக அனுப்பியபின் அவள் இந்தத் துரையையே நேர்விழிகுத்திப் பச்சையாகப் பார்த்தாள்.

"ஆ... என்ன கொடுமை.. தான் பெற்ற பொண்ணுக்குத் தந்தையே டாப்பர் மாமாவா? ஐயோ....!"

மலை பெயர்ந்து விழுந்த பாறாங்கற்களின் இடியோசைகளாக அவன் நெஞ்சு இடிந்து அதிர்ந்தது.

ஒரு கணமேனும் கற்பனைபண்ணமுடியாத இந்தக் கோரத்தை அவன் கண்டபோது அவன் உடம்பு குறாவி ஊனித்தது. எனினும், இந்த மாமூல் பிரகாரத்துக்கு ஒரு தீர்வுகாண அவன் இங்கே இந்தப் பரீட்சையில் குதிக்க வில்லை. அவன் எதற்காக இந்த டாப்பர்மாமாவால் அழைத்து வழிக்காட்டிவரப்பட்டானோ அந்த அக்கினிக் கோளத்தின் ஒரு களம் கிழவன் மகளாக இவனுக்கு ஒரு பெண்ணாக வந்து நின்று அவன் முன்னே கண்சிமிட்டித் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுக்க ஆயத்தமாகித் துடித்துக் கொண்டிருக்கிற கோலத்தையும் அதற்காக அவள் செய்கின்ற பாசாங்குகளையும் பார்த்து வியந்தே போனான்.

"என்னதான் கோர வறுமை இருந்தாலும், தந்தையே உடன்படுகிற இந்த விஷயங்களெல்லாம் இப்போ உலகத்தில் நடக்கக் கூடிய காரியமா?"

தன்னுணர்வு இழந்து ஒரு மயக்க வெறிகொண்ட நிலையில் அமுங்கி எழுந்த கேள்விக் கணையில் அவன் மனசு கொளுவிக்கொண்டது.

இந்தப் புதினம் நிகழமுடியாத இந்தப் புதுமைகூட இந்த உலகத்தில்தான் நிகழ்கின்றது. அவன் கண்ணுக்கு எதிரே நிதர்சனமாகிக் கொண்டிருக்கிறது.

சகிக்கமுடியாத இந்தக் கொடுமைக்குக் காரணமான ஆதிபத்தியம் அனைத்தையும் துவம்சம் செய்து நிறுதுளியாக அழித்துவிட வேண்டும் என்று அவன் மனசு ஆவேகித்துத் துடித்தது.

"அது நாசமாய்ப் போக..."

அந்தக் கிழவனில் அவனுக்கு அருவருப்பான வெறுப்பு உண்டாயிற்று. அவன் மனக் கண்ணில் கிழவன் மன்னிக்க முடியாத வெறுக்கத்தக்க ஒரு குற்றவாளிபோல் தெரிந்தான்.

மனசு நெருடிற்று. நெஞ்சு உப்பி உடம்பு கூசிற்று.

"அடி பெண்ணே, அந்தத் தாத்தாவை நீ பாசாங்காக அழைக்க வேண்டாம். அவர் எனக்கு தேவையும் இல்லை" என்று சொல்ல அவன் மனம் துடித்தது. அடக்கிக்கொண்டான்.

இருந்தவாக்கில் அவள் ஏதோ சாட்டாக அழைத்து அவன் எதிரே நிறுத்திய அவளது பெரியதங்கச்சி அக்காள்காறியை சும்மா பார்த்தபடி, "நானு அப்பாவைக் கூட்டியாறேனே" என்று முனகிக்கொண்டு நின்ற ஒப்புதலைக் கேட்ட போதுதான் அவன் ஆகவும் வியந்தான்.

"இந்தத் தொழில் வாழையடி வாழையாகத்தான் நடக்கிறது...?"

"விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்ற கற்பனையை உருப்போட்டு ஜெபிக்கும் பக்தர்களே இந்தப் பேதைகளை விபசாரிகளாக்கிவிட்டுப் புனிதர்களாக வேஷமிடுகின்ற விறுத்தம் இவன் கண்களில் சித்திரமாக விரிந்தது. வேதம் ஓதும் இவர்களே வேசையாட ஆக்குவதும் தெரிந்தது. சாத்தான்கள் வேதம் ஓதும் கோலத்தை இவன் இங்கே இப்போ நேரில் தரசித்துக்கொண்டிருப்பதாக ஓர் உணர்வு தட்டிற்று.

அவன் நெஞ்சு நீவி ஒரு பெருமூச்செழுந்தது.

வந்த தங்கச்சி வெளியே செல்லவில்லை, இந்த அக்காள் அவளை அப்புறம் உசுப்பிவிடவுமில்லை.

"சேர், வேணுமின்னா சொல்லுங்க. அப்பாவை அழைச்சுக்கிறேன்.... இப்பவே இவ தங்கச்சிய அனுப்பட்டுங்களா...?"

"வேண்டாம்"

ஒருவாக்கில் இரண்டு கருத்தை அவள் கையாண்டாள் என்று அவனுக்குப் புரிந்தது. அவனுக்கு அப்படிப் புரிந்துவிட்டது என்பதை இவளும் தெரிந்து கொண்டபோது மனசில் ஒரு சபலம் தட்டிற்று.

"சரி, பரவாயில்லை" என்றான் சாட்டுக்கு.

அவள் கமண்டலம் கவிழ, களுக்கென்று குலுங்கிச் சிரித்தாள்.

இத்தனை நேரமாகக் கிழவனைத் துளாவிய துரையின் கண்கள், பிறகு அந்தத் தங்கச்சியை உற்றுப் பார்க்கத் தலைப்படுகிறதில் ஒரு ஆவேசத் துடிப்பைக் கவனித்த இந்த அக்காள் அவன் சிந்தனைக்கு ஒரு முய்த்தாப்பு வைத்தாள்.

"சேர், ஏன் வெளியே ஒக்காந்துகிட்டு உள்ளே பாக்கிறீங்க....? உள்ளே வந்து படுக்கையில இருந்து ஆசைதீரப் பாருங்களேன்"

ஒருவித தயக்கமுமின்றி அவள் பச்சையாகவே சொன்னாள். சொல்லிவிட்டுத் தாழ்ந்த குரலில் ஒரு புதுக்கதையை மிகக் கௌரவமாக எடுத்துச் சொன்னாள்.

"சேர், வெளியே இருக்கேக்க ஆரும் பாத்துட்டாங்கன்னா ஒங்களையும் என்னையும் பத்தி ஏதும் வெத்தியாசமா நெனைப்பாங்க... ஆனபடியா எழும்பி உள்ளே வாங்க.."

அவன் மனசுகள் கேலியாகச் சிரித்துக்கொண்டான்.

"நல்ல கைதேர்ந்த சாகசக்காரி. இதை இவள் எங்கே இவ்வளவு நுணுக்கமாகக் கற்றுக்கொண்டாள். யாரும் வித்தியாசமாக நினைக்கிறதில் இவளுக்கு பயமோ கூச்சமோ உண்டா...?"

அவளைப் பார்க்க அவனுக்கு ஐயோ பாவம் என்றிருந்தது.

தனது வார்த்தையின் அர்த்தமும் அதன் தொனிக்குள் ஒளித்துள்ள விஷயமும் அவனை உத்வேகப்படுத்தும் என்று அவள் நினைத்தாள். அந்த நினைவோடு சற்றுநேரம் கப்புடன் சாய்ந்து நின்றாள்.

ஒன்றும் பலிதமாகவில்லை. அவள் கிருத்தியங்களால் அவன் பற்களை நன்னிக் கடித்துச் சிரித்தான்.

"அம்பலத்தில் ஆடியாச்சு. முற்றத்தில் ஆடுவதற்குதான் இவளுக்குப் புதிசா ஒரு வெட்கம் வந்திருக்கு...?"

அவனுக்கு சிரிப்பாக வந்தது.

"யாரும் பாத்தா ஏதும் வெத்தியாசமா நினைப்பாங்க என்று என்ன அலங்காரமாகச் சொல்கிறாள். தர்மபத்தினிகளின் வார்த்தைகளை இங்கே அசல் பரத்தைகள் கடன் வாங்கிக்கொண்டார்கள்."

அவன் தனக்குள் சொல்லி மீண்டும் சிரித்துக்கொண்டே அவளை ஓரக்கண்களால் பார்த்தான்.

"அவளின் சாங்கோபங்கமான கூச்சத்தின் வெளிப்பாடு, அவளுள் திமிறி அடங்கும் ஆசைச் சாயல் என்பன ஒரு கண்ணியமுள்ள மங்கைக்கு இயற்கையாவிருப்பதுபோல் இந்த இவளிடமிருந்து எப்படி வெளிப்படுகின்றன...? நெருப்புக் கோளத்தில் உழல்பவளுக்கு அதன் ஜ வாலையும் காங்கையும் வீசாமல் இருக்குமா?"

மன இழை அறுபடுகிற சாடை அவள் குரல் மறுபடியும் கனிவோடு கேட்டது.

"சேர், எழுந்திரிச்சு உள்ளே வாங்களேன்"

சற்றுமுன் உமிந்துபோயிருந்த துரையின் தேகம் காற்றாடிபோல் லேசாக சர்ரென்று அசைந்தாடி உள்ளே சென்று, அவள் ஆசனம் என்று எடுத்து வைத்த பக்கூஸ் பெட்டியில் வலு பக்குவமாகக் குந்திக்கொண்டது.

ஐயோ பாவம், ஒலகம் அறியாத பச்சக் கொழந்தமாதிரி

உலகம் விழுங்கியான இவள் தனக்குள் அனுமானித்துக் கொண்டே பக்கத்துச் செத்தைப் பாடத்திலிருநது "அவுக் " கென்று ஒரு கவடு பாய்ந்து முற்றத்துக்குக் குடு குடுவென்று ஓடினாள்.

துரைக்கு நெஞ்சு படபடவென்று அடித்தது.

சொற்ப நேரம் மௌனவிரதம்.

மறுபடியும் புதிய வெடில் நாறல் நாற்றம் துரையின் நாசித் துவாரங்களில் மொய்த்த போது அவர்பாடு பெருஞ்சங்கடமாய்ப் போயிற்று. வயிறு குமட்டுவதுபோல் ஒரு கொந்தளிப்பு.

இந்த நரக வேதனை எதற்கு? எழுந்து போவதா விடுவதா?

மனசு கணை தொடுத்து அடித்துக்கொண்டது

அந்த வேளையாகப் பார்த்துத் திடீரென்று அருண்டு எழுந்த குழந்தை ஒன்று குடிசை அதிருமாப்போல் அம்மே என்று அலறி வீரிட்டுக் கத்தவே, துரைக்கு ஆகவும் நடுக்கம் எடுத்தது. தேகம் அடங்க ஓரே திடுக்காட்டம்.

நிலைவரம் சரியில்லை.

என்றாலும் இவன் கங்கணங்கட்டியபடி இந்த அக்கினிப் பரீட்சை அதிலே தான் அடையும் வெற்றிவாகை இவற்றையெல்லாம்

யோசித்தபடியால் தாக்கற இருந்துகொண்டான்.

அச்சமயம் சொல்லிவைத்தமாதிரி எங்கிருந்தோ ஆணும் பெண்ணுமாகப்படையெடுத்து வந்த மூன்று சின்னஞ்சிறுசுகள், தங்களுக்கு ஒருபோதும் பழக்கமோ பாத்தியதையோ இல்லாத இந்த அந்நிய மனிதனான வீரன் முன்னே இந்தத் துரைக்கு எதிரே தங்கள் பிறந்த மேனிகளான கோலங்களைப் பற்றிய அசூசை கூச்சம் அச்சம் கொஞ்சங்கூடவின்றி வெகு சாதாரணமாக நின்று விடுப்புப் பார்த்தனர்.

மூத்த பெண் கலகலத்துச் சிரிக்க, அருகில் நின்ற இரண்டு பையன்களும் சிணுங்கிக்கொண்டு அந்நியரான இந்தத் துரைக்குத் தங்களைக் காண்பித்தபடி, ஏதோ ஒரு விந்தையான காட்சியைக் காண்கின்ற பாவனையில் முகங்களிலே ஆவல் தேங்க, இந்த வெள்ளைத் துரையையே கண்ணூனிப் பார்த்தார்கள்.

சின்னப் பையன் மேலுதட்டில் வழிந்த மூக்குச்சளியை வலது புறங்கையால் ஒருபாட்டம் தடவித் தனது தொடையில் அப்பித் துடைக்கவே, பையனின் பக்கத்தில் நின்ற சிறுமி அக்காக்காறிக்கு அருவருப்பு உண்டாயிற்று.

உடனே அவள் துரையை ஒருவித குற்றமுகபாவ உணர்வோடு நொய்து தம்பிப் பயலை அதட்டி, டேமூதி, மூக்குச் சளியத் தொடையில பூசிக்கிட்டியே...? ஏன்டா, செத்தையில துடயேண்டா கழுதே என்று ஒரு பெரிய பாட்டியாட்டம் புத்தி சொல்லிவிட்டு அவளே அந்த வழு சளியை துடைத்துத் தன் காற் பாதத்தில் தேய்த்த பின் துரையைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

மூலையில் குப்பிவிளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது.

அவர்கள் முகங்களில் அப்பிக்கிடந்த ஊற்றைப் படலம் திட்டுத்திட்டாக உறைந்துவிட்டதை அப்போது அவன் கவனம் ஈர்த்தது. சிலும்பலடித்துப் பறட்டையாய்ப்போன அவர்களின் தலைகளில் பிடித்த ஊற்றைப் பிசாண்களிலிருந்தே புதிதாக நெருடி நாறுகின்ற வெடில் அடிக்கிறதென்பதை அவன் அனுமானிக்கவே குடல் ஒருபாட்டம் புரண்டு வயிறு குமுக்கென்று குமட்டியது. ஓங்காளம் வருவதுபோல் தொண்டைக்குள் ஒரு வித அமுக்கம்.

கைலேஞ்சியை எடுத்து விரித்து முகத்தைத் தடவி மூக்கை

அடைத்துப் பிடித்துக்கொண்டான்.

என்ன நினைப்போ தெரியவில்லை. சர்வ நிர்வாணமாகத் துரைக்கு முன்னே நின்ற அந்தப் பெண் குட்டி சடாரென்று பக்கத்தே தாவிப் போய் தாயானவள் ஏலவே வெளியே இழுத்துப் போட்ட கிழிசல் துவாயை எடுத்துத் தனது உரிஞ்சாண அரையை மறைத்துக் கட்டிக்கொண்டு ஒரு புதுமணப் பெண்மணிபோல் நாணிக் கோணிக்கொண்டு மறுபடியும் அவன் முன்னே வந்து நின்று சிரித்தாள்.

மூன்று குழந்தைகளையும் அருவருப்போடும் இரக்க சிந்தனையோடும் மனங்குழைந்து இவன் பார்த்தான். ஆகச் சின்னது மெல்லத் தவழ்ந்து போய் அவனின் துரையின் காற்சட்டையை அப்பிப் பிடித்து எழுந்து நின்று முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கேவிச் சிரித்தது.

"சீ சனியன்" என்று அந்த தவ்வலைப் பிறங்கையால் தள்ளிவிட அவன் மனம் ஆக்ரோஷமாக உந்தியபோதும், அவன் அந்தக் குழந்தையை கைகொடுத்துத் தூக்கவோ, பிடித்து தள்ளிவிடவோ, போ சனியனே என்று விரட்டிவிடவோ அல்லது அணைத்தெடுக்கவோ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

மிகச் சாதுரியமாக இதைக் கவனித்த மூத்த பெண்குட்டி அந்தக் குட்டித் தம்பியை பிடித்துச் சற்றுப் பின்னுக்கிழுத்து வைத்துக்கொண்டு அதன் பாஷையைப் புதிய பரிமாணத்தில் மொழிபெயர்த்தாள்.

"சேர், எங்க தம்பி ஒங்ககிட்ட என்னமோ கேக்குது?"

உண்மையாகவே இந்தச் சேர் என்னும் வீரத்துரையின் அடிவயிறு அப்போது பற்றி எரிந்தது.

வாயில் போட்டுச் சுவைக்கிற பண்டங்களில் ஒன்றுகூட தான் கையில் எடுத்து வரவில்லையே என்ற ஆதங்கம்.

ஓ.... நான் இந்தக் குழந்தைக்காகவா இவர்களை இந்தக் கோலத்தில் பார்க்கவா வந்தேன்?

ஒரு கணம் தன் மனச் சுமையை இறக்கிச் சமாளித்துக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டு நிமிர்ந்தான்.

குழந்தைகள் அனைவரும் ஏதோ ஒரு நம்பிக்கையோடு அணிலை ஏறவிட்ட நாய்க்குட்டிபோல் துரையின் முகத்தையே ஒருவித தவிப்போடு

ஏக்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

என்னிடம் ஒன்றும் இல்லை, என்று கைவிரிக்க அவன் மனசு ஏவுதில்லை.

மெதுவாக சேட் பொக்கற்றுக்குள் விரல்களால் கோதி எடுத்த ஒரு நோட்டை விரித்துப் பார்த்தான்.

ஐந்து ரூபாய்த் தாள்.

அதைக் கண்ட சிறுவர்கள் பெண்குட்டி உட்படத் தங்களது சூப்பிணிக் கரங்களைக் கோர்த்துக்கொண்டு கண்களை அகலதிறந்து சிமிட்டிச் சிமிட்டிச் சிரித்தார்கள்.

கண நேரத்துள் அந்தத் தவ்வல் குழந்தையின் கைக்குள்ளே நோட்டைச் சுருட்டித் திணித்துவிட்டு துரையானவர் முகம் மலரச் சிரித்தார். சிரித்துவிட்டு நிமிர்ந்தபோது அக்குழந்தையின் இந்த தாயானவள் இங்கிதமாக இந்த துரையை வரவேற்ற அந்தப் பெண்ணானவளின் குரல் மறுபடியும் கணீரித்துக் கேட்டது.

"சேர், தேத்தண்ணி குடியுங்கோ"

ஓ.....

அவன் கொஞ்சம் கூடத் தயக்கமோ கிலேசமோ அசூசையோ கொள்ளாமல், அவள் கொடுத்த தேநீர் கிளாசைக் கையில் ஏந்தி வைத்துக்கொண்டு, அவளை ஒரு புன்னகை ததும்ப ஞானிகளின் சம்பூர்ண விஸ்தாரப் பாணியில் கனன்று பார்த்தான்.

அவளும் அந்தர கோலத்தில் துரைக்கு எதிரே திகைத்துப்போய் திமிறிச் சிரித்தபடி நின்றாள்.

வெளியே மின்மினிப் பூச்சிகளின் ஒளிக் குமிழ்கள் தெட்டந் தெறியனாக மின்னின.

## 6

பெரும் எடுபிடியோடு சம்சாரிக்க அந்தரப்பட்டு வந்த இவன் இந்தத் துரை தனக்கு முன்பின் பழக்கமில்லாத ஓர் அந்நியப் பெண்ணான தன்னோடு நீண்டகால உறவு பூண்டவன் போல் சிரித்தபோது, அந்தச் சிரிப்பில் ஏதோ ஒரு விஷமம் இருப்பதாகவே அவள் யூகித்தாள். ஆனால், தன்னை அது ஆகர்ஷிக்காத தோரணையில் நடித்து அவன் எதை

எதிர்பார்த்து வந்தானோ அதற்காக அந்த விஷயத்தை நினைவுகூரும்படியாக அவனுக்கு ஓர் ஆவலைத் தூண்டும் பொருட்டுத் தன்னுள் ஒரு புதுக்கோலங்கொண்டு, அவன் எதிரே ஒரு கட்டிய புருஷனைப் பார்க்கிறசாடை கூச்சமற்ற கனிவோடு பூ விரித்த இதழாகச் சிரித்து நின்றாள்.

துரையோ அப்பவும் அதே திகைப்பில் இதயமும் மனமும் நைந்து கலங்கிப் போயிருப்பதைக் கவனித்த இவள், குழந்தைக்குத் தாயான ஒருத்தியைப் பூரணமாகச் சம்பவிக்க எந்தவோர் ஆடவன் மனசும் ஒரேவாக்கில் ஏவாது என்ற உடற்கூற்றின் அடியாகவும் உளவியல்ரீதியாகவும் இறங்கியபோது, திடீரென்று ஒரு சுளுவான யோசனை அவளுக்கு உதித்தது.

அதை அவள் சம்பிரதாயத்துக்கேனும் ஓஞ்சிக்காமல் உரித்த மேனியாகவே சொன்னாள்.

"சேர், நீங்க சல்லியப்பத்தி யோசிக்கிறீர்களாக்கும். அதெல்லாம் அப்பிடியொண்ணும் பெரிய தொகையில்லே... அஞ்சு ஆறு ரூவாக் குடுத்தாப் போதும்"

பச்சை உண்மைகள் அசிங்கமாக வெளிவந்தாலும் அவற்றைத் தெளிவுபடுத்தும் நெஞ்சு பரிசுத்தமானது என்பது அவன் வாகடம். ஆதலால் அவளின் அந்தப் பச்சையான வெளிப்பாட்டில் அவன் அருசைப்பட்டதாகத் தெரியவில்லை. அவதிப்படுகிறவனாகவும் தென்படவில்லை.

அவள் கூறிய வார்த்தைக்கு அந்த விஷயத்தை எடுத்துக் கூறிய துணிச்சலான நேர்மைக்கு அவன் அப்படி அர்த்தம் கொண்டானேயன்றி, அவள் கேட்டதற்கு ஒப்பவோ மறுக்கவோ வெறுக்கவோ முடியாமல் மௌனமாகவே இருந்தான்.

துரையின் மௌனம் சற்றுவேளை அவளின் மனசைச் சிப்பிலியாட்டிற்று.

அப்போது திடீரெனக் கீச்சிட்ட குழந்தையின் கேரும் குரல் அவளின் அந்தரித்த சூழலைக் குழப்பிவிட்டது. இருந்தும், அவள், அதனைக் காண்பியாமல் திரும்பிச் சென்று குழந்தையை வெளியே தூக்கிவரும்போது சொன்னாள்.

'தொரே, சத்தைக்குப் பொறுங்கோ. இதோ குழந்தயத் தங்கச்சிக் கிட்டக் குடுத்துட்டு வந்துடறேன்"

தங்கிச்சியை அழுத்திச் சொன்ன விறுத்தம் துரைக்குக் கிலேசத்தை

ஊட்டிற்று.

யோசனையில் ஆழ்ந்துபோன துரை அப்பவும் அசையாமல் ஊமையாகவே இருந்தார்.

நாழிகை ஆயிற்று.

குழந்தை வேறு கைக்கு மாறிப்போன திசையை இவன் கவனிக்கவே இல்லை. ஆனால், அது வீரிட்டுக் கத்திய குரல் மட்டும் கீச்சிட்டுக்கொண்டேயிருந்தது.

பரபரப்போடு திரும்பி வந்தாள். வந்தவள் துரைக்கு எதிரே நின்று கைகளால் நெஞ்சை அமர்த்தித் திமிறிச் சிரித்துக்கொண்டு ஒருவித நாணிப்போடு பார்த்தாள்.

"தொர இம்புட்டு நேரமா ஏன் ஒண்ணுமே பேசாம இருக்கிறீங்கன்னு இப்பதான் புரிஞ்சுகிட்டேன். வாஸ்தவந்தான்... புள்ளயளப் பெத்தவள்கிட்ட ஆம்படையான் அனுபவிக்கிறதைக் காட்டிலும் இளம்பொண்ணுகூட அனுபவிச்சுண்டாத்தான் சம்சாரிக்கிறது பூரணமாகும்... என்னயப் பிடியாட்டிச் சொல்லுங்க.. தங்கச்சியக் கூட்டியாந்துவுடறேன்... ஒங்களுக்கு இதமாப் பதமா இருப்பா. ஆனா, ஒண்ணு, இலங்குமருப் பொண்ணென்னா ஒரு பத்துப்பதினைஞ்சு ரூவா அதிகமாக் குடுக்கணும். சம்மதமான்னு சொல்லுங்க?" என்று கேட்டு எங்கோ சைகை காட்டிவிட்டு, அவன் முகங்குத்திப் பார்த்தபின் "துரைக்கு இளஞ் ஸைஸ தான் பொருத்தமாயிருக்கும்னு தோணிச்சு. அதனால அடுத்தவூடு போகாம என் தங்கச்சியயே ஒப்பேத்திடறேன்" என்று ஏதோ மாமூல் பிரகாரம் போல் சொல்லிக் கொண்டிருக்கவே, அந்தத் தங்கச்சிக்காறி இந்த அக்காளுக்குப் பின்னே வந்து மருவி நின்று களுக் கென்று சிரித்த ஒலி, அவன் காதில் இனிமையாகக் கேட்டது.

இந்த இருட்டினில் அந்தத் தங்கச்சியை விழி கண்குத்திப் பார்த்த இவன் அப்பவும் எதுவும் பேசாமல் இருந்தான்.

அவள் இவன் எதிரே குழைந்துகொண்டு நின்றாள்.

"அக்கா எல்லாம் சொல்லிச்சுது. பாவமாக் கெடக்கென்னு வந்தேன்... என்னா தொரே, சௌக்கியம் தானுங்களே?" என்று அந்த இளந்தங்கச்சி இந்த அக்காளைக் காட்டிலும் சரஸமாக, இதமாகப் பேசுவதை அவதானித்தபோது அவன் அசந்தே போனான்.

இந்தாள் என்ன மரக்கட்டையோ....?

ஒரு நொடிக்குள் வந்த தங்கச்சி எங்கே மறைந்தாள் என்று தெரியவில்லை.

மறுபாட்டம் குனிந்து உள்ளே வந்த அக்காள்க்காறி செத்தைப் படலைத் தூக்கிச் சாத்திவிட்டு கொப்பளித்துப் போன கண்களால் துரையை ஊனித்துப் பார்த்தாள்.

மனசில் வெக்காளம் கெம்பிற்று.

நெஞ்சு விம்ம அவர் எதிரே நின்று கைகளிரண்டையும் உயர்த்தி ஒரு தடவை தன் தலையைக் கோதினாள். கோதிவிட்டு ஒரு ஓரமாக நின்று கால்களால் நிலத்தை உராய்ந்து பக்கவாட்டுகளை ஒருபாட்டம் துப்பரவாக்கிவிட்டு, ஆரணங்குபோல் மெல்ல நகர்ந்து அவன் பக்கத்தில் போய் நின்று சிரித்தாள்.

கண்களில் கலக்கம்.

"என்ன சேர், சரிதானுங்களே?"

இப்படிக்கேட்ட அதே வாயால் அந்தக் குப்பிவிளக்கைப் பூவென்று ஊதி அணைத்தாள்.

குடிசை பக்கென்று இருளில் மண்டியது

தடவினாள்.

தேகம் ஊனிற்று.

ஆள் அரவத்தையே காணவில்லை.

திகைத்துப் போனாள்.

நெஞ்சு இடியுண்டு குமுறிற்று. உற்றுப் பார்த்தாள்.

"துரை"யை - அவனைக் காணவில்லை.

அவள் நெஞ்சு துருத்தியது. அழுகை வரும்போல் கண்கள் பம்மித்தன.

"வெட்கங்கெட்ட தொழில், மானங்கெட்ட சீவியம்."

யாரையோ கொல்லவேண்டும் போல் குமுறி அழவேண்டும்போல் ஓர் அந்தரிப்பு, ஆவேசம்...

கண்களுள் நீர் துளும்பிற்று.

அந்த இருளினுள்ளே அவள் தேடலுக்கும் அகப்படாமல் மின்னலாக அவன் எங்கே மறைந்தான்?

நினைக்கவே அவள் நெஞ்சில் பறை கொட்டியது.

துரித கதியில் குப்பி விளக்கைத் தேடி எடுத்துக் கொளுத்திவிட்டு, அங்கலாய்த்தவண்ணம் அவனைத் தேடலானாள்.

அவள் கண்களில் பிரமிப்பும் ஏக்கமுமே எஞ்சி நின்றன.

ஐயோ என்று மறுபடியும் வாய்விட்டு நெஞ்சு கமறக் குமுறவேண்டும்போல் மனம் துருத்திற்று.

எதிர்பாராமல் கொலைசெய்தவள் போல் தத்தளித்த அவள் குப்பிவிளக்கைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு மூலைமுடுக்கெல்லாம் தேடியபடி, ஒரு சின்னஞ்சிறு குழந்தைபோல் சிணுங்கிச் சிணுங்கி நெஞ்சும் உடலும் பதகளித்துக்கொண்டிருக்க, ஓர் ஆடவனின் புதிய கம்பீரக் குரல் மணி இலையான்போல் கணீரிட்டது.

"அன்பான சகோதரி, இருட்டில் என்னைத் தேடவேண்டாம். நான் செல்லவில்லை. வெளியில்தான் இருக்கிறேன்."

"எடியெங்கம்மாடியோ!"

தொண்டை கேரக் கரகரத்தாள்.

பயந் தெளிந்த உசாரில் அவளுக்கு உடல் சிலிர்க்க, தானாக ஒரு சிரிப்பு வெடித்தது. மனசு என்னமோவெல்லாம் கற்பனைபண்ணிற்று. கருமங்கள் எதிர்பாராமலும் வியப்பாகவும் இருப்பதால் அவள் தடுமாற்றத்துடன் ஏந்திப்பிடித்த குப்பிவிளக்கை அணைக்காமல் துரையில் முகத்துக்கு எதிரே பிடித்தாள்.

"ஆ..."

வெடித்துச்சிதறிய தக்காளிப் பழம்போல் "துரையின் கண்களில் நுவைந்த கண்ணீர் இரு கன்னங்களிலும் குதம்பிப் பளபளத்தது.

"அய்யோ சேர், நான் என்ன தப்புச் செஞ்சேன், இதென்னாங்க ஒங்க கோலம்?"

அவள் தலைவிரிகோலமாக நின்று பரதவித்துப் போட்ட கூச்சல் பூகம்பித்த அவன் நெஞ்சில் இடித்தபோது அவன் சிறுகுழந்தைபோல்

மிரண்டான்.

"சகோதரி, உனது மனந்திறந்து இதயத்தால் உண்மை சொல்லு. நீ எப்போதாவது இப்படியெல்லாம் உன் மனசு விரும்பித்தான் நடக்கிறாயா?"

அவள் நினைவு தெரிய இற்றைவரை இப்படி ஓர் ஆடவன் மனசுகள் ஊடுருவிக் கேட்டது கிடையாது. யார் யாரோ வந்தபாட்டுக்கு இருந்துவிட்டுப் போய்விடுகிறார்கள். இந்த இவன் மட்டும்...?

ஒருவேளை இந்தத் துரை புத்திசுவாதீனக்காரரோ?

அப்படியாகவும் தெரியவில்லை

அன்பான சகோதரி என்று வேறு அழைத்திருக்கிறான்.

பகிரங்கமாகவே தாசியாட்டமாடிய தன்னை ஓரே அந்நிய மனிதன் இன்றுவரை இப்படிப் பாசத்தோடு அதுவும் சகோதரி என்று அழைத்ததில்லை.

அப்படிப்பட்ட அவனுக்கு இந்தத் துரைக்கு எதையும் மறைக்க அவள் விரும்பாமல் ஆதங்கத்தோடு நின்று தவித்தாள்.

அப்படி நெற்றிக்கு நேரே நேரிடையாகக் கேட்ட அவன், அவள் முகத்தையே ஏறெடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் துணிவுகொண்டபோதும் தயக்கமாகவே ஆம் என்று ஒப்புவிக்கும் பாவனையில் ஒரு குற்றவாளிபோல் தலையாட்டினாள்.

ஆனால், இந்த ஒப்புதல் தன் மனசாட்சிக்கு விரோதமாக இருப்பினும், தான் எடுத்தவாக்கில் அவமானப்படக்கூடாதென்பதால் சிறிது பாசாங்குபண்ணினாள். என்றபோதும், அந்தப் பாசாங்கில் அவளிடம் ஒரு பரத்தைத்தனமோ, அசூசையோ, ஆபாசமோகூட இருப்பதாக அவனுக்குப்படவுமில்லை.

"இப்பேர்ப்பட்ட பரிசுத்தமான அவள் இதயத்தில் இந்த ஒழுக்கக் கேடும் அசிங்கமான நடத்தையும் எப்படித் தலையெடுத்தன இவளை இந்த விபசார வாழ்க்கைக்கு ஆட்கொண்டதற்கான தீய சக்தி இவளையும் மீறி எங்கிருந்து உதித்தது" என்கிற விசாரத்தில் அவன் மூழ்கினான்.

"வாழ்க்கையில் ஒடிந்துபோய் மரத்துப்போய்விட்ட இந்த ஏழைப்பெண்ணான இவள் தன்னுடன் பழகிய சொற்ப நேரத்தில் எந்த மறைப்போ ஒளிப்போ இல்லாமல் எப்படியெல்லாம் உண்மைகளை வெளிப்படுத்தினாள்? தன்னை எந்தக் கட்டத்திலாவது பத்தினியென்றோ

ஒழுக்கசீலியென்றோ பாவனை காட்டாமலே, அப்படியெல்லாம் சத்தியநெறியாக உண்மைகளையே வெளிப்படுத்திய இந்த இவள், தன் மனம் கொஞ்சமும் வருந்தக்கூடாதென்ற மானிட உணர்வோடு அந்த ஒப்புதலைக் கூட எவ்வளவு நாசூக்காக வெளியிட்டாள்" என்பதை இவன் யோசிக்கையில் இவளில் அவனுக்குண்டான இரக்க பாசம் அப்போது மடைதிறந்தமாதிரிக் குமுறிற்று.

உண்மை எப்போதும் அழகானது. இனிமையானது என்பதற்கு இவள் இலக்கணமாகத் திகழ்வதை இவன் தரிசித்த போது இவள் ஒரு பரிசுத்தகன்னியாகவே அவனுக்குத் தோன்றினாள்.

உண்மை கசப்பல்ல. உண்மைமய மறைப்பவனுக்குத் தான் உண்மை கசப்பாகிறது என்ற உண்மைக்காயாக விளங்கிய இவள், நொந்துபோன அதலபாதாள வாழ்க்கையை இந்த நரகத்து வாழ்க்கையை அன்றாடம் சலிக்காமல் அனுபவித்துக் கொண்டே அப்பட்டமாக உண்மை சொன்னாளே, இந்த இவளை இவன் விட்டகல மனமில்லாமல் இருந்தவாறே தன்னுள் புழுங்கினான்.

அப்படித் தெரிந்தும் பரீட்சார்த்தமாகக் கேட்கிறான்.... "நீ உன் மனச் சாட்சிக்கு விரோதமாகவே இப்படியெல்லாம் மனசு ஒத்தே நடக்கிறேன் என்று படு பொய் சொல்கிறாய். நான் நம்பமாட்டேன்."

அவளை இரக்கம் தோய உற்றுப் பார்த்தான்.

அவள் திகைத்துப்போய் நின்றாள்.

"நீ எதை ஒழுக்கக்கேடு வெட்கங்கெட்டது என்று கருதுகிறாயோ அதை வெளியே மனந்திறந்து சொல்லக்கூச்சப் படும்போது மறைக்கும்போதுதான் அந்த ஒழுக்கக்கேட்டுக்குக் காத்திரமும் அர்த்தமும் உண்டாகிறது. அதையே கூச்சப்படாமல் உள்ளதை உள்ளவாறு சொன்னால், அது எத்தகைய அசிங்கமாக இருந்தாலும் அதுவே ஓர் எச்சரிக்கையாக ஒரு நல்ல வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைகிறது. ஒழுக்கக்கேட்டை அதன் விளைவுகளை மறைப்பதுதான் மிகப் பெரிய ஒழுக்கக்கேடு, அது அந்த ஒழுக்கக்கேட்டுக்கே துணையாகி விடும். உண்மையில் ஒழுக்கங்கெட்டவள் குற்றவாளியல்ல, ஒழுக்கக்கேடாக்கினவன் எவனோ அவன்தான் குற்றவாளி. ஆனபடியால் உன் நெஞ்சு திறந்து மனங்கூசாமல் சொல்லு நீ எப்போதாவது உன் பூரண மன இசைவோடுதான் இப்படி

நடந்துகொள்கிறாயா?"

இவன் எழுப்புகிற கேள்விக் கணையின் நெருடல் தாங்காமல் அதன் அர்த்தத்தைப் புரிந்து அதற்குப் பச்சையாகப் பதில் சொல்கிற துணிச்சலைக் காட்டிலும், இப்படிப்பட்ட ஒரு வினோதமான மனிதாத்துமாவிலே அவளுக்கு ஒரு பாச உணர்வு தட்டிற்று. தனது ஆத்மாவைக் கொலைசெய்த நரக வேதனைகளை உள்ளடக்கி அவன் எழுப்புகின்ற ஒவ்வொரு வாக்கியத்திலும் அவள் சொக்கியபோது, வீரனான இவன் இந்தத் துரை அவளின் அன்பான ஒரு தந்தையாக பாசமுள்ள தன் உடன்பிறப்பாய் ஒரு சகோதரன்போல் இதற்கெல்லாம் அப்பாற்பட்ட மனிதப் பண்பான ஒரு தோழனாக அவள் இதயத்தில் சூல்கொண்டு பரிணமித்தான்.

அவள் மேனி அப்போது பஞ்சு தடவியதுபோல் புல்லரித்துக் கூசிற்று.

கொஞ்ச நேரத்துக்குமுன் அவனுக்காகத் தான் செய்த அலங்காரங்கள் அபிநயங்கள் வார்த்தைகள் யாவும் வெறும் பாசாங்கான்வை என்று தெரிந்துகொள்ளக் கூடிய அந்தத் துரையை ஏனைய அவன் சக வீரர்களைப் போல் கணித்துக் கொண்டு, தான் புரிந்த சாதுரியங்களையும் சாகசங்களையும் நடத்திய சிருங்கார நாடகங்களையும் நினைத்த மாத்திரத்தில், வெட்க உணர்விலும் பார்க்க அவளுக்கு அழுகைதான் பீறிட்டது.

இவ்வாறாக மாய்ந்து குமுறிக்கொண்டிருந்த அவள், துரை என்ன கேட்டார் என்ற நினைவே அற்றவளாய், சற்று வேளை அக்கூற்றுக்களை நினைவுபடுத்தித் தன்னுள் தவண்டையடித்தாள்.

அவன் கூறிய வாக்கியங்களில் உள்ள அர்த்தங்களைக் காட்டிலும், கடைசியாக அவன் விடுத்துக் கேட்ட அந்த ஒரு கேள்விதான் அந்த ஒரேயொரு கணைதான் அவள் நெஞ்சை ஊடுருவி அறுத்துப் பூதாகரித்து.

நீ எப்போதாவது உன் பூரண மன இசைவோடுதான் இப்படி நடந்துகொள்கிறாயா?

இதற்கு மேல் அவளால் தாங்க முடியவில்லை.

"ஆ... பெண்ணைப் புரிந்த புனிதனே... சத்தியமாய் சொல்றேன்... நான் ஒருபோதும் அப்படியில்லை... என் விருப்பத்துக்கு மாறாகத்தான்

நடக்கிறேன்"

அவள் மனம் அழுந்திச்சொன்ன ஒப்புதல் அவளை மீறி அழுகையாக நெஞ்சிலே பீறிட்டுக் குதறியபோது இவன் அவளை வெகு பரிதாபத்தோடு பார்த்தான்.

உண்மையைக் கூறிப் புனிதவதியான பின்னும் நீ ஏன் அழ வேண்டும்? என்று கேட்பதுபோல் இருந்தது அவன் பார்வை.

முழு இதயசுத்தியோடு அந்த அசிங்கமான விஷயத்தை அவள் அவனுக்களித்த ஒப்புதலால் தனது பாவ கிருத்தியங்கள் தன்னைவிட்டு நீங்கியதாக அவளுக்குத் தோன்றியதும் அவள் மனம் சற்று ஆறுதலடைந்தது. என்றாலும், இந்த நரக வாழ்க்கையை அதே நடத்தையில் இத்தனை காலமாக மாமூலாக்கிச் சீவித்த தன்னையும், இதுவரை அதற்காகவே தன்னை நாடி வந்து போன இன்பப் போகிகளையும் எதிர்த்துச் சமாளிப்பது அவளில் ஓர் ஆக்ரோஷமும் மன ஓர்மமும் நெஞ்சுறுதியும் வெறுப்பும் தலைவிரித்தன.

இதயத்தில் மனசில் சிந்தனையில் ஒரே திகைப்பு.

இனி இந்த அவல வாழ்க்கையை எப்படி எதிர்கொள்வது?

இப்படி யோசிக்கவே மனசில் ஒரு அந்தகாரம் சூழந்தது.

இப்போது தான் ஒரு பரதேசிபோல் நாதியற்றுப்போனதாக ஓர் உணர்வு தட்டவே, அவள் கண்களில் இருந்து கண்ணீர் பொலுபொலுத்துத் தெறித்தது.

அவன் விறைத்துப்போய் ஆதங்கத்தோடு உற்றுப் பார்த்தான்.

"சகோதரி, இனி ஏன் அழுகிறாய்? நீ அழவேண்டிய காலத்தில் சிரித்தாய், சிரிக்கவேண்டிய நேரத்தில் அழுகிறாய்..."

இந்த வாக்கியம் அவள் மனசைச் சற்றுத் தேற்றிற்று. உற்சாகமடைந்தவளாகத் தெரிந்தபோது அவன் மேலும் சொல்கிறான்.

"இப்படித்தான் அனேக மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் எதிரிகள், நண்பர்கள், விரோதிகள், துரோகிகள் யார் யாரென்று தெரியாமல் அதோ அந்தக் குப்பிவிளக்கானது தானே எரிந்து தானே பிரகாசித்துத் தானே அழிவது போல், தங்கள் அழிவில் தாங்கள் பலவீனப்பட்டுத் தங்கள் எதிரிகளையே பலப்படுத்துவதோடு மக்களையும் அழிக்க ஏதுவாகிறார்கள்.

வாழ்க்கையின் அவலங்களுக்கெல்லாம் மூலகாரணம் இதுதான்."

நைந்துபோன மனித ஆற்றுமாக்களின் விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்களே பாதை தவறிய செம்மறிப்புருவைகளாக அலைந்தும் அழிந்தும் தங்களைப் பலவீனப்படுத்தி எதிரிகளைப் பலப்படுத்திக்கொள்ளும் போது, வெளியுலகமே தெரியாத இந்தப் பேதைப்பெண் இவற்றையெல்லாம் புரிந்து தன்னை நிலைப்படுத்திக்கொள்வது இலகுவான விஷயமாக அவனுக்குத் தோன்றவில்லை. இருந்தும், இவளுள் ஏற்பட்ட மாற்றம் நல்ல ஒரு கருதுகோளுக்கு அவளை இட்டுச் செல்லும் என்று அவன் உறுதியாக நம்பினான்.

"நான் கூறிய விசயங்கள் உன் மனசுக்குச் சங்கடமாகத் தெரிகின்றனவா?"

இப்படிக் கேட்ட அவன் அவளை நேர் விழி குத்திப் பார்த்தான்.

அவள் முகம் குல்லிட்டது. அவன் சொன்னதன் அர்த்தங்கள் அவளுக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அவன் ஏலவே, ஒரு பெண்ணின் மனநிறைவு, அவள் நிபந்தனையின்றி விரும்புகிற ஓர் ஆடவனோடு இணைவதில்தான் உண்டு என்று சொன்னானே, அதன் அர்த்தத்தையே அவள் புரிந்தாள் விரும்பினாள். அதிலுள்ள புனிதம் அவளுக்கு உவப்பாய் இருந்தது.

இந்த நினைவில் அவள் சுகானுஷியாக இருந்தபோது அதைப் புரிந்துகொண்ட அவன் தொடர்ந்து சொன்னான்.

"வாழ்க்கையின் எதிரிகள் யார் என்றுகேட்டேன் அல்லவா? அந்த எதிரிகளை நீ தெரிந்து கொண்டால்தான் உன் மனஉறுதி வஜ்ஜிரமாகும். ஒருவன் தயவில் மற்றவன் வாழ்க்கை தங்கியிருக்கும் வரை அவன் சுதந்திர ஜீவியல்ல. பலவான் பலவீனர்களை அடிமையாக்கி அந்த அமைப்பில் அவன் சுகங்காணுவதையே வாழ்க்கை என்று பொய்யாகக் கற்பிக்கிறான். இந்த வாழ்க்கை அவனைப்பொறுத்தவரை சொர்க்கமாக இருக்கலாம். ஆனால், பொதுமக்களைப் பொறுத்தமட்டில் இது நரகமாகும். இந்த நரகத்திலிருந்து மனிதர்கள் ஏன் நீயும் நானும் கூட மீளவேணுமாகில் தனிமனித சுதந்திரம் பேசி மனிதகுல வாழ்க்கையைச் சீரழிக்கிற தன்னாதிக்க வர்க்கத்தை எதிர்க்க வேண்டும். அடக்கப்படுகிறவன். அடக்குகிறவனை எதிர்த்தும், ஒடுக்கப்படுகிறவன் ஒடுக்குகிறவனை எதிர்த்தும், சுரண்டப்படுகிறவன் சுரண்டுகிறவனை எதிர்த்தும் போராடும்போது அந்தப்

போராட்டநிலையே ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையாகப்படும்...."

அவன் கூறியவற்றை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தாளே தவிர, அவற்றின் அர்த்தங்கள் புலனாகிறதாக அவள் முகபாவத்தில் தெரியவில்லை.

"என்னமோ எல்லாம் சொல்றீங்க... நல்ல காரியத்தைத் தான் சொல்றீங்கபோலத்தெரியுது. ஆனா, சரியாப் புரியமாட்டேங்குதே... புரிஞ்சுக்கிட்டாலும் என்னால என்ன செஞ்சுடமுடியும்..?"

"ஓ...."

தான் எங்கோ சொல்வதை இங்கே இந்த அபலையான இவளுக்கு அளந்துகொட்டியிருக்கிறான் என்பதை அவளின் குறுக்கீடும் கேள்வியும் அவனுக்கு நினைவூட்டின.

அவன் கூறியவை அவளுக்கு உவப்பாக இருந்தபோதும் அவளால் அவற்றை முற்றாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும், அவன் இந்த வாழ்க்கைபற்றிச் சொன்ன உண்மைகள் அவளுக்கு முற்றிலும் சரி என்றே பட்டன. அவன் கூறிய ஒவ்வொரு வாக்கியத்திலும் புதிய கருத்துக்கள் புதுமையான வியாக்கியானங்கள் செறிந்திருப்பதை அவள் அவதானித்தாள்.... அவன் கூறினானே அத்தகைய சுய இச்சாபூர்வ அதிகாரவர்க்க ஆதிக்கத்தினருடன் அந்த முகாம் விடுதியில் தனித்திருக்கும் இந்த இவனுக்கு, இந்த வாழ்க்கையின் தாற்பரியங்கள் எப்படித் துலங்குகின்றன....?

இவளுக்கு மூளை மசங்கிற்று. வியப்போடு அவனைப் பார்த்தாள். அப்போது அவன் அவளுக்கு ஒரு கௌரவம் மிக்க துரையாகவோ அந்நியநாட்டு ஜாம்பவானாகவோ அல்லாமல் அவளின் ஓர் உடன்பிறப்பான பாசமுள்ள நல்ல சகோதரன் போலவே தெரிந்தான்.

அவள் மனசு க்ஷண வேளைக்குள் இரங்கி ஊனி, கண்களில் நீர் துளும்பிற்று. தன் சகோதரனாகவே வரித்துக் கொண்ட அந்தப் பிறவியை வாஞ்சையோடு நெருங்கி நின்று பார்த்த அவள், குரல் திக் கிட கேரும் தொனியில் சொன்னாள்.

"உண்மையா நீங்க சொன்னதுபோலத்தான் என் வாழ்க்கை போச்சுங்க. ஆனா, நான் மானங்கெட்டவ... மரியாத கெட்டவ. இப்படியாக்கொத்த நானு ஒங்ககூட பேசவே யோக்கியமில்லாதவ..... எனக்கு இந்த நரகச் சீவியம்...."

இதற்குமேல் அவள் குரல் எழ மறுத்தது. கண்டம் அடைப்பட்டுப் போயிற்று. அவள் தனது நெஞ்சின் சுமைகளை ஒரு நொடிக்குள் இறக்கமுடியாமல் தவித்ததை உணர்ந்த போது, அவன் மனம் தாளாமல் அவளை அணைத்துக் கொண்டு அவனே தேற்றினான்.

"சகோதரி, நீ இப்பதான் தூய்மையடைந்திருக்கிறாய். நீ நடந்து கொண்ட விதம் உன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல. அது உன் வாழ்க்கையில் சுமத்தப்பட்டது. பாவகாரியங்களென்றும் அசிங்கமான சாக்கடைத்தனம் என்றும் நீ எதைக் கருதினாயோ அதற்கெல்லாம் நீ காரணமாகவுமிருக்கவில்லை. நீ எதைத் தவறென்று கருதினாயோ அதையெல்லாம் விசனத்துடன் ஒரு சத்திய நெஞ்சோடு அந்நியனான எனக்கு விஸ்வாசத்துடன் வெளிப்படுத்தினாயே அந்தத் துணிச்சல் எந்த வீரனிடத்திலும் பார்க்கமுடியாத ஒன்று. அசிங்கமானது என்று நீ கருதியதை எப்போது வெளிப்படுத்தினாயோ அப்போதே பரிசுத்தமான பெண்ணாகிவிட்டாய். தூய்மையான வெளிப்பாடு பாவங்களை மூழ்கடித்துவிடுகிறது. உண்மையைப்போல் அழகானது எதுவும் இல்லை என்று சொன்னேனே அது புரிகிறதா? இப்போது நீ மானங்கெட்டவளாக இல்லை. உண்மையின் அழகிலே புனிதமாயுள்ள உன் மானமும் பத்தினித்தனமும் உனக்குள் உறைந்திருப்பதை உண்மையாகவே காண்கின்றேன். நீ பாவம் என்று எதனைக் கருதினாயோ அதுகூட உன்னால் உண்டானதல்ல. மக்களை நேசித்த பரிசுத்தமான தூய உள்ளம் கொண்ட சகோதரியே, பாசத்தினால் உன்னையே தியாகம் செய்த உனக்கு ஈடாக இன்னொரு பெண்மணியைக் காண்பேனாகில் நான் பாக்கியசாலியாவேன்...."

இந்தக் கணத்தில் அவள் அவன் தோள்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு ஓ வென்று பெருங்குரலெடுத்து அழுதாள். தேகங் குலுங்கக்குலுங்க அவனை அணைத்துக்கொண்டு அழுதாள்.

"சகோதரி, பலவீனங்களைத் தெரிந்தபின் பலவீனங்களுக்காகப் பிரலாபிப்பது கூடாது. நான் சொன்னது சரியென்று பட்டால் அழுவதை நிறுத்திவிட்டு, உன்னைப்போல் ஆகிவிட்ட பெண்களின்இந்த மக்களின் எதிரிகளை நான் முதலில் கூறினேனே. அந்த எதிரிகளை எதிர்க்கத் துணிவு கொள்.... நீ இழப்பதற்கு இனி ஒன்றுமில்லை. அடைவதற்கு இந்த உலகத்தில் எத்தனையோ உண்டு. நானும் உன் கூடவே..."

"சேர்...... ஆ...... எங்க அண்ணாச்சி...."

அவள் பெருமிதம்பொங்க நீங்கிய துயரத்தின் வேதனையோடு ஓ வென்று கதறி அவன்மேல் சாய்ந்தாள்.


அவன் நெஞ்சு விம்மிக் குமுறியது.

கைலேஞ்சியை எடுத்து அவள் முகத்தைப்பரிவோடு துடைத்தான்.

தன்னுடன் பிறவாத அந்தப் பெண் பிறவியை இந்தச் சாக்கடைச் சகோதரியை அவன் ஆரத் தழுவி முத்தித்தபோது அவளுக்குப் புதிய வீறு உண்டாயிற்று.

குடிசைக்குள்ளே குப்பி விளக்கு மீண்டும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. புதிய சுடராகசெஞ்சுடராக.....

விடிகாலைக்காக வானம் வெளுத்துக் கொண்டிருந்தது......



## நூலாசிரியர் பற்றி



68 வது வயதில் காலடி எடுத்து வைக்கும் இலக்கிய கர்த்தா திரு. அகஸ்தியர் அவர்களின் வாழ்க்கையை பின்னோக்கி பார்க்கும் பொழுது மிக சுவாரசியமாகவும் உணர்ச்சிகரமாகவும் இருப்பதை அறியலாம். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இலக்கிய உலகிற்கு தொண்டாற்றி வரும் திரு. அகஸ்தியர் ஈழம், இந்தியா மற்றும் ஐரோப்பிய - மேற்குலக நாடுகளில் உள்ள சிந்தனையாளர்களின் அறிவுப் பசிக்கு ஈடுகட்டும் முகத்தான் எண்ணற்ற சிறுகதைகள், குட்டிக்கதைகள், குறுநாவல்கள், நாவல்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள், வானொலி நாடகங்கள், நாட்டுக் கூத்து நாடகங்கள் படைத்துள்ளார். மேலும் திரு. அகஸ்தியர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர். 'தாமரை' போன்ற தமிழகத்தின் சிறந்த முற்போக்கு இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகிறார். இவரது சிறந்த படைப்புகள் சிங்களம், மலையாளம் மற்றும் ருஷ்ய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை – 600 098.